கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

221

மார்கழி 2023


01.12.2023

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

02 MAR 2024
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



மலரன்னை
ஏ.எஸ்.சற்குணராசா
பெல்கன் பெர்னான்டோ
ஈழக்கவி
த.மேகராசா
மொழிவரதன்
முருகபூபதி
பேராசிரியர் மா.கருணாநிதி
அ.பௌநந்தி
ஷெல்லிதாசன்
மொழிவரதன்
சோ.தேவராஜா
பொலிகை ஜெயா
த.ஜெயசீலன்
மபாஸ்
கந்தர்மடம் அ.அஜந்தன்
கனிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2023 - மார்கழி (01.12.2023)

# பொருளடக்கம்

## சிறுகதைகள்


மலரன்னை - 15

ஏ.எஸ்.சற்குணராசா - 23

பெல்கன் பெர்னாண்டோ - 33


## கவிதைகள்


த.ஜெயசீலன் - 14

அ.பௌநந்தி - 19

ஷெல்லிதாசன் - 19

மொழிவரதன் - 27

சோ.தேவராஜா - 28

பொலிகை ஜெயா - 28

மபாஸ் - 31

கந்தர்மடம் அ. அஜந்தன் - 32

கனவுமதி - 39



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்




## விமர்சனம்


பேராசிரியர் மா.கருணாநிதி - 27


## உள் ஓவியங்கள்


கனிவுமதி



## அட்டைப்படம்


கனிவுமதி


## கட்டுரைகள்


**யாழ் நூலக எரிப்பும் எம்.ஏ.நுஃமானின் சக்தி வாய்ந்த கவிதையும்**

ஈழக்கவி - 03






**ஈழத்துப் புகலிடத் தமிழ்ப் படைப்பாளர் வரலாறு: குறித்த நூல்கள் வரவும் தேவையும்**

கலாநிதி த. மேகராசா - 20

**பாரதியின் கவி அடிகள் சில வினாக்கள்**

மொழிவரதன் - 26


**நெடும்பயணத்தில் பாதி வழியில் விடைபெற்ற பேராசிரியர் செ. யோகராசா**

முருகபூபதி - 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 மார்கழி இதழ் - 221**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



## ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


# பெறுமானஞ்சேர் வரியும் மக்கள் வாழ்க்கையும்

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து பெறுமானஞ்சேர் வரி(VAT) அதிகரிக்கப்படும் என்ற அரச செய்தி வெளியானதிலிருந்து மக்களிடம் பதற்றநிலை ஒன்று தோன்றியிருப்பது யாவரும் அறிந்ததே. பெறுமானஞ்சேர் வரி அதிகரிப்பினால் பொருள்களின் விலை உயரும் என்ற நிலைப்பாடு மக்களுக்கு அச்சத்தைத் தோற்று வித்துள்ளது. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியின் பின்பு தொழிலிழந்து, சுகம் இழந்து, வாழ்க்கையே தொலைத்து நிற்கும் மக்களின் ஏக்கம் சொல்லும் தரமன்று.

“என்ன செய்யப் போகிறோம்?” என்ற ஏக்கம் பலரது முகங்களிலும் காணப்படக்கூடியதாக உள்ளது. இந்த வரி அதிகரிப்பு வர்த்தகர்களில் பாதிப்பை ஏற்படுத்தாது. வரி அதிகரிப்புக்கு ஏற்ப கூடிய விலையேற்றங் களுடன் அவர்கள் பொருள்களை விற்பனைக்கு விட முடியும். ஆனால், “அன்றாடங் காய்ச்சிகளான” மக்களின் வாழ்வே கேள்விக்குறியாகியுள்ளது. வேலை செய்து களைத்து ஒரு தேநீரைத்தானும் அருந்த முடியாத நிலையிலேயே வறுமைப்பட்டவர்களின் பொருளாதாரநிலை உள்ளது. உண்ணும் உணவுகளில் கூட ஏற்படுத்தப்படும் இந்த விலையேற்றம் மக்களை பட்டினி நிலைக்குத் தான் இட்டுச் செல்லும்.

பொருளாதார நிலையை ஈடு செய்வதற்காக பெறுமானஞ்சேர் வரியை அதிகரிப்பதோ பொருள்களின் விலையேற்றமோ மக்களுக்கு விமோசனமாகாது. அரச தரப்பிலுள்ளவர்கள் பெறுமானஞ்சேர் வரியை அதிகரிப்பதைவிட, மாற்று வழிகளைத் தேட வேண்டும், ஏனோ தானோ என்ற நிலை இங்கு நீங்க வேண்டும். யாரொடு நோகோம், யார்க்கெடுத் துரைப்போம்?

2023 இல் ஜீவநதி மாதத்திற்கு 3 இதழ்களை வெளியிட்டு ஈழத்து இலக்கிய வரலாற்றில் யாரும் செய்யாத சாதனையைப் புரிந்துள்ளது. இப்படியும் செய்யலாம் என்ற ரீதியில் 36 இதழ்களை வெளியிட்டது. 2024 இல் மாதத்திற்கு 2 இதழ்களே(மாதாந்த இதழ், ஆளுமைச் சிறப்பிதழ்) வெளியாகும். ஆண்டு சந்தா 3000.00 என்பதை அறியத் தருகின்றேன். அனேகமானோரின் சந்தா முடிவடைந்துள்ளது. தயவுகூர்ந்து புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**


1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நூலக எரிப்பும் எம்.ஏ.நுஃமானின் சக்திவாய்ந்த கவிதையும்



■ ஈழக்கவி

காலி வீதியில் அவளைக் கண்டேன்
ஐந்து மணிக்குக்
கந்தோர் விட்டதும்
கார்களும்
பஸ்களும்
இரைந்து கலந்த நெரிசலில்
மனிதர் நெளிந்து செல்லும்
காலி வீதியில் அவளைக் கண்டேன்.

சிலும்பிய கூந்தலைத் தடவியவாறு
பஸ் நிறுத்தத்தில்
அவ்வஞ்சி நின்றதைக் கண்டேன்.
அவளைக் கடந்து செல்கையில்
மீண்டும் பார்த்தேன்
`very nice girl' என
மனம் முணுமுணுத்தது.
வழியில் நடந்தேன்.

அவசரகாரியமாகச் செல்கையில்
நினைவும் அதிலே நினைத்து நிற்கையில்
காலி வீதியில் கண்டேன் அவளை

கார்களும்
பஸ்களும்
இரைந்து கலந்த
நெரிசலில்
நானும் நெரிந்து நடந்தேன்

*(07.02.1969)*

எண்பதுகளின் நடுக்கூற்றில் திக்குவல்லை ஸப்வான் வெளிக்கொணர்ந்த "இனிமை" என்ற பத்திரிகையில் இக்கவிதை பற்றி எழுதியிருந்தேன். எம்.ஏ.நுஃமானின் அகத்துறை விடயங்களைப் பேசுகின்ற "அழியா நிழல்கள்"(1982) தொகுப்பை வாசிக்கையில் இந்த கவிதையை திரும்பத் திரும்ப வாசிக்கத் தோற்றிற்று. யதார்த்தம் மேவிய காட்சி மனசுக்குள் திரை ஓவியமாய் பதிந்துப்போயிற்று. ஒரு நிகழ்வைக் காட்சி படுத்துவதன் வழியாக அதை கவிதையாக்கியிருக்கிறார். இத்தகைய அனுபவங்கள் எமக்குள் நிறையவே நிகழ்ந்துள்ளன. கவிதை ஒரு கவித்துவ நிகழ்வு. அந்த கவித்துவ நிகழ்வை வாசகன் வாசிக்கும்போது உணர வில்லையெனில் கவிஞன் தோற்றுவிடுகிறான். "காலி வீதியில்" கவிதையை எழுதிய கவிஞன் தோற்றுவிட வில்லை. அறுபதுகளின் ஈற்றில் ஈழத்து முற்போக்கு இலக்கியத்தில் வரட்டுவாதம் மேலோங்கி இருந்தபோது இத்தகைய அனுபவங்களும் கவிதையாகலாம் என்பதை உணர்த்துவதற்காகவே இக்கவிதையை எம்.ஏ.நுஃமான் எழுதியிருக்கிறார். கவிதை என்பது தீவிரமான குரல் வளையை நெரிக்கும் பிரச்சினைகளையும் அடர்த்தி யான விடயங்களையும் மட்டுமே பேச வேண்டும் என்ற எல்லைகளை உடைத்து மிக எளிமையான விடயங் களைக்கூட கவிதையில் பேச முடியும் என்று நிறுவிக் காட்டியவர் எம்.ஏ.நுஃமான். இயல்பான ஒரு சிறு அனுபவத்தைக்கூட, அதற்கான எளிய மொழியில் கவிதையில் எழுதிக்காட்டியவர்களில் நுஃமான் முன் னோடி. இந்த கவிதைப்பற்றி அக்காலப்பகுதியிலேயே மு.பொன்னம்பலம் தமக்கே உரித்தான பாணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சித்திருக்கிறார். 1972 மார்ச் மல்லிகை (பக்.26) இல் நா.காமராசனின் கவிதைகள் (கறுப்பு மலர்கள் - நூலுக்கான நயம்) பற்றி எழுதுகையில் பின்வருமாறும் பிதற்றியுள்ளார்: "ஆன்மீக சமுதாயப் பார்வைக்கு ஏற்ப எழுதுவதாகக் கூறிக்கொள்ளும் ஜெயகாந்தன், ஆன்மீகத்துக்கே விரோதமான பிற்போக்குச் சிண்டி கேட்டுகளுக்கும் தனிமனிதப் பித்தலாட்டங்களுக்கும் முண்டு கொடுப்பதும் இந்தப் பழைய அடிமன வாசனைகளினதும் தன்முனைப்புகளினதும் அத்துமீறல்களினாலேயே! இலங்கையில் எஸ்.பொன்னுத்துரையின் போக்கு இதற்கு இன்னோர் உதாரணம். இன்னும் மார்க்ஸியவாதிகளாகத் தம்மைப் பாவனை பண்ணிக் கொள்ளும் சில இலங்கைக் கவிஞர்கள்; "காலி வீதியில்" செல்லும் பெண்ணைப்பார்த்து "வெரி நைஸ் கேர்ல்" என்று சென்டிமென்டலாக உருகித்தள்ளுவதும் இப்படி பழைய வாசனைகள் திடீர்த் தாக்குதல் நடத்தும்போது, அவற்றைத் தமது தத்துவத்துக்கேற்ப வழிப்படுத்த முடியாத பேதமையினாலேயே!"

இந்த விமர்சனத்தைப் பற்றியும் "காலி வீதியில்" கவிதைப் பற்றியும் தன்னுடைய "அழியா நிழல்கள்" கவிதை நூலின் முன்னுரையில் எம்.ஏ.நுஃமான் தன்னுடைய கருத்தியலை தெளிவாக தெரியப் படுத்தியுள்ளார். ""தன்னை மார்க்சியவாதி என்று பாவனை பண்ணிக் கொள்பவர் "காலி வீதியில்" செல்லும் பெண்ணைப் பார்த்து "வெரி நைஸ் கேர்ல்" என்று சென்டிமென்டலாக உருகித்தள்ளலாமா? இது பேதமை அல்லவா?" என்ற பொருள்பட இத்தொகுப்பில் உள்ள "காலிவீதியில்" கவிதைபற்றி பத்து வருடங்களுக்கு முன்பே எனது நண்பர் மு.பொன்னம்பலம் எழுதியிருந்தார். (மல்லிகை, மார்ச் 1972). இத்தனைக்கும் அவரும் ஒரு கவிஞர். முதலில் அந்தக் கவிதை சென்டிமென்ட்லாக உருகித்தள்ளுவதல்ல என்பதைக் கூட அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவ்வளவு கவித்துவ உணர்வு அவருக்கு! அறுபதுகளின் பிற்பகுதியிலே ஈழத்து முற்போக்கு இலக்கியத்தில் வரட்டுவாதம் மேலோங்கி இருந்தபோது (அது இன்னும் முற்றாக மறைந்துவிடவில்லை). இத்தகைய சிறு அனுபவங்களும் கவிதையாக எழுதப்படலாம் என்பதைக் காட்டுவதற்காகவே நான் அதை எழுதினேன். சன நெரிசலின் மத்தியில், அவசர காரியமாகச் சென்று கொண்டிருக்கையில் ஒரு பெண்ணின் அழகின் ஈர்ப்பு ஏற்படுத்திய ஒரு கணச் சலனம், அதே அவசரத்தில், கார்களும் பஸ்களும் இரைந்து கலந்த நெரிசலில் அவசரமாகவே கலைந்து போவதைத்தான் அக்கவிதை கூறுகின்றது. புதுமைப் பித்தனின் "இது மிஷின் யுகம்" கதையில் வரும் மனிதயந்திரம் மாதிரி அதிலே "சென்டிமென்டலான உருகல்" எதுவும் இல்லை. ஒரு மார்க்சீயவாதியாக இருப்பதற்கு இத்தகைய அனுபவங்களை எழுதுவதற்கும் என்ன முரண்பாடு? இக்கவிதை மார்க்சீயக்கோட்பாட்டோடு எப்படி மோதிக் கொள்கின்றது? என்பது எனக்கு புரியவில்லை. பிற்காலத்தில் பொன்னம்பலம் என்று ஒரு "பிரபஞ்ச யதார்த்தவாதி" இப்படியெல்லாம் சொல்லுவார் என்று தெரிந்திருந்தால் ஜென்னியைப் பற்றித் தான் எழுதிய அற்புதமான காதல் கவிதைகளையெல்லாம் கார்ல்மார்க்ஸ் தீயிட்டுக் கொளுத்தியிருப்பானோ தெரியாது. அப்படி நடந்திருந்தால் எவ்வளவு நஷ்டமாக இருந்திருக்கும். மார்க்ஸ் என்ற மனிதனின் பிறிதொரு பகுதியை நம்மால் அறிய முடியாமலே போயிருக்கும். நல்ல காலம் அத்தகைய துரதிர்ஷ்டங்கள் நிகழவில்லை." அபாரமான காட்சி அனுபவத்தை அளிக்கும் இக்கவிதையில் எளிமையே அழகியலாக ஒளிர்கிறது. நுஃமான் கவிதைகளில் சிக்கலான மொழிநடை இருந்ததே இல்லை. எந்தச்சொல்லிலும் அவர் சுமையை ஏற்றி வைத்ததில்லை. அதனால் அவரது கவிதை மிகவும் அழகானது... நுட்பமானது.... உயிரோட்டமுள்ளது... உள் எழில் காட்டுவது... இதனால் நமக்குள் எழும் உணர்வலைகள் ஓய்வதில்லை. "காலி வீதியில்" கவிதை இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

*1*

நேற்றைய மாலையும்
இன்றைய காலையும்

நேற்று மாலை
நாங்கள் இங்கிருந்தோம்.

சனங்கள் நிறைந்த யாழ்நகர்த் தெருவில்
வாகன நெரிசலில்
சைக்கிளை நாங்கள் தள்ளிச் சென்றோம்.

பூபால சிங்கம் புத்தகநிலைய
முன்றலில் நின்றோம்.
பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தோம்.

பஸ்நிலையத்தில் மக்கள் நெரிசலைப்
பார்த்தவா றிருந்தோம்.
பலவித முகங்கள்
பலவித நிறங்கள்
வந்தும் சென்றும்
ஏறியும் இறங்கியும்
அகல்வதைக் கண்டோம்.

சந்தைவரையும் நடந்து சென்றோம்.
திருவள்ளுவர் சிலையைக் கடந்து
தபாற்கந்தோர்ச் சந்தியில் ஏறி
பண்ணை வெளியில் காற்று வாங்கினோம்.
"றீகலின்" அருகே
பெட்டிக் கடையில்
தேனீர் அருந்தி - சிகரட் புகைத்தோம்.
ஜாக் லண்டனின்
"வனத்தின் அழைப்பு"
திரைப்படம் பார்த்தோம்.

தலைமுடி கலைந்து பறக்கும் காற்றில்
சைக்கிளில் ஏறி
வீடு திரும்பினோம்.

இன்று காலை
இப்படி விடிந்தது.
நாங்கள் நடந்த நகரத் தெருக்களில்
காக்கி உடையில் துவக்குகள் திரிந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுகள் பொழிந்தன.
உடலைத் துளைத்து
உயிரைக் குடித்தன.

பஸ்நிலையம் மரணித்திருந்தது.
மனித வாடையை நகரம் இழந்தது.
கடைகள் எரிந்து புகைந்துகிடந்தன
குண்டு விழுந்த கட்டடம் போல
பழைய சந்தை இடிந்து கிடந்தது
வீதிகள் தோறும்
டயர்கள் எரிந்து கரிந்து கிடந்தன.

இவ்வாறாக
இன்றைய வாழ்வை
நாங்கள் இழந்தோம்.
இன்றைய மாலையை
நாங்கள் இழந்தோம்.

2

துப்பாக்கி அரக்கரும்
மனிதனின் விதியும்

நாளையக் கனவுகள் இன்று கலைந்தன
நேற்றைய உணர்வுகள் இன்று சிதைந்தன.
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடினர்
ஒருபெரும் நகரம் மரணம் அடைந்தது.

வாழ்க்கையின் முடிவே மரணம் என்போம்
ஆயின் எமக்கோ
மரணமே எமது வாழ்வாய் உள்ளது.

திருவிழாக் காணச் சென்று கொண்டிருக்கையில்
படம்பார்க்கச் செல்லும் பாதிவழியில்
பஸ்நிலையத்தின் வரிசையில் நிற்கையில்
சந்தையில் இருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டு இறக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்.

உத்தரவாதம் அற்ற வாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்கு முறைக்கு அடிபணிவதே
அரசியல் அறமா?

அதை நாம் எதிர்ப்போம்!
அதை நாம் எதிர்ப்போம்!
எங்களின் தேவை:
மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்
மனிதனுக் குரிய கௌரவம்
வாழ்க்கைக் கான உத்தரவாதம்.

யார்இதை எமக்கு மறுத்தல் கூடும்?
மறுப்பவர் யாரும் எம் எதிர் வருக!
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடுக!

போராடுவதே மனிதனின் விதிஎனின்
போராட்டத்தில்
மரணம் அடைவதும் மகத்துவம் உடையதே.

ஈழத்து தமிழ் இலக்கியத்தில் அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் தொடக்க கவிதைகளாக இவ்விரு கவிதைகளே கவனக்குவிப்புக்குள்ளாகின. அரசியல் எதிர்ப்புக் கவிதைகள் நுஃமானிடமிருந்து வேர்கொண்டதாக தோன்றுகிறது. இக்கவிதைகள் அவருடைய முன்னோடித் தன்மையை நிலைநிறுத்துவதாக இருக்கின்றன. வெளிப்பாட்டில் தெளிவு, மொழியைக் கையாள்வதில் கச்சிதத்தன்மை அல்லது சிக்கனம், விவரணையில் ஸ்தூலத்தன்மை போன்ற நல்ல கவிதைக்கான லட்சணங்கள் இவ்விருகவிதைகளிலும் பிரகாசித்திருக்கின்றன. "அலை"(1977 வைகாசி ஆனி; பக். 239 – 241) 9ஆம் இதழில் களம் கண்ட இவ்விரு கவிதைகளின் அருட்டுணர்விலேயே ஈழத்தின் பெரும்பாலான போர்க்கால கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. "1977ல் யாழ்ப்பாணத்தில் அரச காவலர்களால் இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு உடனடி எதிர்வினையாக" எழுதப்பட்டதே இவ்விரு கவிதைகளும் என்கிறார் எம்.ஏ.நுஃமான். இவைதான் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் அரசியல் எதிர்ப்புக் கவிதைகளின் முதல் வருகையாகும். முதலாவது கவிதையின் ஆரம்ப காட்சி யதார்த்த இருப்பை விவரணப்படுத்த, அடுத்த பகுதி வன்முறையின் அவலத்தை படம்பிடித்திருக்கின்றது. இரண்டாவது கவிதை அடக்கு முறைக்கு எதிரான குரலை வெளிப்படுத்துகின்றது. இந்த குரல்தான் பன்முக பரிமாணங்களில் போர்கால கவிதைகளில் ஓங்கி ஒலித்தது. நுஃமான் அவர்கள் மொழிபெயர்த்த "பலஸ்தீன கவிதைகள்" எவ்வாறு போர்க்கால கவிதைகளுக்கு அச்சாணியானதோ, அதுபோல் இது போன்ற நுஃமானின் கவிதைகளும் போராட்டக்கால கவிதைகளுக்கு பெரும் உந்துதலை உண்டாக்கின. இவ்விடத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கருத்தொன்று அவதானத்திற் கொள்ளத்தக்கது. "இலக்கியம் என்பது வரலாற்றின் சிசு என்பது எத்துணை உண்மையோ அத்துணை உண்மை "இலக்கியமும் வரலாற்றை உருவாக்குவது" என்பதாகும். அதாவது இப்புதிய புலப்பதிவுகளுக்குக் காலாகவிருந்த இலக்கியங்கள் யாவை? இளைஞரியக்கம் மீதிருந்த இலக்கியச் செல்வாக்குகள் யாவை? இந்த இளைஞர்கள் யார் யாரை வாசித்தார்கள், யார் யார் எழுதிய எவ்வெவ் விலக்கியங்கள் அவர்களுக்கான தூண்டுதல்கள், உந்துதல்களாக அமைந்தன என்பதும் முக்கியமான ஒரு வினாவாகும். இது சம்பந்தமாக, எனக்குத் தெரிந்த அளவில், போராளிகள் மீது கவிதை ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியது என்றே கருதுகின்றேன். நுஃமான் மொழிபெயர்த்த "பாலஸ்தீனக் கவிதைகள்" தொகுதி முக்கிய செல்வாக்கு ஊற்றுக்களில் ஒன்றாகும்" ("ஈழத்தில் தமிழ் இலக்கியம்;" 2010:42). "உருவம், உள்ளடக்கம் என்பவற்றைப் பொறுத்தவரை கடந்த முப்பது ஆண்டுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் எழுதப்பட்ட மிகப்பெரும்பாலான போர்க் காலக் கவிதைகள், இவ்விரு கவிதைகளின் வெவ்வேறு வகைகள் என்றே சொல்லவேண்டும்; என்கிறார் நுஃமான். இக்கவிதைகளைத் தொடர்ந்து கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாய் ஆயிரக்கணக்கான கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. நூற்றுக்கும் மேலான தொகுதிகள் வெளியாகியுள்ளன. இத்தகைய கவிதை களின் முதல் தொகுதியே "மரணத்துள் வாழ்வோம்" (1985) என்ற கவிநூலாகும்.

எம்.ஏ.நுஃமான் அவர்கள் எழுதிய பெரும்பா லான கவிதைகள் தாக்கவலு நிரம்பியதாக, புதிய தொடக்மொன்றின் ஆரம்பமாக அமையப் பெற்றிருந்தன. பேராசிரியர் கா.சிவத்தம்பியின் சொற் களில் சொன்னால், "முக்கிய செல்வாக்கு ஊற்றாக" அமைந்தன. தன்னுடைய 16 அகவையில் (1960) கவிதை எழுதும் ஆற்றலைப்பெற்ற நுஃமான், பெருந்தொகை யாக கவிதை எழுதிக்குவித்தவரல்ல. கவிதையை சொற் சிற்பமாக கருதியவர். கற்களில் நுட்பமாகச் சிற்பங் களைச் செதுக்குவது போன்று உணர்வுகளையும், அனுபவங்களையும், சிந்தனைகளையும் சொற்களில் நுட்பமாகச் செதுக்கி, ஆற்றல் உள்ள அழகிய கவிதை களைப் படைத்திருக்கிறார். "ஒரு நல்ல கவிதை தன்னை மீண்டும் மீண்டும் செதுக்கிச் செப்பனிடுவதைக் கவிஞனிடம் வேண்டி நிற்கின்றது; என்ற அடிப்படை யிலேயே கவிஞர் எம்.ஏ.நுஃமான் கவிதைகள் எழுதி யிருக்கிறார் (பார்க்க, அணிந்துரை; "நான் எனும் நீ"; 1999: 11,12). பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கணிப்பும் இங்கு கவனிக்கத் தக்கது: "60, 70களில் நவீன கவிதை வளர்ச்சிக்கு வளம் சேர்க்கும் கவிஞர் சிலர் முன்னிலை எய்துகின்றனர். இவர்களுள் நுஃமான், சண்முகம் சிவ லிங்கம், மு.பொன்னம்பலம் ஆகியோர் முக்கியமானவர் கள் ("ஈழத்தில் தமிழ் இலக்கியம்"; 2010:275) இது வரையில் அவரது நான்கு கவிதை தொகுப்புகள் வெளி வந்துள்ளன. அவை, "துப்பாக்கிக்கு மூளை இல்லை" (காலச்சுவடு, 2022), "மழைநாட்கள் வரும்" (அன்னம்; சிவகங்கை, 1983), "அழியா நிழல்கள்" (நர்மதா பதிப்பகம்; சென்னை, 1982) "தாத்தாமாரும் பேரர்களும்" (நெடுங்கவிதைத் தொகுப்பு; வாசகர் சங்கம்; கல்முனை, 1977) என்பனவாகும். இவரின் கவிதைகள், ஆங்கிலம், சிங்களம், கன்னடம் ஆகிய மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளன.

"தாத்தாமாரும் பேரர்களும்" என்ற நெடுங் கவிதை தொகுப்பு, "பற்றிய மதிப்பீடு பலவிதங்களில் முக்கியமானதொன்றாக அமைந்துள்ளது. அது எம்.ஏ.நுஃமான் என்ற கவிஞனொருவனது தனித்துவ ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றது என்பதனால் மட்டு மன்று; நவீன கவிதையின் புதிய போக்குகள், கவியரங் கக் கவிதைகளின் இயல்புகள், தமிழில் புதுக்கவிதையின் தோற்றப்பாடு ஆகியன தொடர்பான ஆரோக்கியமான சில கருத்துக்கள் எழுவதற்கான களமாக அமை கின்றமையினாலுமாகும்; (அலை 6; 1976: 228) என்று அண்மையில் அமரரான (08.12.2023) பேராசிரியர் செ.யோகராசா எழுதியுள்ளார். இத் தொகுப்பில் "எம்.ஏ.நுஃமான் கவிதைகளின் தனிச் சிறப்பினை" இ.முருகையன் தத்துரூபமாக கணித் திருக்கிறார். "அவருடைய கவிதைகளில் மிகவும் தரங் குறைந்தன என எண்ணக்கூடியவைகூட, நமது சராசரி கவிதைகளை விட உயர்ந்தனைவாகவே உள்ளன. அவர் எட்டியுள்ள உச்சங்களோ சில வேளைகளில் யாரும் இதுவரை சென்றடையாத உச்சங்களாக உள்ளன. நுஃமானின் கவிதைகளை சற்று மேலதிக உன்னிப்போடு படித்தல் வேண்டும். மீண்டும் மீண்டும் வாசித்தலும் அவசியமா கலாம். "நவில் தொறும் நூல் நயம்; என்று வள்ளுவர் சொன்னது இதைத்தானே! இந்த வகையில் பாரதியை யும் பாரதிதாசனையும் ஒரு துருவத்தில் வைத்தால் நுஃமானை மறு துருவத்துக்கு அண்மையிலே கொண்டு போக வேண்டிவரும். "மஹாகவியும்" நுஃமானுக்கு கிட்டத்தான் நிற்பார்". நுஃமான் கவிதைகளின் பொருளுருவத்தில் முதன்மை பெற்று நிற்கும் அம்சங்களை இ.முருகையன் பின்வருமாறு எடுத்து விளக்குகின்றார்.

(அ) காட்சி வைப்புகளின் வழியிலே கருத்துக் களை முன்நிறுத்துவது: மன ஓவியங்களை அல்லது எண்ணப் படங்களை - அதாவது அகக்காட்சிகளை - கவிதையின் மூலமாகக் கொள்வது.

(ஆ) நிகழ்ச்சிக் கோவைகளின் வழியிலே கருத்துக்களை முன்னிறுத்துவது: "நிலமென்னும் நல்லாள்" இந்தக் கலையாக்க வெற்றிக்கு உதாரண மாகும்.

(இ) கவிதையில் எடுத்தாளப்படும் கருத்து, கவிதையின் வளர்ச்சியோடியைந்து வளர்ந்து செல்வது. சுட்டியாகி இறுக்கமான கல்லுப்போல அசைவின்றி நிற்பதில்லை நுஃமானின் கவிதைக் கருத்துக்கள். அவை உயிர்ப்பும் அசைவும் கொண்டு வளர்ந்து செல்கின்றன.

(ஈ) கருத்துக்கள் முனைப்புற்று வெளிக்காட்டி நிற்காமல், உள்ளமைந்து கிடத்தல். சான்றோர் (சங்க) இலக்கியத்தில் உள்ளுறை உவமமும் இறைச்சிப் பொருளும் எவ்வாறு நுணுக்கமாகக் கையாளப் பட்டனவோ அதே அளவு நுட்பமாகவும் கலை நயத் துடனும் நுஃமானின் எண்ண வெளிப்பாட்டு முறை உள்ளது.

"துப்பாக்கிக்கு மூளை இல்லை" என்ற தொகுப்பு இன வெறுப்புக்கும் வன்முறை அரசியலுக்கும் போருக்கும் எதிரான கவிதைகளைக் கொண்டிருக்கிறது. இக்கவிதைகள் தற்கால அரசியல் கவிதைகளில் தனித்துவமான இடத்தைப்பெற்றுள்ளன. ஏனெனில் மதம், மொழி, இனம், தேசியம் என எந்தத் தரப்பையும் சாராத குரலை இக்கவிதைகள் சாசுவதமாக்கிக் கொண்டுள்ளன. துப்பாக்கிக்கு எதிரான இக்கவிதைகள், எல்லா விதமான அடக்குமுறைகளுக்கும் எதிரான அமைந்து, அமைதியையும் சமாதானத்தையும் சமத்துவத்தையும் வேண்டி நிற்கின்றன. போரில் வெற்றி பெறுபவர் யாரும் இல்லை - என்பது வரலாறு கற்றுத் தந்த பாடமாகும். எல்லாப் போர்களுக்கும் எதிரான குரல்களே இக்கவிதைகளில் உரத்துக் கேட்கின்றன "நுஃமானின் கவிதைகளில் சிறப்பாக இருப்பவையாக நான் கருதுபவை சோடனையற்ற, செயற்கையாக சேர்க்கப்படாத எதுகை மோனைகள், சாதாரண மக்களால் புரிந்து கொள்ளக்கூடிய உண்மையை உள்ளடக்கிய எளிமையான எழுத்து நடையே" எனக்குறிப்பிடும் "தங்கம்" இத்தொகுப்பு பற்றி பதிவுகள் இணையத்தில் (13 பிப்ரவரி 2023) பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுசெய்கிறார். "பெரும் திரளான மக்களின் உணர்வுகளை வலிமைமிக்க சொற்களால் இணைத்து நாம் கடந்து வந்த வலிமிகுந்த நாட்களுக்கு கவிதைகள் மூலம் உருவம் கொடுத்துள்ளார். அவர் தமிழ்பேராசிரியராக இருந்த போதும் மொழி அகராதியில் சொற்களுக்கு கருத்துக்களைத் தேடும் நிலைமையை வாசகர்களுக்கு ஏற்படுத்தவில்லை என்பதும் நாளாந்த புழக்கத்தில் இருக்கும் சொற்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட கவிதைகளை நாம் இங்கு வாசிக்கலாம் என்பதும் மேலும் இக்கவிதைகளைச் சிறப்பானதாக்குகின்றது. துப்பாக்கிக்கு மூளை இல்லை எனும் இந்த தொகுப்பு எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வரலாற்று ஆவணமாக அமையலாம். 2009 இல் இறுதியுத்தம் நிகழ்ந்தது பற்றி அறிந்திராத 10 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களைக் கொண்ட சமூகமாக இலங்கை மாறிவருகின்ற சூழலில் இவ்வாறான வரலாற்று பதிவுகள் இலங்கையில் வாழும் தமிழ் பேசும் இளம் சந்ததியினர் தமது அடையாளத்தை, இலங்கையில் தமது உரிமத்துவத்தை தேடும் போது அவர்களுக்கு பயனுள்ளதாக வலுவூட்டுவதாக அமையலாம். இந்த தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் கவிதைகள் நாம் கடந்து வந்த வலிசுமந்த வாழ்வை, அக்காலத்தின் நிகழ்வுகளை பதிவு செய்கிறது. இலக்கியம் காலத்தின் சாட்சியாக இருப்பதாக கூறப்படுகிறது. இந்த சாட்சியங்களை மிகவும் கச்சிதமாக கவிதைகளுக்குள் அடக்கியுள்ளார் நுஃமான்".

ஈழத்து கவிதை வரலாற்றில் அதிக அளவில் பேசப்பட்டு, விவாதங்களையும் விசாரணைகளையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டு, அதிக ஏற்பினையும் பலமான எதிர்ப்பினையும் தேடிக்கொண்ட கவிதையே "புத்தரின் படுகொலை" என்ற கவிதையாகும். இக்கவிதையை "ஓர் காத்திரமான கவிதை" என பேராசிரியர் சி.மௌனகுரு குறிப்பிடுகிறார். "ஈழத்துக் கவிதைப் பரப்பில் பெரும் அதிர்வை ஏற்படுத்திய இக்கவிதை, தமிழ்க்கவிதையின் இன்னுமொரு மீட்சி" என்பது முல்லை முஸ்ரிபாவின் அவதானிப்பாகும். "1981இன் நூல் நிலைய எரிப்பு எமது இலக்கிய வெளிப்பாட்டிலே ஒரு பிரிகோடாக அமைந்தது. அதுபற்றி இன்று அமரத்துவம் பெற்றுள்ள இரண்டு படைப்புக்கள் உள்ளன. ஒன்று நுஃமானின் "புத்தரின் படுகொலை" (1981) மற்றது சேரனின் - இரண்டாவது உதயத்தில் வரும் ஒரு சரிதை; என்பது பேராசிரியர் கா.சிவத்தம்பியின் (ஈழத்து தமிழிலக்கியத் தடம்; 2000: 72) கணிப்பாகும். "நுஃமான் மல்லிகை 1970 ஜூன் இதழில் விடிவை நோக்கி என்ற தலைப்பில் எட்டுப்பக்கங்களில் நீண்ட கவிதை எழுதியிருந்தார். ஆலயக்குருக்களுக்கும் ஆலய அறங் காவலர்களான மேல்சாதியினருக்கும் எதிராக ஆலயத்திற்கு வெளியே நின்று தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்தான் அந்தக் கவிதையில் கவித்துவத்துடன் சித்தரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கவிதை - கடவுள் இருந்த இடத்திலும் இருள் மூடியது என முடிந்திருந்தது. பின்னாட்களில் 1980 இற்குப்பிறகு அவர் எழுதிய புத்தரின் படுகொலை கவிதை விடிவை நோக்கி நெடுங் கவிதையிலிருந்து வேறுபட்டிருந்தாலும் சில வரிகளைக் கொண்டிருந்தாரும் இரண்டிலும் நுஃமான் வெளிப் படுத்திய படிமங்கள் குறிப்பிடத்தகுந்தவை - அழுத்த மானவை" என்று "இலக்கியத்திலும் மொழியியலிலும் பன்முக ஆளுமை கொண்டிருக்கும் பேராசிரியர் நுஃமான்" என்ற கட்டுரையில் முருகபூபதி எழுதியிருக்கிறார் ( மணற்கேணி; நவ - .டிச. 2014: 8). பௌத்தஅரச வன்முறையின் கோரமுகத்தை அம்பலப்படுத்துவதோடு மனித உணர்வை உசுப்புவதாக "புத்தரின் படுகொலை; கவிதை அமைந்துள்ளது.

இலங்கை பௌத்த நாடாகவே பதியமாகி இருக்கின்றது. பௌத்தம் அரச மதமாக ஆகியிருக்கின்றது அல்லது ஆக்கப்பட்டிருக்கின்றது. அஹிம்சையே பௌத்தத்தின் ஆப்த உயிர்ப்பாகும். ஏனெனில் கௌதம புத்தரின் மெய்யியல் அஹிம்சையையே பௌர்ணமியாய் பொலிந்திருக்கிறது. அவரின் நடைமுறை செயற்பாடு களிலும் இதனையே அவதானிக்கலாம். பௌத்தம் வன்முறைக்கு எதிரானது. "ஆயினும், அர்த்தமுள்ள வகையில் இந்த வன்முறைக்கு எதிரான பௌத்த குரல் எதுவும் இங்கு எழவில்லை என்பது நம் கவனத்துக் குரியது. உண்மையில் பௌத்தம் அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்டது. சிறுபான்மையினர் பார்வையில் இலங்கையில் பௌத்தம் காட்டிக்கொடுக்கப்பட்டது அல்லது பலியாளாக்கப்பட்டுவிட்டது" என்கிறார் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான். இதற்கு எஸ்.ஜே.தம்பையாவின் "பௌத்தம் காட்டிக்கொடுக்கப்பட்டதா?" என்ற நூலை உதாரணம் காட்டுகின்றார். இந்நூல் இலங்கையில் தடைசெய்யப்பட்டிருந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இதோ
எனது வெளிநடப்புக்கான பிரகடனம்.
நெடுஞ் சாலைகள்தோறும் நிறுவிய எனது
சிலைகளின் முன்னே
மனிதனின் நிணமும் குருதியும் எலும்பும்
படையல் செய்தோரே
இதோ ஏற்றுக்கொள்ளுங்கள்
எனது வெளிநடப்புக்கான பிரகடனம்."

எனத்தொடங்கும் நீண்ட கவிதையை சு.வில்வரத்தினம் "அலை" ஒன்பதாவது ஆண்டு நிறைவிதழில் (பங்குனி - 1995; பக். 733-737) எழுதியிருக்கிறார். இக்கவிதை புத்தரின் படிமத்தை பயன்படுத்தி பௌத்தம் இலங்கையில் பலியாளாக்கப்பட்டமையை அச்சொட்டாக படம் பிடித்துள்ளது. இப்படியான கவிதைகளை சிவசேகரம், ஹம்சத்வனி போன்ற ஈழத்து கவிஞர்கள் எழுதியிருந்த போதிலும், கவிஞர் எம்,ஏ.நுஃமான் எழுதிய "புத்தரின் படுகொலை" என்ற கவிதையே அதிக அவதானிப்புக்கு ஆட்பட்டது. ஈழத்து அரசியல் தளங்களில் அதிகம் எதிரொலித்த கவிதையாகவும், இனத்துவ நோக்கில் விமர்சனத்துக்கும் விகசிப்புக்கும் உள்ளான கவிதையாகவும் ஆகியிருக்கிறது. ஈழத்து கவிதை வரலாற்றில் அதிகமாய் வாசிக்கப்பட்டு, மிக அதிகமாய் களம் கண்ட கவிதை இதுவாகும். " "புத்தரின் படுகொலை" என்ற தலைப்பிலான கவிதை எண்பதுகளிலும் அதையடுத்து வந்த காலப்பகுதியிலும் அடிக்கடி நிகழும் கவிதா நிகழ்வுகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட கவிதைகளில் ஒன்றாக அமைந்திருந்தது" என்று "தங்கம்" என்பவர் "பதிவுகள்" இணையத்தில் எழுதியுள்ளார். 2023 மே -இல் ஏறாவூரில் (இலங்கை) நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் போது, பேராசிரியர் நுஃமான் அவர்களின் படைப்பு கள் குறித்த மதிப்பீட்டு உரையில் பேராசிரியர் அ.மார்க்ஸ் பேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவரிகள் இங்கு எடுத்துரைக்கத்தக்கது. ஏனெனில், அ.மார்க்ஸ் நுஃமான் அவர்களின் சில கருத்தியலோடு முரண்கொண்டு விமர்சனங்களை முன்வைப்பவர். "நான் எழுதத்தொடங்கிய கால கட்டத்தில் பேராசிரியர் கைலாசபதியும், சிவத்தம்பி அவர்களும் எங்களுக்கு பெரிய அளவில் ஆதர்சமாக விளங்கினர். ஜார்ஜ் தாம்சனின் மாணவர்களான இந்த இருவரின் வெளிப்படையான இடதுசாரி மார்க்சிய அணுகல்முறை இதில் கூடுதல் பங்கு வகித்தது. இப்படி யான பின்னணியில்தான் பலஸ்தீனக் கவிஞர்களின் அரசியல் கவிதைகளின் மொழிபெயர்ப்பின் ஊடாக இந்தியச் சூழலில் பலரையும் ஈர்த்தவராக இன்னொரு ஈழப் பேராசிரியரான நுஃமான் எங்களுக்கு அறிமுகம் ஆனார். ஈழப்போர் உச்சக்கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த காலம் அது. அப்போது எங்கள் கண்ணில் பட்ட "புத்தரின் படுகொலை" எனும் அவரது கவிதை எங்களைப் பெரிய அளவில் ஈர்த்த படைப்பாக இருந்தது. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட அந்தக் கவிதை யின் ஊடாக நுஃமான் அவர்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பெரிய அளவில் கவனத்திற்கு உரியவரானார். அதை ஒட்டி "அரசியல் எதிர்ப்புக் கவிதைகள்" என்றொரு கவிதை வடிவமே அவரது பெயரில் தமிழில் அறிமுகமானது. கைலாசபதி, சிவத்தம்பி ஆகி யோருடன் நுஃமானும் எங்களின் கவனத்தை ஈர்த்த ஓர் ஈழப்படைப்பாளி ஆனார்".

இலங்கையில் சங்கிலித்தொடராக எரிந்துக் கொண்டிருந்த இனவெறித் தீ 1981 ஆண்டு தனது உச்சத்தை கொட்டித்தீர்த்தது. இது யாழ்பாணத்தில் முதலாவது மாவட்டசபை தேர்தல் பிரசாரக் காலத்தில் நடந்தேறியது. தேர்தலுக்கு எதிரான தீவிரவாதிகளால் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் தியாகராஜா 1981 மே 24 அன்று கொல்லப்படுகிறார். தேர்தலுக்கு நான்கு நாட்கள் இருக்கையில் மூன்று பொலிசார் இளைஞர் சிலரின் துப்பாக்கி சூட்டில் பலியானார்கள். சொற்ப நேரத்தில் அடாவடித்தனங்கள் அரங்கேற்றப்பட்டன. கடைகள் நாசம் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்தின் முதல் தினசரிப்பத்திரிகையான ஈழநாடு பத்திரிகை அலுவலகம் கொளுத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு சாம்பல் தரையானது. திருள்ளுவர் சிலை, அவ்வையார் சிலை, சோம சுந்தரப்புலவர் சிலை முதலானவை உடைக்கப்பட்டு துவம்சம் செய்யப்பட்டன. அடங்கா நாசாகார கொடூரங் கள் இரவிரவாக கொழுந்துவிட்டெரிந்த அந்த நள்ளிரவில் யாழ் நூலகத்தின் மேற்கு மூலையில் முதல் தீ வைக்கப்பட்டது. ஜூன் முதலாம் திகதி யாழ் நூலகம் முற்றாக தீக்கு இரையானது. 97, 000க்கும் மேற்பட்ட நூல்கள், அரிய ஆவணங்கள், பௌத்த நூல்கள், பாதுகாக்கப்பட்டுவந்த ஓலைச்சுவடிகள், "யாழ்பாண வைபவமாலை"யின் ஒரேயொரு மூலப்பிரதி முதலான அனைத்துமே தீயாகி - தீயே ஆகி தீரா இனவெறி பேயின் தாகத்தை தீர்த்துக்கொண்டிருந்தன. இந்த கொடுமையை பார்த்த யாழ் பல்கலைக்கழக பேராசியர் கா.சிவத்தம்பி, "தமது புலமைச் சொத்தின் ஒட்டுமொத்த அழிப்பின் அடையாளம்" என்றார். யாழ் பல்கலைக் கழகத்தில் கற்ற சிங்கள புலமையாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன இந்த அவலத்தை இப்படி பதிவு செய்கிறார்: "ஆயிரக்கணக்கான வரலாற்று இதிகாசங் களைக் கொண்டவர்கள் தமிழ் மக்கள். மிகவும் கிடைத்ததற்கரிய நூல்களையும் கொண்டிருந்தது யாழ் நூலகம். நாங்கள் எங்களுக்குத் தேவையான நூல்களை பல்கலைக்கழக நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட போதும் அதைவிட மேலதிகமான தேவைகளுக்கு யாழ் பொது நூலகத்தையே நாடினோம். உலகில் எங்கும் கிடைத்திராத பல நூல்கள் ஆவணங்களும் பாது காப்பாக அங்கு இருந்தன. இனி அந்த நூல்கள் எந்த விலை கொடுத்தாலும் நமக்கு கிடைக்கப்போவ தில்லை. புராண வரலாற்று தொல்லியல் சான்றுகளை எரித்து அழித்ததற்கு நிகர் இது."

இக்கொடூரம் நிகழ்கையில் எம்.ஏ.நுஃமான் யாழ் பல்கலைக்கழக விரிவுரையார். "அந்த நூலகத்தை அடிக்கடி பயன்படுத்தியவர்களுள் நானும் ஒருவன். அடுத்த நாள் அந்த அழிவைப் பார்க்கச் சென்றேன். அது சகிக்க முடியாத பேரழிவு. அந்த அழிவுக்கு எனது உடனடியான எதிர்வினைத்தான் "புத்தரின் படுகொலை" என்ற எனது கவிதை. நூலகத்தில் புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்த படிமம்தான் உடனடியாக என் மனதில் தோன்றியது" இது நுஃமான் அவர்களது பதிகை. புத்தர் பெருமானை படுகொலை செய்ததற்கு நிகரானது இந்த எரியூட்டல் நிகழ்வு என்பதை தான் கவிதையின் தலைப்பு உணர்த்துகின்றது. தலைப்பே அந்த பயங்கர அட்ட காசத்தின் அதிர்வை வெளிப்படுத்தி நிற்கிறது. இக்கவிதையில் கவிஞரின் புனைவியல் மனோபாவம் உணர்ச்சி ததும்பிய நாடக உரையாடலாக உயிர்ப்படைந் துள்ளது. தீவிர அர்த்தங்கள், இறுக்கம், பன்முகப் பொருள் நிரம்பிய கவிதையாக இது படைப்பாக்கம் பெற்றுள்ளது.

"அணித்தா" என்ற சிங்கள வார இதழில் காமினி வியங்கொட (தமிழில்: அஜாஸ் முஹம்மத்) எழுதிய கருத் தொன்று இங்கு கவனிக்கத்தக்கது. "இலங்கையின் அரச பாதுகாப்புப் பிரிவினால் யாழ் பொதுநூலகம் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட பேரதிர்ச்சியை இலங்கை யின் புகழ்பெற்ற ஒரு கவிஞரான பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் ஒரு கவிதையாக வடித்திருந்தார். அக் கவிதையின் தலைப்பு "புத்தரின் படுகொலை". ஒருவர் கண்ட கனவாக அக்கவிதை புனையப்பட்டிருந்தது. அக்கவிதையில், பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப் பட்ட புத்தரின் உடல், எரிந்து சாம்பலாகிக் கிடந்த யாழ் பொதுநூலகத்தின் படிவரிசைகளில் அனாதையாகக் கிடக்கிறது. அதைக் கண்ணுற்ற அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் "நமது கொலைப்பட்டியலில் இவரது பெயர் இல்லையே... ஏன் இவரைக் கொன்றீர்கள்?" எனக் கோபத்துடன் கேட்கிறார். அப்போது புத்தரைக் கொன்றொழித்த அதிகாரிகளில் ஒருவர் தன் செயலுக்கான நியாயமாக "இவரைக் கொல்லாமல் நாம் ஓர் ஈயெறும்பைக் கூடக் கொல்ல முடியாது என்பதாலேயே இவரைக் கொல்ல நேர்ந்தது" என்கிறார்.

புத்தரின் தர்மத்தில் தடுக்கப்பட்டுள்ள முதலா வது கடுமையான விடயம் கொலை செய்தலாகும். இல்லறத்தில் இருப்போருக்காக புத்தர் அருளியுள்ள பஞ்சசீலத்தில் முதலாவதாகக் கொலைசெய்வது தடுக்கப்பட்டிருப்பதற்குப் பிரதானமான ஒரு காரணம் இருக்கிறது. கள்ளுண்ணாமையை முதலாவதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாமையை ஐந்தாவதாகவும் வரிசைப்படுத்தி புத்தரபோதிக்காதது ஏன்? அவரது மொத்த தர்மத்தின தும் மூல சாரமே அகிம்சை என்பதால்தான் அவ்வாறு உயிர்கொலையை முதலாவது பாரிய குற்றமாக புத்தர் கருதியிருந்தார். ஒருவர் இன்னொருவர் மீது மனதாலும் வார்த்தையாலும் இம்சிக்கத் தொடங்கினால் அதன் முடிவு உயிர்க்கொலையில்தான் முடிவுறுகிறது. அதனால்தான் அன்புசெலுத்துதல் மற்றும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட புத்த தர்மத்தில் முதன்மை தர்மமாக் கொல்லாமை இடம் பிடித்துள்ளது. புத்தர் பரிநிர்வாணமடைந்த தினத்தன்றே பிக்கு ஒருவர் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தார். ஏனைய பிக்குகள் புத்தரின் இறப்பினால் கவலையில் மூழ்கி யிருந்தபோது அவர்களை ஆசுவாசப்படுத்த நினைத்தார் மகிழ்ச்சியாக இருந்த அந்த பிக்கு. "இனி நமக்கு சட்ட திட்டங்கள் போட எவருமில்லை. நாம் இனி சுதந்திரமாக இருக்கலாம்; என்று அவர்களுக்குச் சொன்னார். எம்.ஏ.நுஃமான் அவர்களின் கவிதையில் சொல்லப் படுவதும் இதுபோன்ற ஒரு செய்திதான். அந்த யாழ் பொதுநூலகத்தைத் தீவைத்துக் கொளுத்தியவர்கள், கொலைகளை செய்வதெனும் கடமையைத் தொடர்ந்து செய்துகொண்டு போவதற்கு முதலாவதாக அவர்கள் புத்தரைத்தான் கொல்ல வேண்டியிருந்தது! மகாநாம தேரர் புத்தரின் போதனைகைளை முற்றுமுழுதாக தலை கீழாக மாற்றி, முற்றிலும் மாறுபட்ட வித்தியாச மான புத்த சமயத்தை நிர்மாணித்ததோடு, அது 15 நூற்றாண்டுகளாக இலங்கையின் அரசியல் வழி நடாத்துவதற்கும் காலாக அமைந்துள்ளது.

"நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிருந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது...!"

யாழ்ப்பாண நூலகம் தீப்பற்ற வைக்கப்பட்டது பற்றி பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் எழுதிய சிறந்த கவிதை அவ்வாறுதான் ஆரம்பிக்கின்றது. புத்தரை அவ்வாறு ஏன் கொன்றனர்? என அமைச்சர்கள் கேட்கும்போது பொலிஸார்,

"இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுட முடியாது போயிற்று"

என்கின்றனர்.

உண்மைதான். ஆயினும் உண்மையில் 6 ஆம் நூற்றாண்டில்தான் புத்தர் கொலை செய்யப்பட்டார். மகாநாம தேரர் புத்த சமயத்தை புதிதாக எழுதியது மட்டுமன்றி, அது யுத்தம் சார்ந்த புத்த சமயத்திற்கு பொருந்தக்கூடிய புதிய யுத்தம்சார் புத்தனையும் உருவாக்கியது. மகாவம்ச புத்தர் கௌதம (சித்தார்த்த) புத்தரில் முற்றிலும் மாறுபட்டவர்" (இணையம்).

பாசிஸ்டுகளின் அல்லது இனவெறி கொண்டலையும் அரசின் ஓர் கொடுமைமிகு அரச பயங்கரவாதம் தீமூட்டி கருக்கிய கோபத்தை "புத்தரின் படுகொலை" கவிதை எவ்வித விட்டுக் கொடுப்புமின்றி உரத்துப் பேசியிருக்கின்றது. அரச காவலர்தான் நூலகத்திற்கு எரியூட்டினர் என்பது முகில் மூடாத உண்மை! "அரச காவலர் அவரைக் கொன்றனர்" என்ற வரி இதனைதான் நிதர்ஷனப்படுத்துகின்றது. அடாவடித் தனங்கள் அமைச்சர்களின் தூண்டலினால் நடந்தேறின என்பது வெள்ளிடைமலை! இது கவிதையில் நுண்மை யாகவும் வீரியமாகவும் வெடித்துள்ளது.

இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுட முடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்.....;
என்றனர் அவர்கள்.

"சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

கவிதையின் இறுதிவரிகள் அந்த கொடுமையின் கொடூரத்தை உயிர்பித்து, அதை நிகழ்தியவரகளுக்கு "நெருப்படி" கொடுத்திருக்கிறது.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது.

யாழ் நூலகம் எரியூட்டப்பட்டமை "சிகாலோக வாத சூத்திரத்தை கொழுத்தி எரித்தமை போன்றது". அங்கு "அஸ்தியானதோ புத்தரின் சடலம்"! "சாம்பரா னது தம்ம பதமும்தான்!" பௌதத்தின் பெயரால் நிகழ்த்தப்பட்ட இந்த அரசியல் கொடூரத்திற்கு எதிரான கோபமே இவ்வாறு கொதித்தெழுந்துள்ளது. அர்த்தச் செழுமைகொண்ட அவல நாடகமாக வியாபித்திருக் கிறது. அரச அடாவடித்தனங்களை நிகழ்த்துவோர் முதலில் புத்தரின் மெய்யியலை அல்லது அறத்தைதான் கொன்றுவிடுகின்றனர். இதுவே இக்கவிதையில் உணர்வின் நெருக்குதலாக கொட்டப்பட்டுள்ளது.. நூலக எரிப்பு நுஃமான் கவிதையில் புத்தரின் படு கொலையாகி காலத்தால் அழியாத அமரத்துவ கவிதை யாயிற்று.

ஞானக்கூத்தன் எழுதிய "கீழ்வெண்மணி" என்ற கவிதையுடன் இக்கவிதையை ஒப்புநோக்கிப் பார்க்க லாம். தமிழகத்தின் கீழ்த்தஞ்சை பகுதிகளில் ஒன்றான கீழ்வெண்மணி கிராமத்தில் 1968.12.25 அன்று நிலப் பிரபுக்களுக்கு எதிராக பல வருடங்களாக நடந்த பேராட்டத்தில், ஏற்றிய செங்கொடியை இறக்க மறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்திற்காக அக்கிராமத்தில் உள்ள குழந்தைகளும் பெண்களுமாகச் சேர்த்து 44 பேர் ஒரு குடிசைக்குள் வைத்து உயிரோடு கொளுத்தப்பட்டனர். இந்த கொடூர படுகொலையை முன்நிறுத்தி ஞானக்கூத்தன் எழுதிய கவிதை இது.

மல்லாந்த மண்ணின் கர்ப்ப
வயிறெனத் தெரிந்த கீற்றுக்
குடிசைகள் சாம்பற் காடாய்ப்
போயின

புகையோடு விடிந்த போதில்
ஊர்க்காரர் திரண்டு வந்தார்

குருவிகள் இவைகள் என்றார்
குழந்தைகள் இவைகள் என்றார்
பெண்களோ இவைகள்? காலி
கன்றுகள் இவைகள் என்றார்

இரவிலே பொசுக்கப்பட்ட
அனைத்துக்கும் அஸ்தி கண்டார்
நாகரிகம் ஒன்று நீங்க

உக்கிரமான சோகத்தையும் தவிப்பையுமே இக்கவிதை வெளிப்படுத்துகின்றது. நிலத்தை பேருயிரா கக் கொண்ட தொடக்க வரிகளில் ஆற்றாமையும் ஒருவித கையறுநிலையும் வேதனையும் துக்கமும் கலந்து தொனிக்கின்றன. "புத்தரின் படுகொலை" கவிதையின் தொடக்க வரிகளில் அந்த எரியூட்டலுக் கான இறைச்சிப்பொருள் படிமத்தையும் (புத்தரின் படுகொலை) அதன் சூத்திரதாரி யார் என்பதையும் (அரசு - அமைச்சர்கள் - பொலிசார்) உரத்துச் சொல்கின்றது. யாழ் நூலக எரிப்பு - புத்தர் பெருமான் சுடப்பட்டு இறந் தார் என அதிர்ச்சிதரும் படிமமாகின்றது. "ஒரு படிமம் என்பது கருத்தாக்கம் அல்ல. அது ஒரு சுடரும் கண்ணிக் கணு அல்லது கொத்து. அது ஒரு சுழல். அதிலிருந்து கருத்தாக்கங்கள் தொடர்ந்து பீறிட்ட வண்ணமிருக் கின்றன" (The image is not an idea. It is a radiant node or cluster, it is a VORTEX from which ideas are constantly rushing) என்ற எஸ்ரா பவுண்டின் கூற்றுக்கு ஒப்ப, புத்தரின் படுகொலை - என்கிற படிமச் சுழலிலிருந்து கருத்தாக்கங்கள் தொடர்ந்து பீறிட்ட வண்ணமிருக்கின்றன. இப்படிமம் வெறும் உருவகத்தை மாத்திரம் சுட்ட வில்லை. அதனுடன் இயைந்த விவரணைகளும் சேர்ந்தே படிமமா கிறது. யதார்த்தத்தின் உறவினையும் உட்கருத்தாய்க் கொண்டிருக்கின்றது. இப்படிமத்தை ஒரு சித்திரம் அல்லது சிற்பம் என்று சொல்வோமானால் அதுவே ஓர் உருவகத்தின் உருவகமாய் மாறி பரந்த பொருளாய் விகசிப்புகொண்டுள்ளது. இக்கவிதையில் தொனிப்பது ஆற்றாமை, கையறுநிலை, வேதனை கலந்த வெறுமை யான தோற்றப்பாடு அல்ல. சிவில் உடை அணிந்த அரச காவலர் புத்தர் பெருமானைக் கொன்றனர் என்று சுட்டு விரல் காட்டி பேசுகிறது. யாழ் நூலகத்தின் படிக் கட்டருகே புத்தரின் சடலம் குருதியில் கிடந்தது என் கிறது கவிதை. "குடிசைகள் சாம்பற் காடாய்ப் போயின" என்று ஞானக்கூத்தனின் கவிதை சொல்லும் கையறு நிலையில் அல்லாமல் கைநீட்டி உசுப்பி உயிர்ப்போடு உரையாடுகின்றது நுஃமானின் கவிதை.

குருவிகள், குழந்தைகள், பெண்கள் என எல்லா வற்றின் எஞ்சிய சாம்பலைக்கொண்டு அடையாளப் படுத்திக் கொண்டார்கள் என்ற குரூரம் "கீழ்வெண்மணி" யின் காட்சியாக விரிகிறது. நுஃமானின் காட்சி யாழ் நூலக எரிப்பின் குரூரத்தை யதார்த்தப்பிரக்ஞையுடன் படம்பிடித்துள்ளது. இரவின் இருளில் அமைச்சர்கள் வந்து, எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை; இவரை ஏன் கொன்றீர் என சினத்துடன் கேட்கின்றனர். தவறுத லாய் புத்தரை கொல்லவில்லை. இவரைச்சுடாமல் ஓர் ஈயினைக் கூடச்சுட முடியவில்லை... பிணத்தை உடனே மறைக்கச் சொல்லி அமைச்சர்கள் மறைந்தனர். ஞானக் கூத்தன் கவிதையில் பதற்றம், கசப்பு, வெறுமை எல்லாம் சேர்ந்த உணர்வு உண்டாகின்றது. ஆனால் நுஃமான் கவிதையில் அந்த கோரத்தை நிகழ்த்தியவர்களின் செயற்பாடுகள் அப்பட்டமாய் கலைபடிமத்துடன் வெளிக் கொணரப்பட்டுள்ளது. ஈழத்து யதார்த்த கவிதைகளின் உச்சம் இக்கவிதை எனலாம்.

"கீழ்வெண்மணி" கவிதையின் ஈற்றடிகளில் ஆழ்ந்த வலியும் பெருமூச்சும் சுடுகாட்டை விட்டு நீங்கும் போது உருவாகும் தனிமையுணர்வும் பெருகிச் செல்வதை உணர முடிகிறது. நுஃமான் கவிதையின் ஈற்றடிகள் அந்த பயங்கரத்தை அதிர்ச்சியூட்டும் ஒரு கொடூர குறும்படமாய் காட்டியுள்ளது. சிவில் உடை யாளர் பிணத்தை இழுத்துச் சென்றனர்; தொண்ணூரா யிரம் புத்தகங்களினால் புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்; சிகாலோக சூத்திரத்தினைக் கொழுத்தி எரித்தனர்; புத்தரின் சடலம் அஸ்தியானது; தம்மபதமும் தான் சாம்பரானது - யாழ் நூலக எரிப்பின் ஆழ்ந்த வலியை வெறும் பெருமூச்சாய் வெளிப்படுத்தாமல் அந்த கொடுமையை வரலாற்று ஆவணமாய் கலைப் படிமமாக்கியுள்ளார் எம்.ஏ.நுஃமான். இரு கவிதை களினதும் பாடுபலமும் உணர்வுநிலையும் ஒன்றுதான். இரண்டிலும் கவித்துவம் நிரம்பப்பெற்றுள்ளன. ஆனால் ஞானக்கூத்தன் கவிதையில் மினுக்கமுறாத கருத்துச் செறிவு, நுஃமான் கவிதையில் பன்முக பரிமாணங்களில் பரிணமித்திருக்கிறது. கவிஞர் நுஃமான் அவர்களின் இத்தகைய கவித்துவ தனித்துவங்களை அறிந்திருந்த தால்தான் மஹாகவி 1968லேயே இப்படி பாடியிருக்கிறார்:

"அரிதே பிறக்கும் தமிழ்ப்பாட்டை
சும்மா இரண்டு சொல்லெடுத்துச்
சொல்லிக்காட்டும் சீராளா, சுடரும்
கவிதையை பிரளயம்போல்
சூழ எழுப்பும் பேராளா,
எம்.ஏ.நுஃமான், தமிழ்செய்யும்
இனிய நண்பா எழுகவே!"

"புத்தரின் படுகொலை" கவிதை முதலில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அறிப்புப் பலகையில் காட்சி படுத்தப்பட்டது. பிறகு "அலை" இதழ் 18இல் (ஆடி - புரட்டாதி 1981: 476) களம் கண்டது. சூட்டோடு சூட்டாக இக்கவிதை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. சிங்கள முற்போக்கு சஞ்சிகையான "விவரண" இக்கவிதையின் சிங்கள மொழிபெயர்ப்பை பிரசுரித்தது. அதன் ஒரு பிரதி கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டது. இதன் பின்னரான நிகழ்வுகளை பேராசிரியர் நுஃமான், "Ethnic Contlict and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Literary Perception Tamil Poetry in Post-cololomed" என்ற ஆங்கில மொழி மூலமான ஆய்வில் விரிவாக விபரித்துள்ளார். "இக்கவிதைக்கான சிங்கள தேசியவாதிகளின் எதிர் வினை முக்கியமானது. இக்கவிதையினால் சினமுற்ற சிங்கள மாணவர் குழு ஒன்று அறிவிப்புப் பலகையை உடைத்து இக்கவிதையை அகற்ற முயன்றதாகவும் அது பின்னர் அகற்றப்பட்டதாகவும் நான் கேள்விப் பட்டேன். அதற்குச் சில மாதங்களுக்குப் பின்னர் பாராளு மன்றத்தில் நேரடி மொழி பெயர்பாளராக இருந்த எனது நண்பர் ஒருவர் சில தீவிரவாத பௌத்தர்கள் பாராளு மன்றத்தில் இக்கவிதைமீது தெய்வநிந்தனைக் குற்றப் பிரேரணை கொண்டுவர முயற்சிப்பதாகவும் என்னைச் சற்றுக் கவனமாக இருக்கும்படியும் எச்சரித்தார். ஆனால், ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் அதில் வெற்றிபெற வில்லை. களனிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய எனக்கு நன்கு அறிமுகமான ஒரு சிங்களப் பேராசிரியர் அவர் ஒரு பௌத்த தீவிரவாதி அல்லர் - ஒருமுறை அவரை அப்பல்கலைக் கழகத்தில் சந்தித்த போது அக்கவிதை பற்றிய தன் அதிருப்தியை என்னிடம் தெரிவித்தார். அவர் அக்கவிதையை வாசித்திருக்க வில்லை. அது பற்றி அவர் கேள்விப்பட்டது மட்டுமே. புத்தரின் படிமத்தை ஒரு பலியாளாகப் பயன்படுத்தியதே அவரது எதிர்ப்புக்குக் காரணமாகும்.

பென்குயின் வெளியிட்ட "இலங்கையில் புதிய எழுத்து" என்ற நூலில் இக்கவிதையையும் சேர்த்துக் கொண்ட சிங்களவரான டி.சி.ஆர்.ஏ.குணதிலக்க இக் கவிதை பற்றிக் குறிப்பிடுகையில் "புத்தரின் படுகொலை என்ற இக்கவிதையில் நுஃமான் இத்தகைய இன வன்செயல்களின்போது மதம் எவ்வாறு பாதிக்கப்படு கின்றது என்பதை வெளிப்படுத்துகிறார்" என்று குறிப் பிட்டார். யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் எரிப்பு ஒரு குறிப்பிட்ட இனக் குழுமத்தை மட்டும் பாதிக்கும் ஒரு குற்றம் என நான் ஒரு போதும் நினைக்கவில்லை. சுயபிரகடனம் செய்துகொண்ட ஒரு பௌத்த அரசின் காவல்படையினரால் மனித விழுமியங்களுக்கும் நாகரீகத்துக்கும் எதிராக இழைக்கப்பட்ட குற்றமாகவே நான் அதைக் கருதினேன். அவர்கள் பௌத்தத்தின் மூலதர்மத்துக்கு எதிராக இழைத்த குற்றம் அது. இந்தக் கவிதை அதைப் பற்றியதுதான். என்னைப் பொறுத்த வரை இன, மத அடையாளங்களுக்கு அப்பால் எல்லா மனிதர்களும் அக்கறை கொள்ள வேண்டிய விடயம் அது. ஆனால், இனத்துவ அடிப்படையில் பிளவுண்ட ஒரு சமூகத்தில் அது வேறுவிதமாக நோக்கப்பட்டது" (பார்க்க, மணற்கேணி; நவ.-டிச. 2014; பக்.54-58).

"மகா காதனய..." என்று பேராசிரியர் கார்லோ ஃபொன்சேகா (Prof. Carlo Fonseka) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்தில் மொழிபெயர்த்த இக்கவிதையை நான் வெளியிட்ட "மிஷ்காத்"(2011) இதழில் பிரசுரித் திருந்தேன் (மிஷ்காத் இதழில் இக்கவிதை மும்மொழி களிலும் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) பிரசுரமானது). லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கார்லோ ஃபொன்சேகா சிங்களவர்கள் மத்தியில் இக்கவிதையை பிரபலப்படுத்தியவர். 1990களின் இறுதியில் ஃபொன்சேகா நுஃமான் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் கடந்த பத்தாண்டுகளில் தான் அத்தகைய ஒரு சக்திவாய்ந்த கவிதையை வாசிக்க வில்லை" என்று குறிப்பிட்டிருந்தார். சிங்களவர் மத்தியில் இக்குற்றத்துக்கு எதிரான பிரக்ஞையைக் கிளறிவிடு வதற்கு அவர் இக்கவிதையை பயன்படுத்தினார். 1990களில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போதும், ஜனாதிபதி தேர்தலின் போதும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான எல்லா அரசியல் பிரச்சார மேடைகளிலும் அவர் இக்கவிதையை பயன்படுத்தினார். ஆனால் முன்னாள் பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்தன எழுதிய "யாழ்ப்பாண நூலக எரிப்பு உட்பட மறக்க முடியாத குறிப்புகள்" (Memorable Tidbits Incloding the Jaffina Library Fire, 2013| P. 390) என்ற நூலை வாசித்தன் எதிரொலியாக ஃபொன்சேகா தன் கருத்தினை மாற்றிக் கொண்டார். எட்வர்ட் குணவர்தன எழுதிய நூலின் வெளியீட்டு நிகழ்வு 2013.01.19 அன்று கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நிகழ்ந்தது. அங்கு சிறப்புப் பேச்சாளராக கலந்துக்கொண்ட ஃபொன்சேகா ஆற்றிய உரை, அவரது மனமாற்ற கருத்தியலை துல்லியமாக காட்டிற்று.

"எட்வர்ட் குணவர்தன யாழ் நூலகத்தை எரித்தது புலிகளே என்கிறார். சிங்களவர்கள் காட்டு மிராண்டிகள் என்று உலகத்திற்கு புனைவதற்காக செய்யப்பட்டது. முழு உலகமும் புலிகளின் பிரசாரத்தை நம்பியது. யாழ் நூலக எரிப்பின் பின்னால் இருந்த அந்த வில்லன் காமினி திசாநாயக்க என்றே நானும் உறுதியாக நம்பியிருந்தேன். எட்வர்ட் குணவர்தனவின் இந்த நூலை வாசித்தறியும் வரை யாழ் நூலகத்தை எரித்தது காமினி திசாநாயக்க என்றே நம்பியிருந்தேன். 1993ஆம் ஆண்டு யாழ் நூலகத்தைப் பற்றிய "morder" என்கிற கவிதையை வாசித்தேன். அது Ceylon Medical Journalஇல் வெளியாகி யிருந்தது. அது பேராதனைப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் எம்.ஏ.நுஃமான் எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்பு. அந்த கவிதை என்னை மிகவும் பாதித்தது. (என்று கூறிவிட்டு அதன் ஆங்கில வடிவத்தை வாசிக்கிறார்)

அக்கவிதையை நான் என் தாய் மொழியான சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தேன். 1994ஆம் ஆண்டு தேர்தலில் பிரதான போட்டியாளர்களான சந்திரிக்காவுக்கும் காமினி திசாநாயக்காவுக்கும் இடை யிலான போட்டியில் நான் சந்திரிகாவை ஆதரித்து பிரச்சாரம் செய்தேன். ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட கூட்டங்களில் எனது உரையின் இறுதியில் இந்தக் கவிதையை சிங்களத்தில் வாசித்து முடித்தேன். (சிங்களத்தில் அதே கவிதையை வாசிக்கிறார்). 23.10.1994 அன்று பேருவளையில் இருந்து எங்கள் பிரச் சாரங்கள் ஆரம்பமாகி பயாகல, வாதுவை, பாணந்துறை, மொரட்டுவை, கிருலப்பனை என தொடர்ந்தது. அங்கெல்லாம் அந்தக் கவிதையை வாசித்தேன். எட்வர்ட் குணவர்தனவின் நூலை வாசித்ததன் பின்னர் எப்பேர்ப்பட்ட குற்றத்தை நான் விளைத்திருக்கிறேன் என்று உணர்ந்துகொண்டேன். இப்போது நான் அதற்கு பிராயச்சித்தமாக திருமதி ஸ்ரீமா திசாநாயக்க, நவீன் திசாநாயக்க ஆகியோரிடம் நான் செய்த தவறுக்காக மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்".

ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியான டான்ஸி செனவிரத்தின, "யாழ்நூலக எரிப்பில் தொடர்புள்ளதாக குற்றச்சாட்டப்பட்டிருந்த ஒரு பொலிஸ் அதிகாரி யொருவரே அந்த சம்பவம் பற்றி அறிக்கை எழுதுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி ஏற்றுக்கொள்ள முடிகிறது" என்று சண்டே டைம்ஸ் பத்திரிகையில் எழுதினார். நூலக எரிப்பினை நேரில் கண்ட சாட்சியான அன்றைய பொலிஸ் அதிகாரி கே.கிருஷ்ணதாசன், எட்வர்ட் குணவர்த்தனவுக்கு எழுதிய பகிரங்க கடிதத்தில் (கடிதம் ஊடகங்களில் பிரசுரமாகியுள்ளது) நடந்த சம்பங்களை பிரக்ஞைபூர்வ மாக விளக்கியுள்ளார். எட்வர்ட் குணவர்த்தனவின் கருத்துக்களை முழுமையாக நிராகரித்துள்ளார். சந்தரேசி சுதுசிங்க எழுதிய "எரித்த இறக்கைகள்" (burnt wings) என்ற நூலில் குற்றவாளிகளாக அரசாங்கத்தை யும் அரசியல் வாதிகளையும் சாடி யுள்ளார் (விரிவான விபரங்களுக்காக பார்க்க, என்.சரவணன்; "யாழ் நூல கம்: பிரபாகரனின் ஆணையில் புலிகளால் எரிக்கப் பட்டதா?"; காக்கைச்சிறகினிலே; ஜூலை 20215; பக். 05-15).

"சியத டிவி" (Siyatha TV) என்ற சிங்கள தொலைக்காட்சி செய்தியில் ஒலி - ஒளிபரப்பாகும் "டெலிவகிய" (Telewakiya) என்ற நிகழ்ச்சி அரச செயற் பாடுகளை மிகக் கடுமையாக விமர்சித்து வருகின்றது. லால் மாவலகே (Lal Mawalage) என்ற ஊடகவியலாளர் இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்றார். "இருக் கின்ற எல்லாவற்றையும் கடுமையாக விமர்சித்தல்" என்ற கார்ல் மார்க்ஸின் மெய்யியல் பாணியில், உடநிகழ்கால அரசியல் போக்குகளை மாவலகே விமர்சனப் பிரக்ஞை யுடன் படம்பிடித்துக்காட்டுகிறார். இவர் முன்பொரு முறை அரச அடாவடிக்காரர்களால் கடுமையாக தாக்கப் பட்டிருக்கிருக்கிறார். தற்போதும் அரசபயங்கரவாதம் அவருக்கெதிராக விசாரணைகளை முடக்கி விட்டுள்ளது. நேர்மையாகவும் நேர்த்தியாகவும் - வரலாற்று ரீதியான கருத்தியல்களோடும் உலகலாவிய விவரணங்கயோடும் ஆய்வு நுட்பங்களோடும் இந்த விமர்சனத்தினை மாவலகே மேற்கொள்கிறார். அண்மைய (28.11.2023; மாலை 6 மணிக்கு) "டெலிவகிய" நிகழ்ச்சியில் யாழ் நூலக எரிப்புக்கு ஜேஆர் அரசே பொறுப்பு என்பதை மிக ஆணித்தரமாக எடுத்துரைத் தமை இங்கு பதியத்தக்கது.

"புத்தரின் படுகொலை" கவிதையை தமிழ் வாசகர்களும், விமர்சகர்களும் நன்கு வரவேற்றனர். "மரணத்துள் வாழ்வோம்" என்ற எதிர்ப்புக் கவிதை தொகுதியில் (1985: 18) சேர்க்கப்பட்டது. பல சஞ்சிகை களிலும் இணைய இதழ்களிலும் மீள்பிரசுரம் கண்டது. தமிழ் புலமையாளர் சுரேஷ் கனகராஜா இக்கவிதையை வித்தியாசமான இனத்துவ கோணத்தில் விமர்சித் திருந்தார். டி.சி.ஆர்.ஏ.குணதிலக்கவின் "இலங்கையில் புதிய எழுத்து" தொகுதி பற்றிய விமர்சனத்தில் கனக ராஜா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "இத்தொகுப்பில் தமிழ்த தேசியவாதமும் அதன் விளைவான சுய நிர்ணயத்துக்கான ஆயுதப் போராட்டமும் பற்றிய படைப்புகள் இடம்பெறவில்லை. இத்தொனிப் பொருளுக்கு அருகில் வரக்கூடியது 1980ல் சிங்கள பாதுகாப்புப் படையினரால் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டதற்கு எதிர்வினையாக ஒரு முஸ்லிம் எழுத்தாளரான நுஃமானின் "புத்தரின் படுகொலை". ஆனால் இந்தக் கவிதை அரச ஆதரவு பெற்ற இத்தகைய தொடர்ச்சியான வன்முறை சைவத் தமிழர் மத்தியில் பிறப்பித்திருந்த உணவுகளை நம்பகத் தன்மையுடன் வெளிப்படுத்தவில்லை (அவ்வாறு வெளிப்படுத்தும் என்றும் எதிர்பார்க்க முடியாது):.

இந்த விசனிக்கத்தக்க விமர்சனதுக்கான நுஃமானின் எதிர்வினை வருமாறு, "கிறிஸ்தவத் தமிழர் களைக் கூட வெளி ஒதுக்கும் கனகராஜாவின் சைவத் தமிழ்த் தேசியவாத நோக்கு சுவாரஸ்சியமானது. இந்த நோக்கு கவிதையின் உள்ளடக்கத்தை அன்றி கவிஞரின் இனத்துவ அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு சைவத் தமிழரைப் போல ஒரு முஸ்லிம் எழுத்தாளரும் ஒரேவகையான பலியாளாக இருக்க முடியும் என்பதை அவரால் சிந்தித்துப் பார்க்க முடிய வில்லை. அவரைப் பொறுத்தவரை உணர்வின் நம்பகத் தன்மை கவிஞரின் இனத்துவத்தில் தங்கியுள்ளது".

சோபா சக்தி நேர்காணலொன்றில் (2011) தெரிவித்த கருத்தொன்று இங்கு எடுத்துரைக்கத்தக்கது: "1986 காலப்பகுதிகளில் விடுதலை அரசியலில் தலைகீழ் மாற்றம் ஏற்படுகின்றது. போராட்டத்துக்குள் சனநாயகம் குறித்த கேள்விகள் எழுகின்றன. விடுதலைப் போராட்டம் அதிகார மையமாகச் சிதைவுற்றபோது அதுவரை ஈழப் போராட்டத்தோடு தம்மை இணைத்திருந்த பல கவிஞர்கள் போராட்டத்திலிருந்து விலகிச் செல்கிறார் கள். அவர்களது பார்வைகளும் மாறுகின்றன. யுத்தத் திற்கு எதிராகவும் அதிகாரத்திற்கு எதிராகவும் அவர் களது குரல்கள் எழுகின்றன. இதுதான் முதன்மையான அரசியலாகவும் இதன்வழியே அரசியல் தத்துவார்த்தக் கேள்விகள் நோக்கியும் அவர்கள் கவிதைகளை எழுதிய வாறே நகர்ந்தார்கள். அழுத்தங்கள் அதிகரித்தபோது சிவரமணி தனது பிரதிகளை எரித்துவிட்டு தற்கொலை செய்தார். செல்வி எழுதியதற்காக வதைக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். யாழ் நூலகம் எரியூட்டப்பட்டதை "புத்தரின் படுகொலை" என எழுதிய நுஃமான் இஸ்லாமியர் என்ற காரணத்தால் யாழ்ப்பாணத்தி லிருந்தே விரட்டப்பட்டார்... இத்தகைய மறுத்தோடி களின் கவிதைகளையே ஈழத்து யுத்தக்காலக் கவிதை களின் ஆன்மா என நான் சொல்வேன்".

"பேரினவாத ஒடுக்கு முறையின் பெருந் தீ யாழ்ப்பாணத்தைத் தீண்டி அழித்த போது அந்தத்தீயின் வெக்கையை வாங்கி உமிழ்ந்த ஒரு குரலாக நுஃமான் இருந்தவர். அவர் எழுதிய "புத்தரின் படுகொலை"யின் காத்திரம் என்றும் நூலகம் திருத்தியமைக்கப்பட்ட பின்னும் - கலாசாரப் படுகொலையின் ஆவணத் தன்மை யும் கலைப் படிமமும் இணைந்த ஒன்றாக நிலைத்திருக் கும் தன்மையுடையது. அப்படியான கவிதைகளைத்தந்த நுஃமான் தனது சமூகத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமை பற்றிப் பேசியிருந்தால் அது ஒன்றும் குறுகிய தேசியவாதத்துக்கு உரிய குரலாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருந்திருக்க நியாயமில்லை. ஆயினும் வடபுலத்து முஸ்லிம் மக்களின் துன்பியலை ஏனோ தனது கவிதைகளின் பாடு பொருளாக்காமல் விட்டு விட்டார். யாழ்ப்பாணத்தி லிருந்து முஸ்லிம் மக்கள் துடைத்து வழித்து வெளி யேற்றப்பட்ட போது நொந்து போன எம் போன்ற படைப்பாளிகளின் நோக்காட்டின் அடையாளமாக முகம் பதித்திருந்தவர் நுஃமானே" என்று முல்லை முஸ்ரிபாவின் "இருத்தலுக்கான அழைப்பு" (2003) கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் கவிஞர் சு.வில்வரத்தினம் தன்னுடைய ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலி வீதியில், நேற்றைய மாலையும் இன்றைய காலையும், துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும், புத்தரின் படுகொலை முதலான கவிதைகளை உடனடி அதிர்வின் எதிரொலியாக எழுதியது போல, "ஒரு பலஸ்தீனக் குரல்" என்ற கவிதையை அண்மையில் (01. 11. 2023) எழுதியிருக்கிறார். இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சொல்கிறார்: "We are fighting with human animals". இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாஹூ நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் சொல்கிறார்: "Israel is fighting with the enemies of civilization ... this war is between forces of civilization and the forces of barbarism'. இக்கவிதை அதற்கு ஒரு எதிர்வினை என்கிறார் கவிஞர் எம்.ஏ. நுஃமான். நெடிய அந்த கவிதையின் ஒரு பகுதியுடன் இந்த நுண்ணய ஆய்வை நிறைவு செய்கின்றேன்.


நீ சொல்கிறாய்
நாங்கள் விலங்குகளுடன்
போரிடுகிறோம்என்று
அவர்களை அப்படித்தான் நடத்தவேண்டும்
என்றுசொல்கிறாய்
நீ அப்படித்தான் சொல்வாய்
உன் மூளை மரத்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது

விலங்குகளை அவமதியாதே
விலங்குகள் மனிதரின் தோழர்கள்
விலங்குகள் இல்லாத உலகில்
நீயும் நானும் வாழமுடியாது
விலங்குகளை அவமதியாதே

விலங்குகள் ஆக்கிரமிப்பதில்லை
விலங்குகள் குண்டுவீசி
மனிதரைக்கொல்வதில்லை
விலங்குகள் ஒரு தேசத்தை அபகரிப்பதில்லை
விலங்குகள் மனிதரைத்
தங்கள் வீடுகளைவிட்டுத் துரத்துவதில்லை
கிராமங்களை நிர்மூலமாக்குவதில்லை
விலங்குகள் மனிதரை அகதிகளாக்குவதில்லை
விலங்குகளை அவமதியாதே

நீ யார் என்று யோசித்துப்பார்
நீ எங்கிருந்து வந்தாய்
எப்படி இங்கு வந்தாய்
என்பதை எண்ணிப்பார்
எப்படி எங்கள் மண்ணில் காலூன்றினாய்
எப்படி எங்களைத் துரத்தினாய்
எப்படி எங்கள் கிராமங்களை அழித்தாய்
எப்படி எங்களைக் கொன்றுகுவித்தாய்
எப்படி எங்களை அகதிகளாக்கினாய்
எப்படி எங்களைச் சிறையில் அடைத்தாய்
என்பதை எண்ணிப்பார்

உன் மனசாட்சி மடிந்துவிட்டது
உன் இதயம் காய்ந்துவிட்டது
உன் மூளை மரத்துவிட்டது
நீ எங்களைப் பயங்கரவாதி என்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்



விலங்குகளை அவமதியாதே

எங்கள் அமைதியைக் குலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் தேன்கூட்டைக் கலைத்தவன்
நீ இல்லையா
எங்கள் ஒலிவமரங்களை அழித்தவன்
நீ இல்லையா
எங்களைத் துப்பாக்கி தூக்கவைத்தவன்
நீ இல்லையா
எங்கள் குழந்தைகளைக் கல்
பொறுக்க வைத்தவன்
நீ இல்லையா
இப்போது நீ எங்களைப் பயங்கரவாதிஎன்கிறாய்
மனித விலங்குகள் என்கிறாய்
விலங்குகளை அவமதியாதே

நீ சொல்கிறாய்
நாங்கள் நாகரீகத்தின்எதிரிகளுடன்
போரிடுகிறோம் என்று
இது நாகரீகசக்திகளுக்கும்
காட்டு மிராண்டிகளுக்கும்
இடையிலான போர் என்று சொல்கிறாய்
இந்த நூற்றாண்டின் பெரியநகைச்சுவை
இல்லையா இது
நான் சொல்லவேண்டியதை நீ சொல்கிறாயா
சாத்தான் வேதம் ஓதுகிறதா
ஹிட்லருக்குப் பிறகு
அவன் பாதையில் செல்லும்
மனிதநாகரீகத்தின் மோசமானஎதிரி
நீ இல்லையா

உலகின் பெரியபயங்கரவாதிகள்
உன்னை ஆதரிக்கிறார்கள்
ஆனால் உன்கண்களைத் திறந்துபார்
நீதி உணர்ச்சிகொண்ட மக்கள்
உலகெங்கும் உனக்கெதிராகக்
கிளர்தெழுகிறார்கள்
நீதி உணர்ச்சிமிக்க உன்சொந்த மக்களே
உனக்கெதிராகக் கிளர்ந்தெழுகிறார்கள்
உங்கள் முடிவு நெருங்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரர்



உண்மைக் கெதிராய் உறுதியாய் நிற்பார்கள்.
நன்மை உலகில் நடக்கத் தடுப்பார்கள்.
தன்முனைப்பு, அகங்காரம்
தானெனும் ஆணவம், மமதை,
கொண்டு குதிப்பார்கள்.
அப் பாவிக் குடிகளினை
“என்செய்வார் இவரென்று”
ஏளனமாய் அடக்கித்
துன்பம் அருள்வார்கள்.
துரோகம் புரிவார்கள்.
நல்லோரை வாட்டுவார்கள்.
ஞானியரைத் தூற்றுவார்கள்.
தொல்லை “மெய் அடியவர்க்குத்” தொடர்ந்து
கொடுப்பார்கள்.
நீதி, அறம், தர்மம், நியாயத்திற் கெதிராக
வாதாடி வெல்வார்கள்.
மனம் உண்மை தனைஉணர்ந்தும்...
தாம் செய்வது தவறு எனத் தாங்கள் நன்கறிந்தும்...
ஆணவம் மறைக்க; அநியாயம் பல
புரிவார்.
தமக்கேற்ற சட்டங்கள் தயார்செய்வார்.
இயற்கை அறச்
சமநீதி தன்னைத் தகர்க்க நிதம்
முயல்வார்.
சரியான வழிசெல்லார்.
செல்வாரைத் பழிப்பார். நன்
நெறிநில்லார்.
தாங்கள் நினைப்ப தெலாம் செய்வார்.
தாழ்ந்து பணியார்.
சத்தியத்தின் பின் போகார்.
ஆம் இந்த வலிய அசகாய சூரர்கள்
மாயவலை விரிப்பவராய்,
வலிமை படைத்தவராய்,
ஜாலங்கள் காட்டி மாய்க்கத் தருணங்கள் பார்ப்பவராய்,
நேர்மை மறந்தவராய்,
நியாயம் தவிர்த்தவராய்,
காழ்ப்பு வக்கிரம் வன்மம் கருத்தினிலே
கொண்டவராய்,
வாய்ச்சொல்லில் வீரருமாய்,
அடாத்தை வளர்ப்பவராய்,
ஏய்த்துப் பிழைப்பவராய்,
இதயங்கள் அற்றவராய்,
ஆசையின்பின் அலைபவராய்,
காமத்தில் அமிழ்பவராய்,
வேசங்கள் மாற்றி விழுமியத்தை விற்பவராய்,
“ஏழேழு லோகமும் எமது” என்று ஆர்ப்பவராய்,
பாவம் பழி பாராப் பாதகராய்,
பிழைவிட்டுச்
சாபங்கள் பெற்றாலும் அதைநினையாத் தன்மையராய்,
கோபம் மிகுந்தவராய்,
கொடுமை நிறைந்தவராய்,
காலம் இயற்கை கடவுட் கஞ்சாதவராய்,
“யார் என்னை என்செய்வார்” என்று
இறுமாந்தவராய்,
சுயநலத்தைக் காக்க
பிறர் நலத்தைக் கெடுப்பவராய்,
மயக்கி மிரட்டி அயல்
வளத்தைச் சுரண்டுவோராய்,
வாழ்வார்...பெருஞ் சூரர்!
வழிவழியே எங்குமென்றும்
சூழ்வார்...அவுணர்!
தோற்று இவர்களாலே
தாழ்வார் எளியோர்!
தருமத்தை மீட்டிந்தச்
சூரர்களை வீழ்த்தத்
தொடர் தவங்கள் இயற்றியே
சோர்வார் நரர், தேவர்!
துடிக்கும் அவர்க்கிரங்கி,
நீதியை நிம்மதியை நேர்வோர்க்கு
நல்குதற்காய்
சூரரை திருத்த நாடி, தூதுசொல்லி,
விஸ்வரூபம்
வானுக்கும் மண்ணுக்கும் காட்டிப்,
பயனின்றி
வேறு வழிதேடி,
விதியால் திருந்தாத
சூரர்களை வீழ்த்தத்
தோன்றிடுவார் கைகளிலே
வேல்பிடித்த வேலர்!
சூரர் வினையறுப்பார் ஆறுமுகர்!

- த.ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மலரன்னை

# நன்னயம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



அன்று பௌர்ணமி கருமேகங்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டிருந்த பூரணை நிலவு இடையிடையே தரிசனம் தந்து கொண்டிருந்தது. பால் நிலவை வெறித்து நோக்கியவாறு பைரவி வாசற்படியில் அமர்ந்திருந்தாள். நிலைகுத்தி நின்ற கண்களுடன் ஒத்துழைக்க மறுத்த அவளது உணர்வுகளோ... இளமைப் பருவத்து வசந்த காலங்களை எண்ணி அசை போடத் தொடங்கியது.

அவள் தனது உயர்தரக் கல்வியை ஒரு கலவன் பாடசாலையில் பயின்று கொண்டிருந்தாள். கல்வியே கருந்தனம் என பயின்று கொண்டிருந்தவளின் மனத்தில் முதன் முதலில் ஒரு சலனத்தை ஏற்படுத்தியவன் அவளுடன் கூடப் பயின்ற மாணவன் சாரங்கன் தான். எடுப்பான தோற்றமும் துடிப்பான சுபாவமும் கல்வியிலும் மேம்பட்டு முன்னிலையில் இருந்த அவனது மனதைக் கவர வேண்டுமென்ற ஆர்வத்துடன் பைரவியின் நண்பிகள் சிலர் போட்டி போட்டனர். ஆனால் பைரவியோ... தனது கலகலப்பான சுபாவத்தினாலும் கடைக்கண் வீச்சினாலும் அவனைத் தன்பால் ஈர்த்துக் கொண்டு விட்டாள்.

கடைக்கண் பார்வையுடன் வேரூன்றிய காதல் கடிதப் பரிமாற்றங்கள் மூலம் முளையாக அரும்பியது. இதனைக் கண்ணுற்ற நண்பிகளுக்கு அவள்மீது பொறாமை தோன்றியது சகஜம் தான். ஆயினும் பைரவியின் மனதில் சாரங்கனை தன் வசப்படுத்திவிட்ட பெருமையே நிலை கொண்டிருந்தது. காதல் மோகத்தில் தன்னை மறந்து ஒரு சிட்டுக்குருவியாக சிறகடித்துப் பறந்த நாட்கள்... அவை அவளது வாழ்க்கையின் பொன் வசந்த காலம்.

அவளையறியாமலே அவளது மேனியில் ஏற்பட்ட கிளுகிளுப்பினால் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவள் தலையைச் சிலிர்த்தவாறு ஒரு தரம் சுற்றுமுற்றும் பார்வையைத் திருப்பினாள். பால் நிலவு பகலென ஒளிபரப்பி பரிணமித்துக் கொண்டிருந்தது.

"ஓ!... எத்தனை இனிமையான நாட்கள்."

மனம் நினைத்துக்கொண்டபோது அவளையறியாமலே அடிவயிற்றிலிருந்து ஒரு ஏக்க பெருமூச்சு புரண்டெழுந்து வந்து வெளியேறி காற்றுடன் கலந்து சங்கமமாகியது.

"என்னுடைய மடமைத்தனத்தினால் அத்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தொலைத்து விட்டேன்"

ஓசையின்றி வாய் புறுபுறுத்துக்கொண்டது. மீண்டும் அந்த வாழ்க்கைப் பயணத்தை இரை மீட்பதற்கு மனம் நழுவத் தொடங்கியது.

காதலின் வேகம் கல்வியைச் சிதறடிக்க அந்த வருடம் பல்கலைக்கழகத் தேர்வுக்கான பரீட்சை எழுதிய பைரவியும் சாரங்கனும் தோல்வியையே சந்திக்க நேரிட்டது. அதையிட்டு பைரவி எள்ளளவும் கவலைப் படவில்லை. இந்த வருடமும் வகுப்பில் சாரங்கனுடன் கூட இருந்து பயில ஒரு சந்தர்ப்பம் அமைந்து விட்டதே என நிம்மதியடைந்தாள். ஆனால்... சாரங்கனுக்கோ வீட்டில் கெடுபிடி அதிகமாயிற்று. பிரத்தியேக வகுப்புகளை ஒழுங்கு பண்ணி அவனது கல்வியை மேம்படுத்த முனைப்புடன் செயற்படத் தொடங்கி விட்டார்கள்.

இதற்கிடையில் பைரவிக்கு ஒரு வெளிநாட்டு சம்மந்தத்தை பெற்றோர் பேசி பொருத்தி விட்டார்கள். மாப்பிள்ளை முகுந்தன் இலண்டனில் கார்க் கொம்பனி ஒன்றுக்கு சொந்தக்காரனாம். நல்ல வசதியுள்ளவனாம். கேட்டதும் பைரவியின் மனதில் சபலம் ஏற்பட்டது. அவனுடைய படத்தைப் பார்த்ததும் அதுவும் ஒரு அழகான படகு போன்ற கருமை நிறம் பொருந்திய காரில் அவன் ஒயிலாகச் சாய்ந்திருந்த கோலம் அவளது மனதை வசீகரிக்க அவள் முன்பின் எதையும் யோசிக்கா மல் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டாள்.

ஒரு வருடத்துக்கு மேலாகக் காதலித்த சாரங்கனின் நினைவுகளை எவ்வாறு அவளால் அத்தனை சுலபமாக தூக்கியெறிய முடிந்ததோ. இதனைத்தான் இளம் பராயத்தில் முளைவிடும் விளையாட்டுத்தனமான போலிக் காதல் என்று சொல்வார்களோ... எல்லாமே புரியாத புதிர்தான். பைரவி முகுந்தன் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. அவள் தனது கணவன் முகுந்தனுடன் வெளிநாட்டில் வாழப்போகும் ஆடம்பர வாழ்க்கையை மட்டும் கனவில் சுமந்து கொண்டு லண்டன் புறப்பட்டாள். சொகுசுடன் கூடிய புதிய உறவு அவளது மனதில் சிறிது காலம் வேரூன்றியிருந்த சாரங்கனது நினைவுகளைக் களைந்து தூக்கி யெறிந்து விட்டது.

ஆனால்... அவளை முழு மனதாய் நேசித்த சாரங்கனால் அவளது நினைவுகளிலிருந்து மீள முடியவில்லை. முற்றாக நிலை குலைந்து போனவனை நண்பர்கள் தேற்றி ஆசுவாசப்படுத்தினார்கள். காலத்தின் கட்டாயம் அவனது மனத்துக்கு வலுவூட்டி கல்வியில் கவனம் செலுத்த வைத்தது. ஒரு உன்னத குறிக் கோளுடன் அவன் தனது வாழ்க்கையை வளம் படுத்த முனைந்தான். விளைவு... அடுத்த வருடம் நடந்த பல்கலைக்கழக புகு முகப்பரீட்சையில் சிறந்த பெறு பேற்றைப் பெற்று அவன் மருத்துவ பீடத்துக்குத் தெரிவானான்.

காலம் கடுகதியில் கடந்து போன பைரவிக்கும் வாழ்க்கையில் சலிப்பு தட்டிவிட்டது. அவள் எதிர்ப் பார்த்து வந்தது போல் முகுந்தன் ஒன்றும் கார்க் கம்பனிக்கு சொந்தக்காரன் அல்ல. கம்பனியில் வேலை செய்யும் ஒரு சாதாரண சிப்பந்தி. அத்துடன் குடிப்பழக் கத்திற்கும் அடிமையாகி இருந்தான். வீட்டு வாடகை, சீவியத்திற்கு அவனது உழைப்பு பற்றாக் குறையை ஏற்படுத்த, அதனை நிவர்த்தி செய்வதற்காக அவளும் வேலைக்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது. மது பான விற்பனை நிலையமொன்றில் வேலை கிடைத்த போது வேண்டா வெறுப்புடன் அதனை ஏற்றுக் கொண்டாள். குழந்தை கவிதாவை சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் விட்டுவிட்டு வேலைக்குப் போகும்போது அவளது மனம் கொந்தளிக்கும். சொந்தங்களின் அரவணைப்புக்காக மனம் ஏங்கித் தவிக்கும். தன்னைத் தானே நொந்து கொள்ளுவாள்.

"சுக போக வாழ்க்கை தேடி சொந்த மண்ணை விட்டு வந்தவளுக்கு இது வேணும்"

ஆயினும் சொந்த மண்ணில் கால் பதிக்க அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டத்தான் செய்தது. முகுந்தனது அக்காவின் மகள் சாருண்யாவிற்கு திருமண மாம். அதில் கட்டாயமாக வந்து கலந்து கொண்டு தன்னையும் பார்த்துக் கொண்டு போகுமாறு முகுந்தனின் அம்மா அன்புக் கட்டளை விட்டிருந்தாள். வேறு வழியின்றி முகுந்தன் குடும்பத்தினருடன் ஊருக்குப் புறப்பட்டான்.

பைரவியின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உற்றார் உறவினருடன் கூடிக் கழித்த அந்த ஒரு மாதமும் அவளது வாழ்க்கைப் பயணத்தில் வசந்தம் வீசிய பொற்காலம் தான். எனினும் அவளது மகிழ்ச்சி நிலைப்பதை அந்த இறைவன் விரும்பவில்லைப் போலும் விடுமுறை முடிந்து பிரியாவிடை பெற்று அவர்கள் புறப்பட்டுப்போன "ஹையேஸ்" வான் ஒரு டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானதில் அவர்களது அன்புச் செல்வம் கவிதா, அந்த இடத்திலேயே உயிர் பிரிந்தாள். பைரவி மட்டும் சிறு காயங்களுடன் தப்பித்துக்கொள்ள, முகுந்தனது உடல்நிலையோ கவலைக்கிடமாகி விட்டது. ஆறு வாரமாக அனுராதபுர வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வந்தவனை ஒருவாறு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். அவனது முள்ளந்தண்டுப்பகுதியில் அமைந்துள்ள நரம்பில் ஏற்பட்ட பாதிப்பு அவனது கால்களைச் செயலற்றுப்போக வைத்து விட்டதாலும் படுத்த படுக்கையிலே அவன் இயங்க வேண்டியதாயிற்று.

நடந்து முடிந்த சம்பவங்களால் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டவள் பைரவி தான். தான் பெற்ற செல்வத்தையும் இழந்து படுத்த படுக்கையாகக் கிடக்கும் கணவனையும் பராமரிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை அவளை கதிகலங்க வைத்தது. அவளது ஆழ்மனதின் மூலையில் ஒரு நமைச்சல் உருவாகி அதுவே பூதாகரமாக வளர்ந்து எரிச்சலை ஏற்படுத்தி இம்சைக் குள்ளாக்கிய போது தான், தான் சாரங்கனுக்கு செய்தது பச்சைத் துரோகம் என்பது புரிய வந்தது. குற்றவுணர்வு அவளைக் குடைந்தெடுத்தபோது குமுறும் நெஞ்சத்தை அவளால் தணிக்க முடியவில்லை. கட்டுக்கடங்காது துடிக்க இதயத்தை கைகளால் பொத்தி பிடித்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். முற்றத்தில் ஏதோ சலசலக்கும் சத்தம் கேட்டு அவளது மனவோட்டம் குழம்பியது. நிமிர்ந்து வானத்தைப் பார்த்தாள்.

முழுமதி கருமுகில்களின் கோரப்பிடிக்குள் சிக்கியிருந்தது. தன்னையறியாமலே அவளது மனம் அந்த நிலவின் நிலையுடன் தன்னை ஒப்பிட்டுக் கொண்டது. நிவர்த்தி இல்லாத இந்த வாழ்க்கையை அவள் வாழ்ந்து தான் ஆக வேண்டும்.

"ம்!..."

அவளது பெருமூச்சில் ஆற்றாமையும் சோகமும் ஒருங்கிணைந்து வெளியேறின.

"பைரவி!"

கணவனது அனுக்கக்குரல் கேட்டு எழுந்து உள்ளே போனாள்.

"சலம் விட வேணும்"

தயக்கத்துடன் வந்தது குரல். இயந்திரமாக இயங்கிய பைரவி, கணவனை படுக்கையிலிருந்து எழுப்பி இருக்க வைத்தாள். அவளது கைகள் விரைவாகச் செயற்பட்டு சலத்தை ஏந்தும் கொள்கலனை எடுத்து வந்து முகுந்தனிடம் நீட்டியது. அவன் நிரப்பிக் கொடுத்ததும் அதை எடுத்துப் போய் துப்பரவு செய்து அதன் இருப்பிடத்தில் வைத்துவிட்டு வந்தவள், மீண்டும் அவனைச் சரித்து படுக்கையில் கிடத்திவிட்டு கால்களைத் தூக்கி வைத்து சீராகப்படுக்க வைத்தாள்.

"பைரவி!..."

அவளது கைகளை பற்றிக் கொண்டவனது நிலையைப் பார்க்க அவளுக்கு பரிதாபமாக இருந்தது. அந்த ஒரு கணத்தில் அவள் தன் துயரங்களை மறந்தாள். முகுந்தன் தொடர்ந்தான்.

"எங்கட கவிக்குட்டி போனப்பிறகு நாங்கள் உயிரோட இருந்திருக்கக்கூடாது"

கேவிய கணவனது தலைமயிரைக் கோதியவளாய் அவனை ஆசுவாசப்படுத்தினாள்.

"நாங்கள் செய்த பாவ புண்ணியங்களின்ரை பலனை நாங்கள் அனுபவிக்கத்தானே வேணும்"

இருவரது மனங்களும் ஏககாலத்தில் துயர வெள்ளத்தில் சங்கமித்தன. ஏதொவொரு நினைவு மின்னலென அவளது மனதில் பளிச்சிட, கணவனின் விரக்தி நிலைக்கு ஒத்தடமிடக்கூடிய வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிவந்தன.

"இஞ்சாருங்கோப்பா! நான் உங்களுக்குசொல்ல வேணுமெண்டு நினைச்ச நான். நல்லதொரு "நியூரோ லொஜிஸ்ற்" எங்கட யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்திருக்கிறாராம். அவரிட்ட உங்களை ஒருக்கா கொண்டு போய்க் காட்டுவம் என்று பார்க்கிறன்"

விரக்தியுடன் சிரித்தவன் வாய் திறந்தான்.

"கையில இருக்கிற மிச்சக் காசையும் வீணாக் கரைச்சுப் போட்டு என்ன செய்யிறது?"

கணவனது வார்த்தைகளைக் குறுக்கறுத்தாள், பைரவி.

"நம்பிக்கை தானப்பா வாழ்க்கை. நம்பி வைத்தியத்தைச் செய்வம். வெற்றி கிடைக்கும்"

"இல்லை பைரவி. நான் உயிரோட இருக்கிற தால... நீர் பொட்டோட உலாவுநீர். தவிர என்னால உமக்கென்ன சுகம். என்னைப் பராமரிக்கிற கஷ்டம்தான் மிஞ்சும்."

கணவனது வாயைத் தனது கையினால் பொத்தினாள், பைரவி.

அத்துடன் அவள் இருந்து விடவில்லை. செயலில் இறங்கியவள், கணவனை அழைத்துப் போய் நரம்பியல் நிபுணரிடம் காட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டாள். பெரும் பிரயத்தனத்திற்குப் பின் அவரைச் சந்திப்பதற்கான அவகாசம் கிடைத்தது. தனது இஷ்ட தெய்வங்களையெல்லாம் மனமுருகி வேண்டிக் கொண்டவளாய், கணவனை குறிப்பிட்ட தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துப் போனாள். ஏற்கெனவே சலித்துப் போயிருந்த முகுந்தனின் இதயத்தில் விரக்தியைத் தவிர வேறெந்த எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. பைரவியின் விருப்பத்துக்கு இசைந்து போகவேண்டிய அவசியம் அவனுடையது. அவ்வளவு தான்.

அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலிருந்து மேலும் சில மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. பெரிய ஐயா முக்கியமான ஒரு சத்திர சிகிச்சையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதால் வர நேரமாகும் என அங்கு கடமையிலிருந்த தாதிமார் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். "எத்தனை நேரமானாலும் டாக்டரைச் சந்திக்காமல் போவதில்லை" பைரவியின் மனம் திட சங்கற்பம் பூண்டு கொண்டது.

திடீரென ஒரு பரபரப்பு. அங்கு காத்திருந்தவர்கள் உஷாரடைந்தனர். நோயாளர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டதும் பெயருக்குரியவர்கள் எழுந்து உள்ளே போனார்கள்.

"முகுந்தன்"

பெயர் கேட்டதும், பைரவி பதட்டமடைந்தவளாய் கணவனது சக்கரநாற்காலியை உருட்டியவாறு உள்ளே நகர முற்பட்டாள். அவளைத்தடுத்த தாதி, அவளது கையிலிருந்த மருத்துவ பதிவேடுகளைத் தானே பொறுப்பேற்றுக் கொண்டவளாய் அறைக்குள் நகர்ந்தாள். அவளது செய்கை பைரவிக்கு கடும் சினத்தை ஏற்படுத்த வாய்க்குள் முணுமுணுத்தாள்.

"நான் டொக்டரோட கதைக்க வேணும்."

"டொக்டர் பேஷன்ற்றோட மட்டும் தான் கதைப்பார்"

சொல்லிக் கொண்டே அவள் கதவை இழுத்து சாத்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள். அவளது இச் செய்கையினால் பைரவியின் இதயத்தில் அனல் மூண்டது. வேறு வழியின்றி காத்திருந்தாள். நீண்ட நேர பரிசோதனையின் பின் முகுந்தன் வெளியே வந்தான். வறண்டிருந்த அவனது முகத்தில் சிறு பிரகாசம் தோன்றுவதை பைரவி அவதானித்தாள். விசாரித்ததில் டாக்டர் கூறிய நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் அவளுக்குத் தென்பையளித்தன.

"மிஸ்டர் முகுந்தன்! ஒரு சத்திரசிகிச்சை மூலம் விலத்தியிருக்கும் நரம்பை சீர் செய்யலாம் என நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புகிறேன். சில சமயங்களில் அது வெற்றியளிக்காம லும் போகலாம். அது உங்களுடைய அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. சத்திர சிகிச்சை செய்து பார்க்கலாமா என்ற முடிவை நீங்களே எடுக்க வேணும்."

வைத்திய நிபுணர் கூறியதாய்க் கூறிய கணவனது வார்த்தைகள் பைரவியின் காதுகளில் தேனாகப் பாய்ந்தது. தெய்வங்கள் மீது பழியைப் போட்டுவிட்டு சத்திர சிகிச்சைக்கு சம்மதம் தெரிவித்தாள். முகுந்தனுக் கும் அது பிடித்திருந்தது.

சத்திர சிகிச்சைக்கு நாள் குறித்து அந்த தனியார் மருத்துவ மணையில் முகுந்தன் சேர்க்கப்பட்டான். பெரிய டாக்டரை சந்திக்க முடியவில்லை. அவருடைய உதவியாளர்களே எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொண்டனர்.

ஒருவாறு நாளும் கைகூடி சத்திரசிகிச்சை உள்ளே நடைபெற்றுக் கொண்டிருந்தது. பைரவி வெளியே காத்திருந்தாள். அவளது மனமோ... இஷ்ட தெய்வங்களுக்கெல்லாம் விதம் விதமான நேர்த்திகளை வைப்பதன் மூலம் விநாடிகளைக் கடத்திக் கொண்டி ருந்தது. ஆமை வேகத்தில் காலம் நகர, பைரவி தியானத் தில் திளைத்திருந்தாள். சத்திரசிகிச்சை முடிந்து டாக்டர்கள், உதவியாளர்கள் சத்திரசிகிச்சைக் கூடத்தை விட்டு வெளியேறியதைக் கூட அவள் கவனிக்கவில்லை.

திடீரென சத்திர சிகிச்சைக்கூடத்தின் கதவுகள் திறக்கப்பட்ட அரவம் கேட்டபோது தான் பைரவி சுயநினைவுக்குத் திரும்பினாள். முகுந்தனை நோயாளர் காவு வண்டியில் வைத்து உருட்டி வந்து அவனுக்கென ஒதுக்கியிருந்த அறைக்குக் கொண்டு வந்தனர். பைரவியும் அவர்களுடன் கூடவே வந்தாள். முகுந்தனைக்கட்டிலில் கிடத்தியதும் அவசர அவசரமாக ஒரு உதவியாளர் அவனது இரத்த அமுத்தத்தைப் பரிசோதிக்க, மற்றுமொருவர் நாடியைக் கணக்கிட... இப்படியாக பலவித பரிசோதனைகளும் நடந்தேறின. பைரவி ஒரு ஓரமாக ஒதுங்கி நின்று கணவனையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தாள்.

மெதுவான அனுக்கத்துடன் கண்களைத் திறந்த முகுந்தனது கால்களில் சிறிது அசைவு தெரிவதை பைரவி அவதானித்தாள். அவளது உச்சந்தலைக்கு மேல் ஆயிரம் வார்ட்ஸ் மின் விளக்கொன்று பளிச்சிடுவதைப் போன்றதோர் உணர்வு அவளை ஆட்கொள்ள... பூரித்த உள்ளத்தை கட்டுக்கோப்புக்குள் அடக்க முடியாதவாறு ஒரு தவிப்பு அவளை ஆட்கொண்டது.

"கடவுள் கண்முளிச்சிட்டார்"

பரந்து விரிந்த இந்தபூவுலகில் அந்தக் கணத்தில் அதியுயர் மகிழ்ச்சியை அனுபவித்தவள் அவளாகத்தான் இருக்கும்.

"ஒப்பரேசன் சக்ஸஸ்"

உதவியாளர்கள் பேசிக்கொண்டார்கள்.

"எங்கட சாரங்கள் ஐயா கைவைச்ச எந்த கேஸூமே பெயிலியர் ஆனதில்லை. அப்பிடியொரு கைராசி அந்த மனுசனுக்கு"

தணிந்த குரலில் மற்றுமொரு உதவியாளர் கிசுகிசுத்தார்.

"ஆனா.... காதலில தோத்துப் போயிட்டார் எண்டு உங்கினைக்க கதைக்கினம். அது தானாம் அவர் கலியாணமே வேண்டாம் எண்டிட்டு ஒண்டிக்கட்டை யாய் இருக்கிறார் எண்டுகேள்வி"

வெட்டிப்பேச்சை விரும்பாத ஒருவர் இடையே குறுக்கறுத்தார்.

"நமக்கேனப்பா உந்த ஆராய்ச்சியெல்லாம் எங்கட வேலை முடிஞ்சுது. வாங்கோ போவம்"

அவர்கள் போய்விட்டார்கள். பைரவிக்கோ இதயத்தில் தீப்பிடித்து விட்டது மாதிரியான ஒரு நெருடலில் துடிதுடித்துப் போனாள். அவளையறி யாமலே அவளது மனம் பலதையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் போட்டு சங்கரனுடைய உண்மை நிலையை அவளுக்குப் புரிய வைத்து போது... அவளது கால்களின் கீழுள்ள நிலம் அவளது பிடியை விட்டு நழுவிப் போவதைப் போன்றதோர் உணர்வில் முற்றாக அவள் திகைத்துப்போக... மெதுவாக அருகிலிருந்த இருக்கை யில் தனது உடம்பைச் சாய்த்துக் கொண்டாள்.

அடுத்து வந்த நாட்களில் அவளது மனப் போராட்டமே விஞ்சியிருந்தது. கணவன் உடல் தேறி வருவதையிட்டு எந்தவித மன உணர்வும் அவளை ஆட் கொள்ளவில்லை. சக்கர நாற்காலியில் வலம் வந்தவன் இன்று கால்களை ஊன்றி எழுந்து நிற்குமளவிற்கு திராணி பெற்றிருக்கிறான் எவ்வளவு பெரிய விடயம்.

தனது கணவனை நடமாட வைத்த சாரங்கன் என்ற அந்த உத்தமனுக்கு மனப்பூர்வமாக நன்றி தெரிவித்து விடைபெற வேண்டுமென பைரவியின் மனச்சாட்சி வலியுறுத்தியது. அவனுக்கு தான் செய்த துரோகம் வந்து இடையிடையே மனதில் தோன்றி அவளை வெட்கித்தலை குனிய வைத்த போதிலும் நன்றியுணர்வே அங்கு மேலோங்கி நின்றது.

அன்று சிகிச்சை முடிந்து முகுந்தன் மருத்துவ மனையை விட்டு வெளியேறப்போகும் நாள். துல்லிய மான ஒரு சத்திரசிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்த திருப்தியுடன் சாரங்கன் தனது நோயாளிக்கான சில அறிவுரைகளைக் கூறி முடித்தபோது, முகுந்தன் தனது கைகளிரண்டையும் கூப்பி தனது நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டான். அருகில் நின்றிருந்த பைரவியோ அவனை ஏறெடுத்துப் பார்க்கவும் திராணி யற்றவளாய் நின்றிருந்தாள். உணர்ச்சிக் கொந்தளிப்புடன் விக்கி விக்கி வந்தன வார்த்தைகள்.

"படுக்கையே கதி என்று கிடந்த என்னுடைய கணவனுக்கு நடக்கும் வல்லமையைக் கொடுத்து வாழ வைத்த தெய்வத்தை நான் என்றும் மறக்கமாட்டேன்"

கண்களில் வழிந்த நீரைத் துடைத்தெறிந்த வளாய் பைரவி திரும்பி நடந்தாள். அவளது கைத்தாங் கலில் நடந்து போய்க்கொண்டிருந்த முகுந்தனை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தான், சாரங்கன்.

"என்ன விநோதமான வாழ்க்கை"

மனதில் தோன்றிய வார்த்தைகள் உருப் பெறாமலே அழிந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணெய் ஊற்றிக் கொண்டே இருக்கிறாய்

ஆங்காங்கே
என் உடல் மீதும்...
உள்ளுமாக...
நீ
ஆழவெட்டிய காயங்களில்
இன்னும்...
ஒட்டிக்கொண்டுதானிருக்கிறது
உனது குரோதத்தின் எச்சசொச்சம்.

உன் முஷ்டியை
முறுக்கிக்கொள்வதில்
குறியாக இருக்கிறாய்...
என்னை நானே
ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக
எடுக்கும்
அத்தனை பிரயத்தனங்களையும்
நிராகரிப்பதிலும்...
நிர்மூலமாக்குவதிலும்...

உனக்கேன்
இத்தனை... காழ்ப்பு?
என்
நினைவுச் சுடரொளியில்...!
நீ செய்த வன்மங்களின்
வடுக்களை
நானே தடவிக்கொள்வதில்...

மழைக்கால இருளொன்றில்
நான் ஏற்றும்
விளக்கின் சுடரை
அணைப்பதில் கச்சைகட்டுகிறது
வம்பத் தென்மேல் பருவக்காற்று!

கூறையில்
அலைந்து தணியாதிருக்க
அணைத்துக்கொள்கிறேன்
இரண்டு கரங்களின் இடையேயும்
சுடரை...!
கூறையிலிருந்தே...
வடிகட்டி வடிகட்டி
உறிஞ்சிக்கொள்கிறது
உயிர்வாயுவை விளக்கு!
சுடர்ந்தபடி...
நிராகரிப்பின் இருளிலிருந்து
நீள்கிறது...
இருப்பை
நிலைநாட்ட வேண்டிய
நிர்ப்பந்தத்தின் விளக்கு!

- அ.பௌநந்தி



## சத்தியமா நம்பு....!

எரிச்சல் பொறாமை
தலைக்கனம் எதையுமே
என்னிடம் காணமாட்டாய்.
அப்படியெல்லாம் நான் உன்மேலோ
எவர்மேலோ கொள்வதற்கு
நானென்ன அவ்வளவு முட்டாளா
சுயநலவாதியா?

இருந்தும்,
அந்தச் சின்னப் பயலுக்கு
கொஞ்ச நாளா கொம்பு முளைச்சு ஆடுகிறான்.

கதையாம், கட்டுரையாம்
கவிதையாம், விமர்சனமாம் என்று
வித்தை காட்டுகிறான்.

என்னட்டை "அ" படிச்சவன்
என்னையல்லே மிஞ்சப்பாக்கிறான்.
முந்தியெல்லாம் எதுக்கெடுத்தாலும்
என்னட்டை வந்து கதைச்சு போறவன்
இப்ப எட்டியும் பாக்கிறானில்லை.
அவ்வளவு "பிசி" யாம் அவருக்கு.

அவனைக் கண்டா
என்னை வந்து காணச்சொல்லு
அவனை நேர வைச்சு
நாலு கிழி கிழிக்கிறதோடை
பேனையை முறிச்செறிஞ்சிட்டு
ஓடச்செய்யிறன் பார்.

எரிச்சல் பொறாமை
தலைக்கனம்....
சத்தியமாச் சொல்லுறன்
எதுவுமே இம்மியளவும்
என்னிடத்தில் கிடையவே கிடையாது
ஓ......!


- ஷெல்லிதாசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி த.மேகராசா

# ஈழத்துப் புகலிடத் தமிழ்ப் படைப்பாளர் வரலாறு குறித்த நூல்களின் வரவும் தேவையும்




ஈழத்தில் நீண்ட காலமாக இடம்பெற்ற இனமுரண்பாட்டுச் சூழல் பெருமளவிலான ஈழத்துத் தமிழர்கள் வெவ்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லக் காரணமாக அமைந்தது. புலம்பெயர்ந்து சென்றவர்களில் ஒரு பகுதியினர் தாம் எதிர்கொண்ட வாழ்வியல் நிலை குறித்த சவால்களையும், பெற்றுக் கொண்ட புதிய அனுபவங்களையும், தாயக ஏக்கங்களையும் இலக்கியங் களாகப் படைத்தனர். படைப்பாக்கச் செயற்பாடுகளுக்கு சஞ்சிகைகளைப் பிரதான களமாகப் பயன்படுத்தினர். பெரும்பாலானவர்கள் தம் கருத்தியல் களின் அடிப்படையில் சஞ்சிகைகளை முன்னிறுத்தி வெவ்வேறு அணிகளாகச் செயற்பட்டனர். இதனால் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் களமும் பொருண்மை யும் விரிவுபெற்றன. இப் பின்புலத்தில் "ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியம்" என்ற புலம் வளர்ச்சிபெற்றது. பின்னாளில் அது பற்றிய ஆய்வுகளும் கவனம் பெற்றன. இன்று "ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியம்" நாற்பது வருடங்களைக் கடந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான நூல்கள் வெளி வந்துள்ளன. நூற்றுக்கணக்கான படைப்பாளர்கள் தொடர்ந்தும் எழுதிக்கொண்டி ருக்கிறார்கள். அவர்களது வெளியீடுகள் புகலிட தேசங்களில் மட்டுமன்றி ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. சிறந்த படைப்பாளர்கள் அறியப்பட்டிருக்கிறார்கள். புகலிட தேசங்களில் இன்று தமிழ் மொழியும் தமிழின அடையாளங்களும் செல்வாக்கிழந்தும் மறைந்து கொண்டும் வரும் நிலையில் புகலிடப் படைப்பாளர் களின் படைப்பாக்க வரலாறு முறையாக எழுதப்பட வேண்டிய தேவையுள்ளது. இந்நிலையில் ஈழத்துப் புகலிடத் தமிழ் எழுத்தாளர்களின் தகவல்கள் அடங்கிய சுய வரலாற்று ஆவண நூல்களின் வரவு முக்கியமான தாகும்.

ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளுள் ஜேர்மனி முக்கியமானதாகும். 1980களில் இனமுரண்பாடு காரணமாக பெருமளவிலான தமிழர்கள் முதன்முறையாக புலம்பெயரத் தொடங்கிய சூழலில் ஜேர்மனியே அத்தகைய மக்களை உள்வாங்கிய முதன்மையான நாடாக விளங்கியது. மட்டுமன்றி இக்காலப்பகுதியில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளுக்குச் செல்வதற்குரிய ஒரு நுழைவாயிலாகவும் ஜேர்மனியே திகழ்ந்தது. தேசத்தின் மீதும் மொழியின் மீதும் பற்றுக்கொண்ட அரசியல் உணர்வுமிக்க இளைஞர்களே அதிகமாக இக்காலப் பகுதியில் புலம்பெயர்ந்துசென்றனர். இவர்கள் தமது கருத்தியல்களைச் செயல்நிலைப்படுத்துவதற்கு கலை, இலக்கியத் துறைகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஆர்வத்துடன் செயற்பட்டனர். அரசியல் தஞ்சக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளும் வரை முகாம்களில் நீண்ட காலம் காத்துக்கிடந்தமை, நேரம் அவகாச மளித்தமை, பலரும் சந்தித்துப் பேசவும் செயற்படவும் அகதி முகாம் இடமளித்தமை என்று பல காரணங்கள் இவர்களுக்கு வாய்ப்பாக அமைந்தன. இதனால் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்கள் என்ற நோக்கில் பல்வேறு முதன் முயற்சிகள் ஜேர்மனியில் நிகழ்ந்தன. ஜேர்மனியிலிருந்து "நமது குரல்"(1986) என்ற பெண் சஞ்சிகையும் பெண்கள் ஓர் அமைப்பு ரீதியாக இணைந்து செயற்பட்டதன் அடிப்படையில் பெண்கள் சந்திப்பு மலரும்(1991) கலை இலக்கியம் சார்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எண்ணம்”(1982) என்ற சஞ்சிகையும் முதன்முயற்சி களாக வெளிவந்துள்ளன. ஈழத்தின் ஆரம்ப காலப் புகலிடத் தமிழ் நாவல்கள் என்று குறிப்பிடப்படும் சிறப்புக்குரியவையாக ஜேர்மனியில் வாழும் பார்த்திபன், பொ.கருணாகரமூர்த்தி ஆகியோரின் நாவல்களே அமைகின்றன. ஜேர்மனியிலிருந்தே அதிகமான புகலிடத் தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இவ்வாறு தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளுள் முதன்மை நாடாக விளங்கும் ஜேர்மனியே கலை, இலக்கிய செயற்பாடுகள் பலவற்றுக்கும் முன்னோடி யாக இருப்பதைக் காணலாம். இங்கிருந்தே முதன்முறையாக தமிழ்ப் படைப்பாளர்களின் வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் அமைந்த “ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்” (2006), “படைப்பாளர்கள்” (2022) என்ற இரு முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு நூலும் வெளிவருகின்ற காலச் சூழ்நிலை அந்நூலின் சமூகத் தேவையை குறிப்பிடத் தக்க அளவேனும் நிறைவு செய்வதாக அமைய வேண்டும். அச்சியந்திரங்கள் புழக்கத்திற்கு வந்த சூழ்நிலையில் பழந்தமிழ் இலக்கியங்களும் அவற்றை இயற்றிய புலவர்களும் பற்றிய செய்திகளைப் பரவலாக அறியமுடியாத நிலையே காணப்பட்டது. ஏடுகள் மூலம் இலக்கியப் பரிமாற்றம் நடைபெற்றமை இதற்கான முக்கிய காரணமாகும். இந்நிலையில் பதிப்புத் துறை, பத்திரிகைத் துறை, ஆய்வு முயற்சிகள் என்பன வளர்ச்சி பெறத் தொடங்கி இலக்கியத்திற்கான தளம் விரிவடையத் தொடங்கிய சூழ்நிலையில் தமிழ்ப் புலவர்கள் பற்றித் தேடி அறியவேண்டியிருந்தது. இப்பின் புலத்தில் சைமன் காசிச்செட்டி எழுதிய “தமிழ் புளூராக்” என்ற தமிழ்ப் புலவர்களின் வரலாற்றைக் கூறும் நூலும் அதனைத் தொடர்ந்து ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் “பாவலர் சரித்திர தீபகம்“ என்ற நூலும் முக்கிய வரவாக அமைந்தன. இந்நூல்கள் குறிப்பிட்ட புலவர்கள் பற்றிய மேலதிக தகவல்களைத் தேடி அறியவும் ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ளவும் வழிகாட்டிகளாக அமைந்தன. இந்நூல்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியத் தின் நீட்சியை அறிந்துகொள்ளவும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஒழுங்குபடுத்தவும் உதவின. அத்தகைய பங்களிப்பினையே ஜேர்மனியிலிருந்து வெளிவந்துள்ள தமிழ்ப் படைப்பாளர்கள் குறித்த இவ்விரு நூல்களும் வழங்குகின்றன.

2006 ஆம் ஆண்டு ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் “ஜேர்மனியில் தடம்பதித்த தமிழர்கள்” என்றொரு நூலை வெளியிட்டது. இதனை வ.சிவராஜா, க.அருந்தவராஜா, பொ.சிறிஜீவன், அ.புவனேந்திரன் ஆகியோர் தொகுத்து நூலாக்கியுள்ளனர். இந்நூலில் இருபத்து நான்கு பேரின் விபரங்கள் உள்ளன. இது தமிழ் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், கல்வியலாளர்கள் ஆகியோரின் விபரத்திரட்டாக வுள்ளது. புகலிட கலை இலக்கிய செயற்பாட்டுப் போக்கில் இதுவொரு முதன் முயற்சியாகும். இந்நூல் குறித்து தொகுப்பாசிரியர்கள் கூறுவது:

ஜேர்மனியில் வாழும் பல்துறைத் தமிழர்களின் விபரங்களை ஒரு ஆவணப்பதிவாக்கியுள்ளமையே இந்நூலாகும். இது ஒரு முழுமையான ஆவணப்பதி வல்ல. ஆவணப்பதிவின் ஒரு பகுதியே (2006:22) குறைந்தளவானோரின் தகவல்களைக் கூறுவதாக அமைந்தபோதிலும் வெவ்வேறு இடங்களில் சிதறி வாழுகின்ற ஜேர்மனியச் சூழலில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி பாராட்டப்படவேண்டியதாகும்.

நூற்றுக்கு மேற்பட்டோரின் விபரங்களை விரிவாகக் குறிப்பிடுவதோடு பலரும் அறியாத பல தகவல்களையும் தாங்கி வெளிவந்த நூல் என்ற வகையில் “படைப்பாளர்கள்” நூல் முக்கியம் பெறு கின்றது. பல்வேறு இலக்கிய முயற்சிகளுக்கு அடிப்படை யாக அமைந்த ஜேர்மனி நாட்டிலிருந்தே புலம்பெயர்ந்த தமிழ் படைப்பாளர்கள், கலை, இலக்கியச் செயற் பாட்டாளர்கள் பலர் பற்றி விரிவான குறிப்புகளோடு எழுதப்பெற்ற “படைப்பாளர்கள்” என்ற இந்த நூலும் வெளிவந்துள்ளமையைக் காணலாம்.

ஜேர்மனியில் வாழுகின்ற தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய “படைப்பாளர்கள்” என்ற இந்நூல் ஜேர்மனியில் 2022 இல் வெளியீடு செய்யப் பட்டது. இந்நூலினை சு.பாக்கியநாதன், தமிழ்மணி சி.இராஜகருணா ஆகிய இருவரும் இணைந்து தொகுத்துள்ளனர். 1980 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியில் ஜேர்மனியில் வாழ்ந்த, வாழும் 100 எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. எழுத்தளர்கள், அவர்கள் வெளியிட்ட நூல்கள் அனைத்தும் வண்ணப் புகைப்படங்களோடு மிகவும் நேர்த்தியாக இந்நூலில் வெளிவந்துள்ளன. இந்நூல் முக்கியமானதொரு காலகட்டத்தில் வெளிவந்துள்ள தெனலாம். குறிப்பாக ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களின் நான்காவது தலைமுறையினர் தமிழ் மொழியுடனும் தமிழ் இலக்கியத்துடனும் ஈழத்துடனும் தொடர்பற்று, தாம் வாழும் ஜேர்மனிய நாட்டுடன் பிணைப்புற்று வாழும் இன்றைய காலத்தில் ஏலவே இலக்கியப் பங்களிப்புச் செய்தோர் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தவேண்டியது கட்டாயமான தாகும். இல்லையெனில் தமிழ் எழுத்தாளர்கள் ஜேர்மனிய நாட்டில் செய்த அர்ப்பணிப்பு மிக்க கலை, இலக்கிய செயற்பாடுகள் மறைந்துபோக வாய்ப்புள்ளது. இந்நிலையில் ஜேர்மனியில் இலக்கியப் பங்களிப்புச் செய்த தமிழ் எழுத்தாளர்களின் விபரங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளமை முக்கியமான ஆவணப்படுத்தலாகும்.

புகலிடத் தமிழ் எழுத்தாளர்களுள் பொ.கருணா கரமூர்த்தி மிகவும் முக்கியமானவர். சிறுகதை, நாவல், கவிதை, புனைகதை சாரா இலக்கியம், புதிய பரிசோதனை முயற்சிகள் என்று பல்வேறு துறை சார்ந்த பல நூல்களை எழுதியுள்ளார். அத்தோடு ஆரம்ப காலப் புலம்பெயர்வாளராகவும் விளங்குகின்றார். இவரது விபரங்களுடனேயே நூலில் முதலாவது படைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரம் தொடங்குகின்றது. அதேபோன்றே தவிர்க்க முடியாத ஆளுமைகளின் விபரங்களை உள்ளடக்கிய வகையில் இது அமைந்துள்ளது. முதிர்நிலை எழுத்தாளர்கள் மட்டுமன்றி இளநிலை எழுத்தாளர் களும் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவ்விதத்தி லும் திருப்திளிக்கின்ற தொகுப்பாக இதுவுள்ளது.

முன்னர் அறிந்திருந்த சில தகவல்களை மறு பரிசீலனைக்கு உள்ளாக்குகின்ற அல்லது தெளிவற்ற தாகக் காணப்பட்ட விடயங்களுக்கு தெளிவைத் தரு கின்ற பல தகவல்களை இந்நூலில் காண முடிகின்றது. ஏலவே குறிப்பிட்டதுபோன்று ஜேர்மனியிலிருந்து அதிகமான சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இவை பற்றி தெளிவற்ற தன்மை காணப்பட்டது. அத்தோடு தூண்டில் என்ற சஞ்சிகையே ஜேர்மனியிலிருந்து மட்டுமன்றி புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வெளிவந்த முதலாவது சஞ்சிகை என்று கருதப்பட்டு வந்தது. இக்கருத்தினை மறுபரிசீலனைக்கு உட்படுத்துகின்ற வகையில் 1982 இல் சிந்தனை என்ற சஞ்சிகை வெளி வந்துள்ளமையை இப்படைப்பாளர்கள் என்ற நூலினூடாக அறியமுடிகின்றது. அத்தோடு 26 சஞ்சிகைகள் ஜேர்மனியிலிருந்து வெளிவந்தவை என்று கூறப்பட்ட நிலையில் 50 சஞ்சிகைகள் வெளி வந்துள்ளமையை இந்நூல் முதன்முதலாக வெளிப் படுத்துகின்றது. இவ்வகையில் முன்னர் அறிந்து கொண்ட தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்கும் உதவுகின்ற ஒரு நூலாக இது உள்ளது.

தமிழர்கள் ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா என்று பல நாடுகளிலும் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். அந்நாடுகளி லிருந்து தமிழ் இலக்கியங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவ்விதத்தில் ஒட்டுமொத்தமாக ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்கள் என்று ஆராய்கின்ற போக்கு ஒருபுறமிருக்க தனித்தனியாக நாடுகளை அடிப்படையாகக் கொண்டு புகலிடத் தமிழ் இலக்கியங்களை ஆராய்கின்ற போக்கும் உருவாகி வருகின்றது. இச்சூழ்நிலையில் "படைப்பாளர்கள்" நூல் போன்ற தொகுப்புக்களின் வரவு முக்கியமானதாக அமைகின்றது. குறிப்பாக இத்தகைய நூல்களின் வரவு ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் உள்ள ஆய்வாளர்கள் புகலிடத் தமிழ் இலக்கியங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது சரியான தகவல்களை முன் வைப்பதற்கும் இலகுவாக படைப்பாளர்களின் ஆக்கங் களை தேடிக்கண்டறிவதற்கும் வழிகாட்டுவதாக அமையும்.

இத்தகைய ஆவணப்படுத்தல் பணி முதன் முயற்சிகள், முன்னோடிகள் பற்றிய உறுதியான தகவல் களைப் பெறுவதற்கு மட்டுமன்றி புனைபெயர்களில் எழுதுகின்ற படைப்பாளர்களின் இயற்பெயர் உள்ளிட்ட தகவல்களையும் அறிய உதவும். நெருக்கடிமிக்க அப்போதைய அரசியல், சமூகச் சூழ்நிலையில் தமது சொந்தப் பெயரில் எழுதவிரும்பாத படைப்பாளர்கள் வெவ்வேறு புனைபெயர்களில் எழுதியுள்ளனர். இலக்கிய படைப்பாக்க நிலைப்பாட்டில் இது தவிர்க்க முடியாததாகும். புகலிட நாட்டிலே ஒருவருக்கொருவர் தொடர்பற்ற விதத்தில் வெவ்வேறு தேசங்களில் சிதறி வாழுகின்ற நிலையில் அங்குள்ளவர்களாலேயே சக படைப்பாளரை இனங்கண்டுகொள்வது கடினமான தாகும். அத்தகைய பின்புலத்தில புகலிடத்திற்கு வெளியேயுள்ளவர்களால் புகலிடத் தமிழ் எழுத்தாளர் கள் குறித்து அறிந்துகொள்வதில் சிக்கல்கள் உள்ளமை தவிர்க்கமுடியாததாகும். இந்நிலையில் ஒரு படைப் பாளரே வெவ்வேறு பெயர்களில் எழுதியுள்ளமை காரண மாக அவற்றை சரியாக இனங்காண்பதும் முக்கியமான தாகும். இல்லையேல் அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு படைப்பாளர்களின் படைப்பு களாக கவனத்திற் கொள்ளும் நிலை உருவாகும். இவற்றையெல்லாம் தவிர்த்து சிறந்த ஆய்வு முயற்சிகள் இடம்பெறுவதற்கு "படைப்பாளர்கள்" என்ற நூல் வழியமைத்துள்ள தெனலாம்.

புகலிடத் தமிழ் எழுத்தாளர்களின் தகவல் களைத் தொகுத்து ஆவணப்படுத்துவதாக அமைந்த நூல்களில் சில படைப்பாளர்கள் விடுபட்டிருக்கின்ற போதிலும், தகவல்களை ஒழுங்குபடுத்தி முன் வைப்பதில் சில சிக்கல்கள் உள்ளபோதிலும் புகலிடத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் "படைப்பாளர்கள்" என்ற நூல் முக்கியமானதாகும். முற்கூறிய "ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள்" என்ற நூலும் "படைப்பாளர்கள்" என்ற இந்நூலும் ஜேர்மனியப் படைப்பாளர்களை அறிந்துகொள்ளவும் அதனூடாக ஜேர்மனியப் புகலிடத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைக்கவும் உதவுமென்பதில் சந்தேகமில்லை. இந்நூல்களைப் போன்று ஒவ்வொரு நாட்டிலிருந்தும் படைப்பாளர்/ எழுத்தாளர் ஆவணப்படுத்தல் சார்ந்த நூல்கள் வெளிவருவது முக்கியமானதாகும். அவ்வாறு வெளிவருகின்றபோது அவை ஒட்டுமொத்தமான ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஒழுங்கு படுத்த உதவும். அது தமிழர்களின் புகலிட வரலாற்றின் ஒரு பகுதியாக சாட்சியாக அமையும். அதேவேளை புகலிட நாடுகளிலுள்ள இளைய தமிழ்ப் பிள்ளைகளை மனதிற்கொண்டு இத்தகைய நூல்களைத் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகளிலும் வெளியிடுவதும் முக்கியமானதாகும்.

உசாத்துணைகள்



1. சிவராஜா,வ., அருந்தவராஜா,க., சிறிஜீவன்,பொ., புவனேந்திரன்,அ., (2006). ஜேர்மனியில் தடம் பதித்த தமிழர்கள், ஜேர்மனி: தமிழ் எழுத்தாளர் சங்கம்.

2. பாக்கியநாதன்,க., இராஜகருணா,சி., (2022). படைப் பாளர்கள்: ஜேர்மனி வாழ் தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் ரைம்ஸ் பதிப்பகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகஜம்

ஏ.எஸ்.சற்குணராசா

பாடசாலை விடுகை மணி ஒலிக்கிறது. சுதாகரன் விடுகை ஒப்பம் இடுவதற்காக அலுவலகத்தை நோக்கி விரைகின்றார். அவர் ஒப்பம்மிட்டு நிமிர்கையில் ஏனையவர்களும் வந்துவிட்டார்கள்.

"உதயநாதன், மதன், சிவராசா சேர், டக்கண்டு வாங்கோ விரைவாக போனால் பலாங்கொடையில் இருந்து வரும் பஸ்ஸைப்பிடித்து விடலாம் சுதாகரன் சொல்கிறார். நாலுபேரும் பாடசாலையில் இருந்து 50மீற்றர் தூரத்திலுள்ள ரோட்டைநோக்கி வேகமாக நடக்கின்றனர்.

இவர்கள் ரோட்டில் ஏறவும் பஸ்வரவும் சரியாக இருக்கின்றது. பஸ்ஸை மறித்து ஏறி சீட் இருக்கா என நோட்டமிட்டபோது நடத்துனரோ "பின்வரிசையில் சீற் இருக்கு, போங்கோ" பின்வரிசை சீட் முழுமையாக காலியாக இருக்கின்றது. சென்று அமர்ந்து கொள் கின்றனர். பலாங்கொடையிலிருந்து வரும் 99 இலக்க இந்த பஸ் வேகமாக கிருலப்பனைக்குச் சென்று விடும் ஒண்றே கால் மணித்தியாலம் போதும் எல்லா இடமும் நிற்பாட்டு வது இல்லை. எங்களுடன் ட்றைவர் பழக்கமாகியதால் எங்களைக்கண்டால் பஸ்ஸை நிப்பாட்டுவான்.

ஆனால் சாலாவையில் உள்ள செக்பொயின்டில் தூரசேவை பஸ்கள் நிறுத்தி செக் செய்யப்படும். பஸ்ஸை நிறுத்தி எல்லோரையும் இறக்கி ஐசி யும் பையும் பார்வையிட்டு அதன்பின் பஸ்ஸிற்குள் ஆமி ஏறி எல்லா இடமும் பார்வையிட்ட பிறகுதான் செல்ல அனுமதிப் பார்கள். கடைசி சீட்டில் இருந்து கொண்டு சுதாகரன் நான் இண்டைக்கு நேரத்திற்குச் செல்லவேண்டும், திலங்க சுமதி பாலாவின் அண்ணனின் மகள் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்ய இருக்கிறார். இண்டைக்குப் பின்நேரம் 4.00 மணிக்கு றிகர்சல் நான்தான் வயலின் வாசிக்க வேணும்.

உதயநாதனும் தன் பங்கிற்கு எங்கள் வீட்டில் வெளிநாட்டுக்காரர் வந்து நிற்கிறார்கள் அவர்களைக் கடைத்தெருவுக்கு கூட்டிச்செல்ல வேண்டும் என்று. இவ்வாறு தங்களுக்குள் கதைத்து சிரித்துக் கொண்டி ருக்கிறார்கள். பஸ் வேகமாக கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

சிவராசாவும் "நான் இந்தப்பாடசாலைக்கு வந்து இன்றுடன் இரண்டாவது வருடம் முடிகிறது: என் கிறார். உடனே சுதாகரனும் "நானும் வந்து ஒரு வருடம் முடிந்த விட்டது, நேற்றைய மாதிரி இருக்குது" ஏனைய இருவரும் வந்து ஒருவருடம் கூட ஆகவில்லை அவர் களுக்குள் பழைய நினைவுகளை அசைபோடுகிறார்கள்.

***

அந்தப்பாடசாலை கொழும்பு மாவட்டத்தின் கிழக்குப்புற நகரமான அவிசாவளைக்கு 3கி.மீ முன்ன தாக புவக்பிட்டி எனும் ஊரில் அமைந்துள்ளது. புவக்பிட்டி A4 பாதையில் அமைந்துள்ளது. கொழும்பில் இருந்து அவிசாவளை, எம்பிலிப்பிட்டிய, இரத்தினபுரி, பலாங்கொட, பதுளை, மொனராகலை, ஹட்டன் ஆகிய பஸ்களில் பாடசாலை செல்ல முடியும். இதற்கு இரண்டு பாதைகளால் வரமுடியும். ஒன்று கிருலப்பனை, மஹரகம, கொட்டாவை பகுதியால் வரும் A4 ஹைலெவல் பாதை. பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை போன்ற இடங்களில் வசிப்பவர்கள் இப்பாதையால் வருவர். அடுத்தது பழையபாதை. இது ஒறுகொடவத்தை, அங்கொடை, ஹங்வெல்ல ஊடாக வந்து களுஅக்கலையில் A4 பாதையில் முடிவடைகிறது. கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடைப் பகுதியிலிருந்து வருபவர்கள் இப்பாதையால் வருவர்.

பாடசாலையில் 1100 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். தரம் 1 தொடக்கம் உயர்தரம் கலைப் பிரிவு வரை உள்ளது. ஒவ்வொரு தரத்திலும் 2 சமாந்தரப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர் கள் உள்ளனர். 30 ஆசிரியர்கள் வரையில் கடமை புரி கின்றார்கள். அவர்களில் அரைவாசிப்பேர் கொழும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து வருபவர்கள்.

மாணவர் தொகையில் 95 வீதம் தமிழ் மாணவர்கள், 5 வீதம் முஸ்லிம் மாணவர்கள். பாடசாலைக்கு அண்மையில் பென்றித்தோட்டம், எலிஸ்ரன் தோட்டம், பார்ணம் தோட்டம் என்ற இறப்பர் தோட்டங்களும் அதனுள் தொழிலாளிகளின் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. இந்த மூன்று தோட்டங்களிலிருந்தும் புவக்பிட்டி நகரம் மற்றும் அவிசாவளை பஸ் டிப்போக்கு அருகில் உள்ள மாணிக்கவத்தை என்னும் ஊரிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள்.

பாடசாலைக்கு அருகிலும் வீடுகளும் இறப்பர் தோட்டங்களும் காணப்படுகின்றன. பாடசாலையின் கிழக்குப்புறமாக அருவி ஒன்று பாய்ந்து செல்கின்றது. எங்கும் பச்சைப்பசேல் என்ற காட்சியும் கொழும்பை விடக் குறைந்த வெப்பநிலையையும் அப்பகுதி கொண்டிருக்கிறது. பாடசாலையின் அதிபர் ஞான சுந்தரத்திற்கு 55 வயதாகிறது. அவர் யாழ் அரியாலையைப் பூர்வீகமாகக் கொண்டவர். உப அதிபரோ ஒரு பெண்மணி அவவின் பெயர் சுசிலாதேவி அவ யாழ் சுன்னாகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

தொன்றுதொட்டு அப்பாடசாலையில் வட பகுதி ஆசிரியர்களே கடமையாற்றியுள்ளனர். தற்போதும் அதேநிலைதான். கொழும்பிலிருந்து அரைவாசிக்கும் அதிகமான ஆசிரியர்கள் பஸ்களில் வருவதால் அனேகர் நேரம் பிந்தியே வருகின்றனர். தூரசேவைப் பேரூந்துகள் கொழும்பிலிருந்து வரும்போது புவக்பிட்டியில் இறங்குபவர்களை ஏற்றுவதில்லை. ஆனால் கொழும்பை நோக்கிச் செல்கையில் ஏற்றுவார்கள். எனவே காலையில் அங்கிருந்து அவிசாவளை பஸ்ஸில் எறினால் அது எல்லா இடமும் நிற்பாட்டி மிகவும் மெதுவாகவே ஓடி வருகிறது. இதனால் கொழும்பிலிருந்து வருவதற்கு 2 மணித்தியாலங்கள் எடுக்கிறது.

பிந்தி வரும்போது அல்லது பிந்தி வருபவர்களை அதிபர் இந்தக் கஷ்டப்பட்ட பிள்ளைகளின் பாட நேரத்தினை வீணாக்குகிறீர்கள் உங்களுக்கு மனச்சாட்சி இல்லையோ பாடசாலை முடிந்த பிறகு நின்று படிப்பிக்கிறீர்களா? என்று காலை அர்ச்சனை செய்யத் தவறுவதில்லை. அவர் அர்ச்சனை செய்யும்போது உப அதிபரும் கோரஸ் பாடுவதற்கு வந்திடுவா.

***

சிவராசா யாழ்ப்பாணத்தில் பத்துவருடம் ஆசிரியராக இருந்த பின்பு கொழும்பிற்கு இடம் பெயர்ந்தார். மேல்மாகாணக் கல்வித்திணைக்களத்தில் பாடசாலை போடச் சென்ற போது கொழும்பு நகரத்தில் இடமில்லை புவக்பிட்டி பாடசாலை போடுறன் இல்லை களுத்துறை, கம்பஹா போகவேண்டி வரும் என்று கூறி புவக்பிட்டியைப் போட்டு விடுகிறார்கள். புவக்பிட்டி பாடசாலையானது ஹோமாகம கல்வி வலயத்தில் அமைந்துள்ளது. இவ்வலயத்தில் 7 தமிழ்ப்பாடசாலைகள் காணப்படுகின்றன. புவக்பிட்டி பாடசாலையே பெரிய பாடசாலை.

முதல்நாள் கொழும்பில் ஏற்கனவே வேலை செய்துகொண்டிருந்த சிங்களம் நன்றாகப் பேசத் தெரிந்த தனது சகோதரியின் துணையுடனேயே புறப்பட்டு புவக்பிட்டி பாடசாலையை கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. களனிவெளி புகையிரதப் பாதையும் பாடசாலை முன்பாகவே செல்கிறது. ஆனால் புயிரதத்தில் வருவது கடினம் வீட்டில் இருந்து 6 மணிக்குப் புறப்பட்டு விடவேண்டும். எனவே காலைச்சாப்பாடும் இங்கு தான் எடுக்க வேண்டும்.

பாடசாலையில் இந்திரன் என்பவர் ஆரம்பத்தில் கன்ரீன் நடத்திக்கொண்டிருந்தார். அவருடைய காலத்தில் பாணும் பருப்பும், இடியப்பம், குழல்புட்டு, லவரி போன்ற உணவுப் பொருட்கள் ரீ என்பன கிடைக்கக்கூடியதாக இருந்தது. அதன்பின் செபஸ்தியான் என்பவருக்கு கைமாறிவிட்டது. இவர் பாண், இடியப்பம் என்பவற்றுடன் மரக்கறிரொட்டி, பரோட்டா என்பவற்றையும் போடத் தொடங்கிவிட்டார்.

இவற்றை அங்கேயே செய்வதால் எமக்குச் சுடச்சுடச் சாப்பிடக்கூடிய சந்தர்ப்பமும் கிடைத்தது. சுதாகரன் தடித்த உடம்புக்காரன் அடிக்கடி கன்ரீன் சென்று சாப்பிட்டுக் கொண்டிருப்பான். இதனை அவதானிக்கும் அதிபரிடம் அடிக்கடி திட்டு வாங்குவான். பாடசாலையில் ஆசிரியர்க்கிடையில் கலகலப்புக் குறைவில்லை.

சிவரஞ்சனி ரீச்சர் இணுவிலைச் சேர்ந்தவர். முதல் நியமனமே இந்தப் பாடசாலையில்தான். இன்னும் திருமணமும் முடிக்கவில்லை. வஞ்சகம் இன்றி உடம்பை வளர்த்ததால் அவரால் வேகமாக நடக்கமுடியாது. அசைந்து அசைந்து மெதுவாகத்தான் வருவா, பிள்ளைகள் தேர் வருது என்பாங்கள்.

அவருக்கும் அதிபருக்கும் இடையில் அடிக்கடி பேச்சுவார்த்தை நடக்கும். ஆனால் எங்கள் இனப் பிரச்சினைபோல் முடிவில்லாதது. தொடர்ந்து வெள்ளிக் கிழமைகளில் லீவு போடுவார். ஆனால் எங்கள் பாடசாலையில் கற்பிக்கும் மூன்று முஸ்லிம் ஆசிரியர்கள் அன்று தொழுகைக்காக மதியத்துடன் சென்று விடுவார்கள்.

ஏற்கனவே ஆசிரியர்கள் பற்றாக்குறை. இதனால் வெள்ளிக் கிழமைகளில் மோசமான ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவும். ஆசிரியர்கள் இல்லாத வகுப்பறைகளில் மாணவர்கள் சிலவேளை சண்டை போடுவார்கள், பிரச்சினைகள் வரும். இதனால் அதிபர் ரென்சனாகி நிற்பார். உபஅதிபர் ஓடி ஓடி வகுப்புகளைப் பார்வையிடுவா. அவ ஓடி ஓடி வகுப்பறைகளுக்குச் செல்கையில் பிள்ளைகள் கிளி பறந்து வருதெண்டு நக்கல் பண்ணுவது வழமை.

வியாழக்கிழமை அதிபர் சிவரஞ்சனி ரீச்சரைக் கூப்பிட்டு "தயவுசெய்து வெள்ளிக் கிழமைகளில் இப்படித் தொடர்ந்து லீவு போடாதையுங்கோ. ஆசிரியர்கள் இன்றி என்னால் வகுப்புக்களைச் சமாளிக்க முடியாமல் உள்ளது". என்று அரை மணிநேரம் உரையாடி முடிய எழுந்து "இந்தாங்க சேர் லீவு லெற்றர், நான் நாளைக்கு லீவு" என்பார். அந்த நேரம் அதிபரின் முகம் படுற பாட்டை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

தவக்குமார் என்ற ஆசிரியரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அவருக்கும் அதிபருக்கும் இடையில் பனிப்போர் நடந்து கொண்டிருந்தது. அவரை ஏனைய ஆசிரியர்கள் தங்களுக்கிடையில் குழப்படி சேர் என்று தான் கதைப்பார்கள்.

முனாஸ் சேர் என்னும் முஸ்லிம் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரும் இங்கு கற்பித்துக் கொண்டிருந்தார். புவக் பிட்டியைச் சேர்ந்தவர். அவர் பழகுவதற்கு இனியவர். எல்லோருக்கும் விழுந்து விழுந்து உதவி செய்வார். ஆனால் கடும் மறதிக்காரர். ஒருமுறை அவிசாவளைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர்.

மறந்துபோய் அங்கிருந்து பஸ்ஸில் ஏறி வீட்டிற்கு வந்துவிட்டார். தங்கையார் மோட்டார் சைக்கிளைக் கேட்டபின்புதான் அவருக்கு மோட்டார் சைக்கிளை விட்டது ஞாபகம் வந்தது.

பாடசாலை மாணவர்களின் நூற்றுக்கு எண்பது வீதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு கல்வியில் அக்கறை இல்லை. வகுப்பறையில் பாடநேரத்தில் கொப்பியைத் திறந்து மூடினால் மீண்டும் மறுநாள் பாடநேரத்தில் தான் கொப்பியைத் திறப்பார்கள். வீட்டு வேலைகள் எதுவும் செய்வதில்லை.

பின்னேரங்களில் அவர்கள் தோட்டத்தில் விறகு வெட்டுதல், கசிப்பு வியாபாரம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவார்கள். அவர்களுக்குக் கற்பிப்பது என்பது சவால் நிறைந்ததாகவே இருக்கும். பழைய ஞாபகங்களில் ஊறிப்போயிருந்த நால்வரும் பஸ் சாலாவையில் செக் பொயின்ரில் நிறுத்தப்பட்ட போதுதான் சுயநினைவிற்கு வந்தார்கள்.

ஆமி பஸ்ஸிற்குள் ஏறி எல்லாரையும் வரிசையாக வரச் சொல்கிறான். இறங்கி வரிசையாகச் செல்கிறோம். ஐடி ஐயும் பையும் பார்த்து முடித்த பின்பு ஒரு ஆமி பஸ்ஸைச் செக்பண்ண ஏறுகிறான். ஏறிய வேகத்தில் இறங்கி ஓடிவந்து அங்கிருந்த ஏனை ஆமிகளிடம் பஸ்ஸிற்குள் பயணப்பை ஒன்று உள்ளது எனக் கூறுகின்றான்.

உடனே பயணிகள் இருந்த பக்கத்திற்கு இரண்டு ஆமிக்காரர் வந்து "எல்லோரையும் பையை எடுத்துக் கொண்டு வரச் சொன்னதுதானே, யார் எடுத்துக் கொண்டு வரவில்லை" கேட்டபோது, ஆனால் ஒருவரும் தங்களுடையது என்று கூறவில்லை.

இதனால் ஆமிக்காரர்கள் பரபரப்படை கிறார்கள். நாங்கள் நால்வரும் குழப்பமடைய அங்கிருந்த ஒரு ஆமிதொலைத்தொடர்பு சாதனத்தில் அருகில் உள்ள சாலாவை முகாமிற்கு தகவல் அனுப்புகிறான். "பையை செக்பண்ணி முடித்த பிறகுதான் நீங்கள் போகலாம், செக் பண்ணுவதற்கு குண்டு செயலிழக்கும் பிரிவுக்கு அறிவித்திருக்கிறோம். அவர்கள் வந்த பின்னரே செக்பண்ணி உங்களை விடமுடியும்."

சுதாகரன் நடுங்கத் தொடங்கிவிட்டார். உரத்து கதைக்காது மெதுவாக "எங்களுக்குத்தான் அலுப்புப் போல இந்த அதிபரை எத்தனை நாள் ஜொப்காட் எடுத்துத்தரும்படி கேட்டும் அவர் இன்னும் எடுத்துத் தரவில்லை. எதைக்காட்டி நாங்கள் ஆசிரியர்கள் என்று நிருபிப்பது?. இன்னும் இத்தனை மணித்தியாலயங்கள் காவல் நிற்பது எனத் தெரியவில்லை. நாங்கள் நாலு பேரும்தான் தமிழர்கள் போல. நாங்கள் போன் ஒன்றும் கதைக்காமல் அமைதியாக இருப்பம்" "ரிகர்சல் தான் போக ஏலாமல் போகப் போகுது".குழம்பத் தொடங்கி விட்டார்.

அரைமணித்தியாலம் கடந்து விடுகிறது. இப்போது அவிசாவளை கொழும்பு பஸ் கொழும்பு நோக்கிச் செல்கிறது. "நாங்கள் நத்தை என நக்கலடிக்கும் அந்த பஸ்ஸில் ஏறிய எங்களுடைய பாடசாலை மற்றைய ஆசிரியர்கள் இன்று எங்களை முந்திப்போகப் போகிறார்கள்." "இன்று வீட்டை போக லேட் ஆகும் போலகிடக்கு போனை அடிச்சு நாங்கள் தமிழில் கதைக்க ஆமிக்காரன் சந்தேகப்படுவான் என்ன செய்யிறதெண்டு தெரியாமற்கிடக்கு, நல்லவேளை இண்டைக்கெண்டு சிவரஞ்சனி ரீச்சர் வரவில்லை. அது சொல்லொண்டும் கேளாமல், ஆமியுடன் கதைக்கிறன் எண்டு போய் ஏதாவது வம்பை விலைக்கு வாங்கிவிடும்" சிவராஜாவின் கவலை.

ட்றைவரோட ஒருக்காக கதைச்சுப் பார்ப்பம் என்று உதயநாதன் சொல்கிறார். றைவர் தான் அடிக்கடி பாடசாலையில் இருந்து ஏறுவதால் அவருக்கு எங்களை நன்றாகத் தெரியும் எண்டு சொல்லுவார் என நினைக்கிறன். எங்களை புவக்பிட்டி ஆசிரியர் என்று நிருபித்து கதைப்பதற்கு ட்றைவருடைய உதவியைத்தான் கேட்கவேண்டும்.

மதனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, கடவுள் பக்தி அதிகம், வெள்ளிக்கிழமைகளில் இடை வேளையின் போது புவக்பிட்டி அம்மன் கோவிலுக்குச் சென்று கும்பிட்டு வருவது வழக்கம். இப்போது புவக் பிட்டி அம்மனை மனதிற்குள் வேண்டிக் கொண்டிருந்தார்.

ஒருவரும் உரிமை கோராததுதான் பயமா இருக்கு. உள்ளை உள்ள பொருட்கள் பிரச்சினையில்லா தவை எண்டால் தப்பி விடலாம். ஏதேனும் பிரச்சினை யானதெனின் கண்டிப்பா முதலாவதாக எங்களைத்தான் கொண்டுபோய் விசாரிப்பான். விசாரணை முடிந்து விடுவதற்கு எத்தனை நாள் ஆகுமென எவருக்கும் தெரி யாது. உதயநாதன் சொல்லிச் சொல்லி நடுங்கிக் கொண்டிருக்க..

பதுளை கொழும்பு ஏசி பஸ் ஒன்று வந்து திடீரென பிறேக் போட்டு நிற்கிறது. அருகிலிருந்து ஒருவர் பாய்ந்து இறங்கி நாங்கள் வந்த பஸ்ஸை நோக்கி ஓடுகிறார். அவர் எங்கள் பஸ்ஸில் ஏற முயன்றபோது இரண்டு ஆமிக்காரர்கள் ஓடிச்சென்று அவரைப் பிடித்துக் கொள்கின்றனர்.

"நான் பனாகொடை இராணுவமுகாமில் வேலை செய்பவன், பலாங்கொடையில் இருந்து இந்த பஸ்ஸில் ஏறி வந்துகொண்டிருக்கும்போது பரக்கடுவை என்னும் இடத்தில் பஸ் சற்றுநேரம் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. எனக்கு சற்றுத் தலையிடியாக இருந்ததால் பனடோல் வாங்க பஸ்ஸை விட்டு இறங்கிச் சென்ற வேளை பஸ் புறப்பட்டு விட்டது, பஸ்ஸிற்குள் எனது பயணப்பை இருக்கிறது" என்றதும், உடனே ஆமிக்காரன் ஒருவன் "உள்ளே ஏறி உமது பையை எடுத்துவாரும்," பணிக்கிறான்.


எடுத்து வந்த பின்னர் அவருடைய இராணுவ அடையாள அட்டை மற்றும் பயணப்பையை பரி சோதித்த பின் எல்லோரையும் பஸ்ஸில் ஏற அனுமதிக் கிறார்கள். நாங்கள் எல்லோரும் பெரிய நிம்மதிப் பெருமூச்சுடன் பஸ்ஸில் ஏறி ஆசனத்தில் அமர்ந்து கொள்கிறோம்.

பஸ் ஓர் உறுமலுடன் புறப்பட்டு கொழும்பை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிவரதன்

# பாரதியின் கவி அடிகளும் சில வினாக்களும்



பாரதி பிறந்து வாழ்ந்தது குறுகிய காலம் தான் ஆனால், அவன் எமது தமிழ்ச்சமூக பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகளை பிறிதொரு கோணத்தில் நோக்கியவன்தான் என்பதற்கு அவரது எழுத்தும், கவிதைகளின் அடிகளும் வாழ்வும் சான்று பகர்கின்றன என்றாலும் பாரதி முழுமையாக ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்தும் சாதிய "நம்பிக்கைகளிலிருந்தும் விடுபட்டு விட்டானா" என்பதையும் பார்ப்பது ஓர் ஆய்வாளனின் கடமையாகும்.

"ஜாதிமதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே"

என்றவர்

"ஈனம் பறையர்களேனும் - அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ?"

என்பார்.

"ஈனம்" எனும் சொல் குறைவு, இழிவு எனப் பொருள்படும். அவர் ஏன் பறையர் என வெறுமனே விளிக்காமல் ஈனம் என்றொரு வார்த்தையினை பிரயோகித்தார் என்பது ஒரு வினா எனினும் பாரதி பல இடங்களில் கூறுகிறார்.

"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லிய
சொல் அமிழ்தமெண்போம்
நீதிநெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர்மேலவர், கீழவர் மற்றோர்"

என்றும் அவர் கூறுகிறார்.

மற்றொரு கவிதையில்

"ஆத்திரங்கொண்டே இவன் சைவன் - இவன்
அரிபக்தன் என்று பெருஞ்சண்டையிடுவார்"

என உளம் வெதும்பிடுவார்.

விடுதலை எனும் கவிதையிலே பாரதி

"பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை"

என்கிறார். இங்கும் "இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை" என்கிறார்.

சுதந்திரப்பள்ளு கவிதையிலே "பார்ப்பானை ஐயரென்றே காலமும் போச்சே. வெள்ளை பறங்கியைத் துரையென்ற காலமும் போச்சே" என்கிறார்.

விடுதலை கவிதையில்

"ஏழையென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே"

என்கிறார்.

பாரதி பரவலாக தனது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் சாதி ஒழிப்பு பற்றி கூறி உள்ளான் என்பதை மறுப்பதற்கில்லை. போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும் எனும் கவிதையிலே

"ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன்றி யற்றிலாய் போ போ போ"

என்கிறார்.

வேதமறிந்தவன் பார்ப்பான் - பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவறாமல் - தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்"

"பண்டங்கள் விற்பவன் செட்டி - பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி"

"நாலு வகுப்பும் இங்கொன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தல்
வேலை தவறிச் சிதைந்தே - செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி"

என்கிறான் பாரதி.

மகாகவி பாரதி எந்த இடத்தில் எப்படிப் பாட வேண்டுமோ அப்படிப் பாடியவன் பாஞ்சாலி சபதத்திலே பாஞ்சாலியின் துகிலுரியும் காட்சியிலே வீமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்கிறான்.

"இது பொறுப்பதில்லை - தம்பி
எரிதழல்கொண்டு வா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்"

என்கிறான்.

எமதர்மனையே வம்புக்கிழுப்பான்.

"காலா உனைநான் சிறுபுல்லென மிதிக்கிறேன்"

என்றான்.

"காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன்"

என்பான்.

"அல்லா அல்லா அல்லா" என இஸ்லாம் தழுவிய முஸ்லிம்களை பாடிய பாரதி பல இடங்களில் அவர்களை "துலுக்கா" என்றே விளிக்கிறார். அன்றைய காலச்சூழ்நிலையில் வெகுஜனங்களிடையே நிலவிய ஒரு சொல்லாக அது இருப்பதனால் அவ்வாறு பாரதி பயன்படுத்தி இருக்கலாம் என நாம் கொள்ளலாம். கண்ணம்மா என் காதலி கவிதையில்

"தில்லி துருக்கர் செய்த வழக்கமடி! பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்
வல்லியிடையினையும்ஓங்கி முன்னிற்கும் - இந்த
மார்பையும் மூடுவது சாத்திரங்கண்டாய்"

என்கிறார். இங்கே முஸ்லிம்களின் கலாசார முறைமைகளை, பழக்கவழக்கங்களை சாடினாரா? என்றொரு வினா எழுகிறது.

"வல்லியிடையினையும்மார்பிரண்டையும் - துணி
மறைத்ததனாலழகு மறைந்ததில்லை"

என்று அடுத்த அடியில் கூறுகிறார். பாரதியின் பெண்கள் பற்றிய முற்போக்குச் சிந்தனையில் ஒரு வெளிப்பாடாக இதனைக்கொள்ள பல நியாயங்கள் உள்ளன. அச்சமும் நாணமும் பெண்களுக்கு தேவை இல்லை என்றவன்தானே பாரதி. பாஞ்சாலி சபதத்திலே ஒரு பெண்ணின் உடல் உபாதையை பின்வருமாறு கூறுகிறார். அவர் பாஞ்சாலி பற்றி இப்படிக் கூறுகிறார்.

"மாதவிடாயிலிருக்கிறாள் - அந்த
மாதரசென்பதுங் கூறினான் - கெட்ட
பாதகன் நெஞ்சம் இளகிடான் - நின்ற
பாண்டவர் தம் முகம் நோக்கினான்"

என்பார்.

"கற்பு நிலை என சொல்ல வந்தால் அஃது இரு
கட்சிக்கும் பொதுவில் வைப்போம்"

என்பவன்.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
இச்சகத்தினை ஒழித்திடுவோம்"

என சூளுரைக்கிறான்.

இறுதியாக எப்படி பார்த்தாலும் பாரதியின் கவிஉலகு ஒரு தனி உலகு மாற்றங்களை வரவேற்றவன் தீமை, பழைமை வாதம், மூட நம்பிக்கை அடக்கு முறைகள் யாவற்றுக்கும் எதிராக குரல் எழுப்பியவர் எனலாம். அவன் கவி உலகின் புதியதொரு திசைகாட்டி.

•

# மாண்புறு நாடு என்று எழும்???



என்று தணியும் இந்த கோர மழை?
என்று திரும்பும் இயல்பு வாழ்வு நிலை?
குன்று மேடு பள்ளமெலாம் மழை
காலம் பொய்த்தே தொடர் மழை
நன்று "தனம்" கொண்டார் வீட்டில்
தம் கைகால் கொண்டுழைப்போர் காட்டில்
அரசன் எவ்வழி குடிகளவ்வழி
ஆளப்படுவோரும் வீழ்வர் அவ்வழி
பேய் ஆண்டால் அந்நாட்டில்
பிணந்தின்னும் சாத்திரங்கள் என்பர்
ஈழமெங்கும் புதைகுழிகள் பிணவாடைகள்
எங்கு தோண்டினாலும் மனித எச்சம்
கௌதமர் என்றோ கண்மூடிட்டார்!
காடையர் காவியராய் திரண்டிட்டார்
மதவாம், இனவாதம், குலவாதம்
மனிதமிலா மானிடரால் தினம் வாதம்
நாட்டிற்கென்ன நடந்தது?
நல்லோரெலாம் புலம்பெயர வைத்தது
கற்றோரெலாம் கடல் கடக்கிறார்
காலம் கெட்டதென்றே ஓடுகிறார்
பைகளுக்குள் பணம் பதுக்கியோர் மகிழ்கிறார்
பாவப்பட்ட வெகுஜனம் பறிதவிக்கிறார்
நீதிவழி தீர்ப்பெழுதிட வழி இல்லை
நீதிபதிகளுக்கிங்கிடமில்லை.
நாடு நாசமாகியே நாளும் போகுது
நாமும் மோசமாகியே மாள்கிறோம்
மழையும் ஓர்நாள் விட்டிடலாம்
மனங்கவர் வாழ்வுக்கு வித்திடலாம்.
சுளை சுளையாய் சுருட்டுபவர் ஓய்வரோ?
சுந்தர இலங்கை மீளெழ விடுவரோ?
மக்களே நீங்கள்தான் மகேசன்கள்
மாண்புறு நாடமைய தீர்ப்பெழுதுங்கள்

மொழிவரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போராடப் போராடுதல்

எந்தவோர் ஒடுக்கலுக்கும் எதிராக
நொந்தவர் தாமே போராடல் நியதி
சொந்தமாய் போராட இயலாதோர்
எந்த நிலையிலும் தாமே வருந்துவர்

இந்த மண்ணில் விவசாயி கூலியாவான்
நிலமற்று குத்தகையில் பலியாவான்
பலங்கொண்டுழைத்தாலும் விளைச்சலில்
நலன்பெறும் நேரத்தில்
பல்தேசியக் கொம்பனியார்
எல்லாம் இங்கே இறக்குவர் விற்பர்
என் செய்வர் விவசாயிகளிறப்பர் மறப்பர் விதியென நொந்து!

எங்கள் கடலெலாம் அயல்நாட்டின் நிலமாகும்
உலகத்தமிழர் எனத் தமிழ்நாட்டார் உலாவருவர்
எங்களூர்த் தமிழ்த்துரைமார் சிங்களவரையே ஏசுவர்
விலங்கு மனத்தவராய் சீனரென்று சினங்கொள்வர்

பூநகரிக்கடலில் அதானியின் சோலர்பவர் பூக்கும் காய்க்கும்
பொன்னாவெளியில் சுண்ணாம்புக்கல் பெருகிச் சீமெந்துப்புகை போக்கும்
மன்னாரில் மின்சாரம் இந்தியச் சம்சாரமாய்ச் சிறக்கும்
திருகோணமலைத் துறையென்ன எண்ணெய்க்குதமென்ன
அருள்தரு கோணேசர் குடியிருந்தென்ன நிலமெலாம்
நீக்கமற நிறைவார் அனுமனின் ஆளெலாம்

மாதச் சம்பளத்தார் அரசாங்க உத்தியோகப் பெருங்குலத்தார்
எத்தரப்பென்றாலும் தொழிற்சங்கத் துரைமார்
வீரவேசக் கட்சிகளின் பிதாமகன்மார்
விவசாயிகளின்றி மீனவரின்றி தொழிலாளரின்றி
ஆசிரியரின்றி ஊழியரின்றி பெண்களின்றி மக்களோ யாருமின்றி
காணாமல் போனவர்க்காய் அவர்க்காய் இவர்க்காய்ப்
போராடல் தங்கடனென்று பொங்குவர்
சீறுவர் சினப்பர் சிறைநிரப்புவர் வெளிவருவர்
எல்லாம் அயலார்அன்பும் அன்னியர்தென்புமிகு அருளுக்குமாய்
கைமாறே அவர்தங்கடனென்று ஊது சங்கே.

- சோ.தேவராஜா

## உன் சுவாசக் காற்று

என் இருண்ட இதயத்தில்
மெழுகுதிரி- நீ..
என் வீட்டு காணிப்புல்லின்
செழிப்பு - கண்முன்,
உன் வதனச் செழிப்போ
வன்னி நெற்கதிர் போன்று..
வானம் மழையைப் பிரித்து
பூமிக்கு தள்ளியது-ஆனால்
என் சுவாசத்திலிருந்து
பிரிக்கமுடியா ஆயுள் கைதி - நீ..
உன் கொடியிடை கண்டு
என்னிதயம் கடலளவு மகிழ்வில்..
மேலே ஒற்றை வானம்-
இடையில்- உன்மேல் படரும்
பாரியின் முல்லையாக- நான்..
உலர் காற்றிருந்தும் - உன்
மேனியின் நறுமணம்
என் நாசித்துவாரத்தில்..
நட்சத்திரம் கண் சிமிட்ட,
தாமரை இலைகள் பாய்
விரிக்க, அதன்மீது
தாலாட்டுவேன்-உனை..
முத்தத்திற்கு மரணமில்லை,
அது கசப்பதுமில்லை..
உன்னீர இதழ் முத்தத்திற்கு
ஈராண்டல்ல ஈராயிரமாண்டு
காத்திருப்பேன்- அன்பே..
உன் சுவாசக்காற்றற்ற
என்னிதயம் - என்
கனவை நிராகரிக்கிறது..
நான் உயிர் வாழ்ந்திட உன்
சுவாசக் காற்றொன்றே போதும்..

- பொலிகை ஜெயா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வளர்நிலா" : அ.பௌநந்தி ஆக்கிய சிறுவர் கவிதைகளின் தனித்துவம் பற்றிய ஒரு நோக்கு

**பேராசிரியர் மா. கருணாநிதி**




கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராகப் பணியாற்றும் திரு. பௌநந்தி அவர்கள் எழுதிய "வளர்நிலா" என்னும் சிறுவர் பாடல் நூல் ஜீவநதி 243 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. சிறுவர் கவிதைகள் நூல் வரிசையிலே இந்த நூல் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்துள்ளது.

தமிழ் இலக்கிய மரபில் சிறுவர் இலக்கியமானது இருபதாம் நூற்றாண்டிலேயே தனித்துவமானதும் சுதந்திரமானதுமான இடத்தை வகிக்கத் தொடங்கியது. முன்னைய காலங்களில் நாட்டார் கதைகள் நாட்டர் பாடல்கள் என்றவாறு வாய்மொழி மூலமாகப் பிள்ளைகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்கும் ஒழுக்க விழுமியங்கள் சார்ந்து அறிவூட்டுவதற்கும் வளர்தோரால் கூறப்பட்டு வந்தவை காலப்போக்கில் எழுத்துவடிவம் பெற்றன. இன்றைய காலகட்டத்தில் சிறுவர்களுக்கான கவிதைகள் தனித் தொகுப்புகளாகவும் பல கவிதை நூல்களில் சிறுபகுதிகளாகவும் இடம் பெறத் தொடங்கிவிட்டன. சிறுவர் இலக்கியங்களைப் படைப்போர் தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

சிறுவர் இலக்கியம் என்பது சிறுவர்களையும் இளம் வளர்ந்தோரையும் இலக்காகக் கொண்டு ஆக்கப்படும் இலக்கியமென வரையறை செய்கின்றனர். இவை கதைகள், பாடல்கள் முதலியவற்றை உள்ளடக்கிய நூல்களாக மற்றும் சஞ்சிகைகளாக வடிவமைக்கப்படுகின்றன. கடந்த காலங்களிலே சிறுவர்களை சிறிய மனிதர்களாகக் கருதியமையால் அவர்களுடைய தனிப்பட்ட தேவைகள், விருப்பங்கள் மற்றும் ஆர்வங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. சிறுவர்களின் விசேட பண்புகள் அறியப்பட்ட வேளையில் அவர்களுக்கென இலக்கியங்களைப் புறம்பாகப் படைக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. சிறுவர் இலக்கியங்களைச் சிறுவர்கள் மட்டுமல்லாமல் வளர்ந்தோரும் வாசிக்கின்றனர் என்பதனால் சிறுவர் இலக்கியத்தில் எப்பொழுதும் சிறுவர் மற்றும் வளர்ந்தோர் என இருசாரார் பங்குகொள்கின்றனர். இவ்வாறான இலக்கியங்களை ஆக்கும்போது அவற்றுக்குரிய மரபுகளையும் வாசிப்பவரின் வயது நிலைகளையும் கவனத்தில் எடுத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுதிறது. உளவியல் மற்றும் மொழியியல் அடிப்படைகளில் இது ஏற்புடையதாகவும் காணப்படுகின்றது.

சிறுவர்களுக்கான கவிதைகளை ஆக்கியோரில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, அழ. வள்ளியப்பா வரிசையில் இலங்கையிலே நவாலியூர் சோமசுந்தரப் புலவர் (சிறுவர் செந்தமிழ்), அருள்நந்தி (சிறுவர் பாடல் தொகுப்பு), க.வேந்தனார் (வேந்தனார் கவிதைகள்), பண்டிதர் க.வீரகத்தி, பண்டிதர் க.சச்சிதானந்தன் போன்றோரின் ஆக்கங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றவை. இவர்களது மரபிலே மகாகவி உருத்திரமூர்த்தி, கவிஞர் மு. செல்லையா முதலியோரும் தமது கவிதைத் தொகுப்புகளில் சிறுவர்களுக்கான பாடல்களை இடம்பெறச் செய்துள்ளனர். இவர்களின் வரிசையிலே திரு அ.பௌநந்தியும் இடம் பிடித்துள்ளமை மகிழ்ச்சிதரும் விடயமாகும்.

"வளர்நிலா" கவிதைத் தொகுப்பானது பல விசேடமான பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் பௌநந்தி கல்வியியல் சார்ந்த விசேட அறிவும் அனுபவமும் உடையவர். சிறுவர்களின் உடல் மற்றும் உள விருத்தி சார்ந்த உளவியல் பண்புகளின் படிநிலைகளை அவதானத்திற்கொண்டு கவிதைகளை மூன்று பகுதிகளாகத் தொகுத்து அதவற்றுக்குப் பொருந்தும் வகையிலான விடயங்களையும் அனுபவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் இந்த நூலிலே பரிமாறியிருக்கின்றமை அவதானத்திற்குரியது.

பருவம் 1 இல் உள்ள பாடல்கள் அனைத்தும் வீட்டில் பிள்ளை நேரடியாகப் பழகும் அம்மா, அப்பா, பாட்டி ஆகியோரைப் பற்றியும் அந்தச் சூழலில் உலவும் நாய்க்குட்டி, கோழிக்குஞ்சு, நாய்க்குட்டி, வண்ணத்துப் பூச்சி போன்றவற்றையும் பற்றிப் பாடுகின்றன. இவை பிள்ளையின் முதற்படி அனுபவங்களையும் உளவியல் சார்ந்த ஊக்கங்களையும் பதிவுசெய்வன என்பதில் அக்கறை காட்டப்பட்டுள்ளது. பிள்ளை மீதான அம்மா வின் ஆரம்ப காலச் செயற்பாடுகளான அன்பு காட்டல், முத்தமிடல், உணவு ஊட்டிவிடுதல், சட்டை போட்டு விடுதல், கதை சொல்லுதல் மற்றும் தூங்க வைத்தல் போன்ற அடிப்படை அம்சங்களின் மீது அக்கறை கொண்டு பாடப்பட்டுள்ளது.

"அம்மா எந்தன் அம்மா
ஆசையுள்ள அம்மா
என்னை அள்ளித் தூக்கி
முத்தமிடும் அம்மா

உணவைச் சுவையாய்ச் சமைத்து
ஊட்டிவிடும் அம்மா
வண்ணச் சட்டை போட்டு
வடிவு பார்க்கும் அம்மா..."

என விரிகிறது அப்பாடல். பருவம் 2 இல் அம்மாபோல யாருமில்லையே என்ற பாடலும் அம்மாவைப் பற்றிப் பாடுகின்றது. மேலே எடுத்துக்காட்டப்பட்ட "அம்மா எந்தன் அம்மா" என்ற பாடலுக்கும் இதற்கும் இடையில் கையாளப்பட்டுள்ள சொற்கள், சொற்களில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை மற்றும் கூறப்படுகின்ற விடயங்கள் ஆகியவற்றை நுணுகி ஆராய்கின்றபோது சிறுவர்களின் பருவங்களுக்கு ஏற்ப பாடுவதில் விடய ரீதியாகவும் சொல் களஞ்சிய விருத்தி சார்பாகவும் பாடலாசிரியர் பௌநந்தி கொண்டுள்ள அக்கறையும் தெளிவும் வெளிப்படுகின்றன.

பாடல்களுக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட கருப்பொருட்கள் அர்த்தமுள்ளவை. பிள்ளைகள் தாம் வாழும் சூழல், இயற்கை, பெற்றுக்கொள்ள வேண்டிய அனுபவங்கள், அறிய வேண்டிய பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் என்ற விடயங்களை அறிவதற் கான வாய்ப்பினை இவருடைய பாடல்கள் உருவாக்கிக் கொடுத்துள்ளன. பிள்ளைகளிடத்தில் வாசிப்பு மற்றும் எழுத்துத் திறன்களை வளர்த்தல் என்ற அடிப்படைத் திறன்களுக்கும் அப்பால் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் கற்பனையை விருத்தி செய்வதற்குமான சந்தர்ப்பங் களுக்கு அவருடைய கவிதைகள் அடித்தளமிட்டுள்ளன.

சிறுவர் கவிதைகளை ஆக்குவதிலே கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான விடயம் கவிதையில் பயன்படுத்தப்படுகின்ற மொழிநடை யாகும். இவர் தமிழ்மொழியில் கொண்டுள்ள சிறப்பாற்றல்களும் நீண்டகாலமாக தமிழ்மொழியைக் கற்பித்த அனுபவங்களும் மொழிப் பிரயோகத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பிள்ளைகளின் விருத்திப் பருவத்திற்குரிய மொழி, அன்றாடம் பயன் படுத்தும் சொற்கள், எடுத்துக்கொண்ட கருப் பொருளுக்கு இயைபான மொழி என்ற அடிப்படையில் கவிகைகள் ஆற்றொழுக்காக இடக்பெற்றுள்ளன. அனுபவங் களோடு இணைந்த வகையில் பிள்ளைகள் புதிதாகச் சிந்தித்து கருத்துகளை வெளியிடுவதற்கு ஏற்றவாறான புதிய சொற்களின் அறிமுகம் பரவலாகக் காணப்படு கிறது.

இந்தக் கவிதைத் தொகுப்பிலே பிள்ளைகளுக்கான கருத்துகளையும் அனுபவங்களையும் விருத்தி செய்வதற்குப் பொருத்தமான பாத்திரங்களை ஆசிரியர் இனங்கண்டுள்ளார். பிள்ளைகள் தமது அறிவையும் அனுபவங்களையும் வளர்த்துக் கொள்வதற்கும் ஏற்கனவேயுள்ள அறிவுத் தொகுதியிலிருந்து புதியன வற்றைக் கட்டியெழுப்புவதற்கும் உடனடிச்சூழல் நண்பர்கள், சகபாடிகள் மற்றும் இயற்கையின் தோற்றப் பாடுகளை அவதானித்தல் முக்கியமானவை. பிள்ளைகள் வீட்டுச் சூழலில் வளர்ந்தோர் கையாளும் மொழியைச் செவிமடுத்தலை பெரிதும் விரும்புவர். வளர்ந்தவர்கள் பாடல்களை பொருளுணர்ந்து பாடிக்காட்டும்போது. பிள்ளைகளும் அவற்றை இலகுவாகப் புரிந்துகொள் கின்றனர். அதற்குப் பதிற்குறிகாட்டுவர். இந்தக் கவிதைத் தொகுப்பிலே பிள்ளைகள் பெரிதும் விரும்புகின்ற உறவுகளான அம்மா, அப்பா, செல்லப் பிராணிகள், பூச்சிகள், பறவைகள், விளையாட்டுகள் பறவைகள், இயற்கைக் கோலங்கள் என்றவாறு விடயங்கள் பிள்ளைகளின் பருவத்திற்கேற்ப விரிந்து செல்கின்றன.

பிள்ளைகள் பொதுவாக பாடல்களை இசை யோடு பாடி ஆடி மகிழ்வதை விரும்புவர். கவிதைகளைப் புனைவதில் இந்த நூலாசிரியர் அசைதலுக்கு ஏற்றவாறு ஓசைநயத்துடன் பாடல்களை வடிவமைத்துள்ளார். இப்பாடல்களைக் கற்பிக்கும் பெற்றோரும் ஆசிரியர் களும் இவற்றைக் கவனத்திற்கொண்டு செயற்படும் போது பிள்ளைளும் அவற்றை உண்மையிலே இரசிப்பர். இத்தகைய விடயங்கள் ஆசிரியர்களின் கவனத்திற் குள்ளாகும்போது பிள்ளைகளில் அறிவாற்றல் விருத்தி யும் செயற்றிறன்களும் வினையாற்றல்களும் உயர் மட்டத்தில் வெளிப்பட வாய்ப்புகள் உள்ளன இதனை ஆசிரியர் சிறப்பாகச் செய்துள்ளார். அனைத்துப் பாடல் களிலும் ஓசை நயமும் சொற் பிரயோகங்களும் சிறப்பாக வந்து விழுந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

"பந்தடிப்போமே... பந்தடிப்போமே...
சிறுவர் நாங்கள் ஒன்று சேர்ந்து
பந்தடிப்போமே...
அங்கும் இங்கும் மாறி மாறிப்
பந்தடிப்போமே..."

என்ற பாடல் விளையாட்டுப் பாடல்போல லயத்தோடு பந்தடிக்கத் தூண்டுவதாகக் காணப்படுகின்றது. கடல் அன்னை, பனைமரம், இயற்கை அன்னை மற்றும் கொள்ளை இன்பம் ஆகிய பாடல்கள் பாடி ஆடுவதற்கு ஏற்றாற்போல தாளக் கட்டுகள் குறிப்பிடப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மிகச் சிறப்பாகப் பொருந்தியுள்ளதோடு சிறுவர் பாடலாக்கத்தில் புதிய பரிணாமமாகவும் காணப்படுகின்றது.

பிள்ளைப் பருவத்திலே அவர்களில் விதைக்கப்பட வேண்டிய ஒழுக்க விழுமியங்கள் மற்றும் குணவியல்புகளை விருத்தி செய்யும் வகையிலும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன குறிப்பாக இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், உயிர்கள்மீது அன்பு செலுத்துதல் பிறருக்கு உதவுதல் ஏனையோரை மதித்தல் முதலான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பாடல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

பசுவே பசுவே... என்ற பாடலில் வரும்,

"கன்று குடித்து
முடித்த பின்பு
எனக்கும் கொஞ்சப்
பால் தருவாய்"

ஆகிய வரிகளிலும் பூனைக்குட்டி என்ற பாடலில் வரும்,

"அணிலைக் கண்டு வேலியோரம்
பதுங்குவதேன் பூனையாரே
பாவம் அதைப் பிடிக்காதே
பால் தருவேன் பூனையாரே"

என்ற அடிகளிலும் கூண்டுக் கிளியே பறந்துபோ என்ற பாடலில் வரும்,

"கூட்டம் உன்னை அழைக்குது
கூட்டிச் செல்லத் துடிக்குது
பாட்டுப்பாடி வானிலே
பறந்து பறந்து பறந்துபோ"

என்ற பாடல் வரிகளிலும் இயல்பாகவே - இயற்கையாகவே சிறு வயதிலிருந்து உயிர் நேயத்தைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் வெளிப்படுகின்றது.

இந்த நூற்றாண்டிலே வாழ்கின்ற பிள்ளைகள் பல நவீன புத்தாக்கதாக்கமுள்ள விடயங்களை அறிய வேண்டியவராகின்றனர். நவீன தொழில்நுட்பங்களில் அவர்களுடைய கவனமும் ஈடுபாடும் அதிகரித்து வருகின்றன. இன்றைய வாழ்கைச் சூழமைவில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்கள் சார்ந்த எண்ணக்கருக்களையும் பிள்ளைகளின் பருவங்களுக்கேற்ற வகையில் அறிமுகம் செய்வது எமது பொறுப்பாகும். இந்த நூலின் ஆசிரியர் இவ்வாறான விடயங்களிலும் கவனஞ் செலுத்திப் பாடல்களை ஆக்கியிருப்பின் இந்த நூலின் மகத்துவம் இன்னும் அதிகமாக இருந்திருக்கும் என்பது எமது அபிப்பிராயமாகும். இலக்கிய மரபிலே சிறுவர் இலக்கியங்கள் மிகவும் செல்வாக்கு மிகுந்தவை. இவை பிள்ளைகளின் சமகால மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கு வளமூட்டு பவை. எனினும், அவற்றைக் கவிதைகள் வாயிலாக உறுதி செய்வதும் கடினமான விடயமாகும். இருந்தாலும் இத்தகைய நோக்கங்களை வெற்றி கொள்வது சிறுவர் இலக்கியங்களை ஆக்குவோரின் இன்றியமையாத பொறுப்பும் கடமையுமாகும் அத்தகைய நோக்கிலே திரு பௌநந்தி அவர்கள் வெற்றி கண்டுள்ளார் என்பது எமது அவதானமாகும். •

# தன்னை அறிதல்

அகத்தின் யுத்தம்
மௌனத்தின் சத்தம்
நாவில் எத்தனிக்கும் திருத்தம்
வார்த்தையில் திணிக்கும் அர்த்தம்.

எவனை தோன்றுகிறது
ஏது சுற்றி நடக்கிறது
ஐயத்தின் கேள்வி
ஓர் உயிரணுவின்
அறிகுறியை தேடியது.

ஆவியாகி வெளியேற்றப்பட்டான்
பின் தொடரும் ஆன்மா அறியப்பட்டான்
வெப்பநிலையின் நீராவி
வெப்பமானியை சூடாக்கி
விஞ்ஞானத்திடம் துகளாக்கியே
ஞானி ஆனான்.

கடக்கப்பட்ட பயணத்தில்
கண்ணில் காட்சியளித்தவர்களால்,
சந்தித்ததும் சிந்தித்ததும்
உள்மனதின் உலக போர்
வெடிப்பதற்கு அழுத்தம்
தொடுக்கப்படுகின்றது.

பொறாமையில் தீயும் குணம்
போட்டியில் மாறும் மனம்
கர்வத்தில் காட்டிய பணம்
தடுமாறும் இடங்கள்
தத்தளிக்கும் தடங்கள்
இவைகளை எல்லைமீறி
மைனஸ் டிகிரிக்கு சென்றான்.

குறுக்கறுக்கப்பட்ட
வெவ்வேறு கோணங்கள்
நாணத்தின் எண்ணங்கள்
அவமானமாகி முற்பட்ட பரிமாணங்கள்,
அவனுக்குள் பல வேஷங்கள் போட்டதை
கண்டு கொண்ட கணங்கள்,
வேரருக்கும் நொடிகளின் தூண்டல்
பரீட்சையின் தடை தாண்டல்.

உலக ஆசையின்
தண்டவாளங்கள்
தடையற்ற நிலையில்
கற்றுக் கொண்டதை
பற்றிக் கொள்ளும்
ஒரு வழிப்பாதை
தடையிடப்பட்டு
தலையீடாக
தலையெழுத்தின் சாட்சியாகியது.

- மபாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ந்தது எது ?

மரம் விழுந்தது
உரமானது இலை
விதையானது கனி
கதவானது நடுமரம்
விறகானது கிளை
மருந்தானது பட்டை

மனிதன் விழுந்தான்
வெறும் பிணமானான்

ஆனாலும்
பாடையானது ஓலை
மாலையானது பூ
படையலானது கனி
பெட்டியானது நடுமரம்
விறகானது கிளை
இதில் உயர்ந்தது எது
மரமா ? மனிதனா ?

## இயற்கையின் ஒப்பந்தம்


எழுந்தது கடல்நீர்
விழுந்தது மழைத்துளி
நனைந்தது வயல்நிலம்
விளைந்தது நெற்கதிர்

முகிழ்ந்தது மொட்டு
நுகர்ந்தது வண்டு
கொடுத்தது தேன்
எடுத்தது மகரந்தம்
கிடைத்தது கனி

எழுந்தது மலை
ஒடுங்கியது முகில்
தரைதொட்டது நீர்வீழ்ச்சி
ஓடியது நதி
சேர்த்துக்கொண்டது கடல்

ஆதாரம் கொடுத்தது நிலம்
ஆகாரம் கொடுத்தது ஆதவன்
நீர்கொடுத்தது மழை
ஒட்சிசனோடு கனியையும்
மழையையும் திரும்பக் கொடுத்தது மரம்

காட்டு மரங்களை வெட்டினான்
கடலில் கழிவைக் கொட்டினான்
வளியில் நச்சைப் பரப்பினான்
நிலத்தடி நீரையும் உறிஞ்சினான்
மண் அணைத்துக்கொண்டது மனிதனை



## ஆடம்பரமான ஆலயங்களால் தூரமான கடவுள்கள்

கோபுரங்கள் வானுயர்ந்தது
வேலும் அங்கே தங்கமானது
இரும்புக் கதவுகள் சில்வரானது
ஆகம விதிகளெல்லாம் ஓரமானது

தேரில் ஏறினார் கடவுள்
காரில் ஏறினார் ஆன்மீகவாதி
சினிமாப்பாட்டோடு வீதியில்
நிதி வசூலித்தார் கடவுள்
ஆன்மீகத் தலைவரின் ஆசனத்துக்கே
நகர்ந்தது ஒலிவாங்கி

ஊருக்கொரு கோவில்
ஊர்கூடித் தேரிழுத்தது
தெருவுக்கொரு கோவில்
சமூகத்தை துண்டாடி
இயந்திரங்கள் தேரிழுத்தன

மணியடிக்க ஆளின்றி
மின்சார மேளதாளம்
மணியோடு இசைத்தது
ஒலிபெருக்கி ஓலமிட்டு
ஓடிப்போன கடவுளை அழைத்தது

பணமுள்ளவன் கடவுளை ஆண்டான்
ஏழை ஏனோ எட்டியே நின்றான்
ஆடம்பர ஆலயங்களால்
தூரம் போயின கடவுள்கள்

**- கந்தரமடம் அ.அஜந்தன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெல்கன் பெர்னான்டோ

# தூண்டில்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



காலை மடக்கி முன்னால ஒண்டக்குடுத்து ஒத்த செருப்பு அந்தரத்தில் ஊசலாட ஜன்னலில் ஒய்யாரமா சாஞ்சு கொண்டு வெளிய ஏதும் புதினங்கள் இல்லையா? என இயற்கையை விசாரிக்கிறான் சுகந்தன்.

போற பேக் விரிப்புக்கு மேல மாட்டுத்தாள மடக்கி வச்சு அதுக்குமேல சப்பாணி கட்டி ஒத்த காலமட்டும் தூக்கி கல்லா பெட்டிக்குள்ள காச வைக்கிறதும் எடுக்கிறதும் எதுகை மோனையா செஞ்சு கொண்டிருக்கிறான் பொடியன். சுண்டம்பது வாங்க! சுண்டம்பது வாங்க! என்ற சத்தம் சுண்டி இழுக்க ஒரு சுருள் தா தம்பி எண்டு காச நீட்டுனவனுக்கு அதிர்ச்சி!

கண்முன்னே வசந்தன்.. ஆறு மாச கோஸ் ஒன்டுக்கு கொழும்பு போனவன் ஊருக்கு வாரத்துக் குள்ள இங்க எல்லாம் மாறிப்போயிற்று!

என்னடா இங்க நிக்கிறா?

இல்ல மச்சான் ஆளில்லை என்டாங்க அதான் வந்தன்!

லூசாடா! அதுக்கு நாவப்பழம் விக்கிறதா?

என்ன பண்ண சொல்லுறா!

செலவில்லாம வருமானம் தாரது இதுதான்! அதான் இறங்கிட்டன்!

அடேய் அதுக்கு இப்பிடியா ரோட்ல நிப்பா?

என்ன பண்ண சொல்லுறா வீட்ட பாக்கணுமே!

சரிடா. இருந்தாலும்..!! ம்.. ம்.. எண்ணமோபண்ணு!

வசந்தனும், சுகந்தனும் பள்ளிகூடகாலத்துல இருந்து சினேகிதர்கள், மூனு வயசில இருந்து நகமும் சதையுமா திரிஞ்ச பயலுக ராட்டையம்மா ராட்டையில தொடங்கி ஆபியம் மணியாபியம் பாஞ்சு மூத்த பிள்ளைக்கு முடிசுருட்டி மூக்கறுத்துப் போட்டு (கொக்கோ விளையாட்டு) சந்திக்கு சந்தி அமுக்குடப்பா (கபடி) விளையாடுன கூட்டம், ஏரியாவில காசு பொத்தி, கையான் அடிச்சு விளையாடுறது எல்லாம் ரெண்டு பேருக்கும் கைவந்த கலை!

மரக்குரங்கு விளையாடும் போது மண்டை உடைச்சிட்டு பள்ளிகூடம் போகாம இருக்க மாஸ்டர் பிளான் போட்டதால இண்டைக்கு ஒருத்தன் போற பேக்குக்கு மேல கெசியரா இருக்கிறது யாருக்கு தெரியுமோ இல்லையோ சுகந்தனுக்கு நல்லா தெரியும்!

சரிடாப்பா.. பின்னேரம் சிலையடிக்கு வா பார்ப்போம் எண்டு சொல்லிப்போட்டு சுண்ட தூக்கு னான் வசந்தன்.

கால ஓட்டத்தில் கரைந்த நிமிடங்கள் கண்முன்னே வரிவரியாய் வந்து போக, வசந்தன நாமதான் கெடுத்திட்டோமோ? என்ற கேள்வி மட்டும் தொங்கி கொண்டு இருக்க செருப்பு மாதிரி தொக்கு நிக்கிது! பயணச் சிட்டைகள் எந்திரமயமானதைத் தவிர எந்த மாற்றமும் தென்படாத இந்த நாட்டுல மனுசன் தலையெழுத்து மட்டும் படக்குனு மாறுதே! என்றபடி பேசாலைக்கு டிக்கெட் ஒன்னு வாங்கி பொக்கட்டுக் குள்ள சொருகிட்டு வாய நாவலாக்க தொடங்கினான்.

பக்கத்துல செகத்த வாயோட போட்டிக்கு உக்காந்தாக ஜாபிரா உம்மா! ஓலகத்துலயே போயிலைய போச்சியில பொடியாக்கி வச்சிருக்க ஒரே ஆளு! செய் யிறது கருவாட்டு யாவாரம் எண்டாலும் சுயகௌரவம் கொண்ட றோசக்காறி! எவ்வளவு பெரிய அரசியல் வாதியா இருந்தாலும் மரியாதை குடுத்துத்தான் மரியாதைய வாங்கணும். அவுக முன்னால யாரும் குரல உசத்தி பேசுனாலும் கிழிச்சு உப்புத்தடவிப்போடுவா! இந்த அம்மா கையால மீன் மட்டும் இல்ல மனிதர்களும் உப்புக் கருவாடா ஆக்கப்பட்டுள்ளார்கள், என்னதான் இருந்தாலும் சுத்து வட்டாரத்துக்கு தெரியும் ஜாபிரா யாரு எண்டு! எருக்கலம்பிட்டி ராவுத்தர் காக்காவின் ஆஸ்தான தொழிலாளி, மன்னார் மாவட்டத்தில மால் கயிறு விக்கிறவன்ல இருந்து இறால் கமிசன் வாங்கிறவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைக்கும் உம்மாவுக்குத் தெரியாத ஆளே கிடையாது. ராவுத்தர் காக்கா இண்டைக்கு ஊருக்குள்ள பெரிய முதலாளியா இருக்காரு எண்டால் அதுக்கு காரணம் ஜாபிரா உம்மாதான்! என்னதான் பாக்க கரடுமுரடான ஆளா இருந்தாலும் நியாயமான ஆளு! தொழில் செய்யுறதுல அவ்வளவு நேர்த்தி! அடுத்தவன் காசுக்கு ஆசப்பட்டது கிடையாது, யாராச்சும் உதவி எண்டு வந்தா பஸ்சுக்கு வச்சிருக்க காசையும் குடுத்துப்போட்டு நடந்து வந்திடும் இந்த உம்மா! ஒரு பாமரனின் மனச்சாட்சி எப்பிடி வேலை செய்யனும் என்பதற்கு ஜாபிரா உம்மா ஒரு நிகழ்கால சாட்சி!

வழக்கமா போற எருக்கலம்பிட்டி பஸ்சு இண்டைக்கு பிரேக்டவுனாம் அதான் உம்மா பேசாலை பஸ்சுல ஏறிடுச்சு! ஏறுனதுல இருந்து தம்பி எச்சி துப்பனும் ஜன்னல கொஞ்சம் விடு, எண்டு சொல்லிப்போட்டு படங்கு சுத்தினமாதிரி கசங்கி கிடந்த வெத்திலைய எடுத்து நடுவிரலால சுண்ணாம்ப வழிச்சு வெத்திலைய வெள்ளையாக்கிப் போட்டு போயிலைய வச்சு சுருட்டி வாயில போட்டுக்கொண்டாள். பாட்டி புகையிலை போடுற அழக பாத்தா புலத்சிங்களவே புகை தள்ளும்! அந்த வட்டாரத்துல வெத்தில போடுறதுல பிளச்டி முடிச்ச ஒரே ஆளு நம்ம ஜாபிரா உம்மாதான்!

யாருப்பா தாசன் மகனா இது!

ஓம் பாட்டி எங்க போறிங்க?

எருக்கலம்பிட்டி ராவுத்தர் வீட்டுக்கு போறம்பா!

ஓ சரி சரி!

அப்பாவ பின்னேரம் வீட்டுக்கு வரச் சொல் லுப்பா கொஞ்சம் சிப்பம் கட்டுற வேலை கெடக்கு!

சரி நான் சொல்லுறன்..

மாறி மாறி ரெண்டுபேரும் வாய நாவலாவும் செங்கலாவும் மாத்திக்கொண்டு இருக்க சீரான வேகத்தில நகருது அந்த பேருந்து. பாட்டியின் வெத்தில பெட்டிக்கும் பஸ்சில பாட்டு பெட்டிக்கும் தான் இப்போ சண்டை.

குமருகள் டியூசன் போய்வார நேரம் ஒத்த சீட்ல இருந்தாத்தான் யாராவது ஒரு குட்டி பக்கத்துல வந்து உக்காரும் நமக்கும் பொழுது போகும்னு நினைச்சா! இந்த கிழடு வெத்திலய சப்பிக்கொண்டு பக்கத்தில இருந்து சாவடிக்குதேனு முணுமுணுத்தான், சுகந்தன், கால ஓட்டமும் பேருந்து ஓட்டமும் சம இடைவெளியில் நகர தென்றலும் வேர்வையும் பேரூந்திற்குள் போராட்டம் நடத்துது.

செபஸ்டியார் கோயிலடிய தாண்டுறதுக்குள்ள ரைவருக்கு கை அரிக்கத் தொடங்கிற்று. லோமியா இல்லாதவன் வீடிய தேடின கதையா துலாவி தடவி பாட்டுப் பெட்டிய கண்டுபிடிச்சு ஒருமாதிரியா ஒன் பண்ணிட்டாரு!

ரங்குப்பெட்டிய தரைல இழுத்தா வருமே ஒரு இரைச்சல் அதோட வந்து விழுந்தது வாச்மேன் வடிவேலு படத்தில இருந்து கன்னத்தில் கன்னம் வைக்க ஒத்துக்கோ... பாட்டு.

ஏரியாவின் தேசிய கீதம் அது, இந்த பாட்டு போடாத பஸ்சே இல்ல! சிடிபி தொடங்கி சின்ன வேன் வரைக்கும் இந்த பாட்டுக்கு அப்பிடி ஒரு மவுசு. சுருங்க சொல்லப்போனால் பேசாலை மன்னார் பஸ்காரங் களுக்கு அந்த பாட்டு பதிச்ச பென்டிரைவ்தான் கவர் மெண்ட் ரூட் பேமிட். எஸ்பிபியையும் சித்ராவையும் தெருத்தெருவா கொண்டு போய் சேர்த்தது தமிழ்நாட்டு மக்கள் கிடையாது! மன்னார் பேசாலை பஸ் டிரைவர்கள் தான் என்றால் அது மிகையில்ல!

கருவாடு வித்துப்போட்டு வாற ஜபிரா உம்மாவின் வெடுக்கு மணமும் டியூசன் விட்டு வாற பெண்டுகளின் செண்டு வாசமும் மேல் கம்பிய பிடிச்சுக்கொண்டு வாற மேசன் அந்தனியின் கமக்கட்டு நாத்தமும் ஒன்னா சேர்ந்து மூக்க முன்னூறு பாகைக்கு சூழல வைக்கிது. அந்த நறுமணக் காட்டுல, தலை மன்னார் ரூட்ல, ஷூப்பர் சத்தத்துக்கு ஊரு வந்தாலும் தெரியாது! யாரு கூப்பிட்டாலும் புரியாது!

என்னதான் பாட்டு சவ்வ கிழிச்சிக்கொண்டு கேட்டாலும் சுகந்தனுக்கு என்னவோ வசந்தன் நினைப்பு தண்ணியில் ஓடுற கடல்குதிர மாதிரி அல்லாடிக் கொண்டு இருக்கு!

.............................

தூண்டிலுக்கு மண்புழு கனக்க வேணும் அந்த போணிய எடுத்துக்கொண்டு வாடா எண்டு சொல்ல குசினிக்குள்ள போன வசந்தன் நெஸ்டமோல்ட வலிச்சு தின்னுபோட்டு டின்ன எடுத்துக்கொண்டு வந்தான். அலுப்பூசிக்கு மறுபடி உள்ள போனா சந்தேகம் வரும் எண்டு கழுசான்ல சிப்புக்கிட்ட குத்தின ஊசிய எடுத்து கழுத்த நிமித்தி கொக்கியாக்கிட்டு கிணத்துக் கட்டுக்கு அருகில கையால தோண்டி கொஞ்சம் சகதிய வெளிய போட்டான் சுகந்தன். பன்னீர் குடமுடைச்சு வெளியவந்து கிடக்கும் ஆட்டுக்குட்டி போல ஆறேழு மண்புழு சகதிக்குள்ள பிறளுது, அத பிறக்கிக் கொண்டு மச்சான் வரைக்க பழைய ரங்குக்குள்ள சங்கூசி நூல் கண்டு கிடக்கு, குசினி ஜன்னலால கைவிட்டு எடுத்திட்டு வாடா நான் கடக்கரைக்கு போறேன்னு சொல்லிட்டு காயப்போட்ட நாலு ஒடியல முறிச்சு பக்கெட்ல வச்சிட்டு பஞ்சாப்பறந்தான்.

நூல எடுத்துக் கொண்டு தன்பங்குக்கு நாலு ஒடியல பிறக்கிக் கொண்டு வசந்தனும் பறக்க வெளிக்கிட்டான். சுருக்கென்டு கொட்டிலுக்குள்ள வல முடிச்சு கொண்டிருந்த ராசம்மா கெழவி

அடேய் அரைக்காயல்ல கிடக்கிற கிழங்க எடுத்துக்கொண்டு போறீக வயித்தால போகப் போகுதுடா

எண்டு கத்த

சும்மா கெட கிழவி எங்களுக்கு எல்லாம் தெரியும் எண்டு சுதாகரிச்சு கொண்டு கடலுக்கு ஓடினான் சுகந்தன்.

அலுப்புனாத்தியில மண்புழுவ மாட்டிட்டு, மீன் பிடிச்சு போட கரையில பள்ளத்த தோண்டிட்டு தண்ணிய ஊற விட்டான் வசந்தன் பின்பு

மச்சான் சூசை மாமாட தெப்பம் கிடக்குது டா தள்ளிக்கொண்டு கொஞ்சம் விலங்க போவோமா?

வேணாண்டா அந்த ஆளுக்கு தெரிஞ்சுதென்டா இப்ப விட்டுருவாரு பிறகு குடிக்கிற நேரம் எல்லாம் கூப்பிட்டு வைச்சு அடிப்பாரு டா... விடு!

அட போடா நான் எடுக்கப்போறன் நீ வாரியா இல்லையா?

சரி வா போவம் என்னதான் பண்ணுறாரு எண்டு பாப்பம்!

நல்ல அந்தி பூத்துக்கொண்டு வாற நேரம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பதான் கணவா மைய கக்கின மாதிரி சூரியன் வானத்தில குங்குமத்த பாச்சிக்கொண்டு வருகுது. அங்க அங்க செவ்வல் மீன்கள் பாஞ்ச மாதிரி சில மேகங்களும் செம்மஞ்சள் உடுப்பு போட்டுக்கொண்டு நிக்குதுகள்!

நல்ல ரம்மியமான நேரம் தான் கடல் குளம் போல வெப்பலா கிடக்குது, அமைதியா இருக்கிறதால அது ஆபத்து இல்ல எண்டு நினைச்சானுகளோ தெரியல, ரெண்டுபேரும் தெப்பத்தை கடலில தள்ளிபோட்டு தண்டிய எடுத்துக்கொண்டு ஒரே பாச்சலல அதுல ஏறிட்டானுக!

கஞ்சிக்குள்ள மிதக்குற பச்ச மிளகாய் மாதிரி அரவமே இல்லாம தெப்பம் மிதந்து கொண்டு போக ஏதோ நூறு காத்துக்கடல பாத்த மன்டாடி மாதிரி தூண்டில லாவகமா தூக்கி வீசினான் வசந்தன்.

கெளுத்துக்குட்டி என்பது வசந்தனின் பரம்பரை பட்டப்பெயர், மாசி, பங்குனியில தூண்டில் தொழில் சிறப்பா நடக்கிற காலத்துல எல்லோரும் அறுக்குழா, பாரை, எண்டு நல்ல மீன்களை பிடிச்சுக்கொண்டு இருந் தாங்க ஆனா வசந்தனின் தாத்தா மட்டும் விலைபோகாத கெளுத்து மீன பிடிச்சு கருவாரு போட்டு ஊருக்க வித்துக் கொண்டு இருந்தாரு! அதுமட்டுமில்ல கெளுத்து மீனின் மீச மாதிரி அவரும் தன்னுடைய மீசை முடிய சுருட்டி ஒத்தையா நீட்டி வச்சுக்கொண்டு திரிவாரு, அன்ரன் என்கிற பேரில அந்த வட்டாரத்துல ஏகப்பட்ட பேர் இருக்கிறதால கெளுத்துக் குட்டி அன்ரன் என்று அடைமொழியோட இவர ஊர்ச்சனம் கூப்பிட்டுது! பேசாலையான் பேர் வைக்கிறத்துல கெட்டிக்காரன் எண்டு அடிக்கடி அக்கம்பக்கத்து ஊர் காரங்க பேசு வாங்க! நாங்களும் அத பெருமையா எடுத்துக்கிட்டோம் ஆனால் அது வஞ்சப் புகழ்ச்சி எண்டு இப்பதான் புரியுது.

புலிக்கு பிறந்தது பூனையாகுமா? என்பது போல அண்டைக்கு வசந்தன் களத்தில சிங்கமா நிண்டான்! தூண்டில லாவகமா வீசுறது மட்டுமில்ல அதே தோரணையோட நூல ஒத்த மூச்சில இழுத்துப் போட்டான் வசந்தன், பனங்காவ தின்ன பண்டி வந்தமாதிரி சுளையா மீன்கள் கொழுக்கியில வந்து மாட்டிருச்சு. எதையோ ஒன்ன சாதிச்ச நினைப்பில முகத்தில பூரிப்ப புதைச்சுக் கொண்டு மறுபடியும் தூண்டில் போட வெளிக்கிட்டான். எதிர்முனையில சுகந்தன் கொண்டுவந்த கேனுக்குள்ள கொஞ்சம் கடல் தண்ணிய அள்ளி, அதுக்குள்ள பிடிபடுகிற மீன்களை போட்டுக்கொண்டு இருந்தான்.

வாழ்வின் ஜனரஞ்சகங்களை அனுபவிக்க எப்போதும் தயார் நிலையில் இருப்பவர்கள் சிறுவர்களே! நாம் செய்ய நினைத்து தோற்றுப் போகும் நிமிடங்களை அவர்கள் சிறு சிறு சந்தோசங்களால் வென்று மெய்ப்பித்துக் காட்டுகிறார்கள்.

இயற்கை கடலோடு குழாவிக் கொண்டிருக்க நீரின் மடியில் தவழ்ந்து, மீனைப் பிடித்து விளையாடும் சிறார்களை கரையில் நின்று நாரைகள் நோட்டமிட நாளிகைகள் கடக்கிறது.

அடிச்ச வெயிலு மீன கருவாடா ஆக்கியிருக்கும் என்டு கடக்கரைக்கு வந்தவுக கரையோரங்களில் கிழிஞ்சல்களை பொறுக்கும் சிறுவர்களையும் அவர் களை நனைக்கும் அலைகளையும் கண்களாள் காட்சிப் பதிவாக்கம் செய்து கொண்டு இருக்கிறாக!

பொன்னிற வானத்தைப் பார்த்துப்போட்டு மேற்கால இந்தியா இருக்கிறதால யாரோ அங்கஇருந்து பெரிய டோச் அடிக்கிறாங்க எண்டு புளுகுக் கதைகளையும் அவுத்துவிட்டு அந்த மழலை சிறுசுகளின் கதைகளில் மனதைத் தொலைத்து விளையாடுறாக அந்தப் பாட்டி!

காணும் மச்சான் இருட்டுப்படுது கரையப் போவோம் வாடா என்ற சுகந்தனுக்கு அப்பத்தான் தெப்பம் வலிஞ்சு கொண்டு விலங்க போறது தெரியுது!

வசந்தன், வசந்தன் தெப்பம் போகுதுடா வாடா! வாடா!

இரு மச்சான் இந்த தூண்டில மட்டும் பிடிச்சிட்டு போவோம்!

டேய் பயமா இருக்கு காணும் வாடா!

இரு மச்சான்! இன்னும் ஒரு மீன்!

அடேய் தெப்பம் விலங்கால போகுதுடா எனக்கு பயமா இருக்குது வாடா!

மீன்பிடியில் சிலாகித்திருந்த வசந்தனுக்கு அப்போதுதான் தெரிகிறது தாம் ஆபத்துக்குள் போய்க் கொண்டிருக்கிறோம் என்பது! வேகவேகமாக தண்டியை வழிக்கிறான் வசந்தன்! சுகந்தனும் தன் பங்குக்கு இரு கைகளாலும் கடலை பின்னுக்குத் தள்ளி கட்டுமரத் தெப்பத்தை முன்னுக்கு விரட்டுகிறான். சான் ஏற முழம் சறுக்கின கதையா தெப்பம் முன்னுக்கு ஒருமுழமும் பின்னுக்கு மூன்று முழமும் போகுது! இயற்கைக்கு முன் னால மூன்று முழம் என்ன முப்பது முழம் வலிச்சாலும் காணாது என்பது தெரியாத அப்பாவி சிறுவர்கள் இயற்கையை எதிர்த்து நடுக்கடலில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணா! அண்ணா! தெப்பம் போகுது வாங்க! வாங்க!

ஆள் அரவம் இல்லாத தூரத்தில நிண்டு கத்தி என்ன பயன்! ஒரு நாரை கூட பக்கத்தில வரல! பூனையின் வாயில் பிடிப்பட்ட எலிய போல இயற்கையின் மடியில் அல்லாடித் தள்ளாடித் திணறிப் போய் நிக்கிறார்கள் இருவரும்! உயிர் பயத்துல ரெண்டுபேரும் கத்திக்கத்தி தொண்டைக் குழிகள் வறண்டு விடுகிறது. திடீரென சுகந்தனுக்கு வலிப்பு வந்து தடுமாறி வீழ்கிறான். வாயில நுரைதள்ளி ஒருபக்க கண் மேல போக கைகளை இழுத்துக் கொண்டு தெப்பத்தில் துடிக்கிறான். செய்வதறியாது திகைத்த வசந்தன் அருகில் இரும்பு எதுவும் இருக்கிறதா என தேடுகிறான், கொஞ்ச தூரத்தில சிகப்பு கொடியேத்தின நாட்டுக்கம்பு தெரியுது, அதுட அடியில பாரத்துக்கு இரும்பு வச்சிருப்பாங்க என்ற நம்பிக்கையில தெப்பத்தை நாட்டுக்கம்புக்கு நேரா திருப்புறான் இப்போ வலிப்பு வந்து கிடக்கிறது சுகந்தனின் பாரத்தையும் சேத்து தள்ளவேணும்! வேற வழியில்லை நாய்நீச்சல் போட்டு அதுக்கிட்ட போக லாம் எண்டு தண்ணிக்குள்ள பாயுறான்.

இடுப்பளவு தண்ணியில அடிச்ச நீச்சல் கடலுக்கு உதவுமா? பாஞ்ச உடனே ரெண்டு பாகம் ஆழத்துக்கு தண்ணிக்குள்ள போனவன் அடியின் ஆழத்தில் கால்களை ஊன்றிக் கொண்டு திணறலோட வேகமா மேல வந்தான். பனையில இருந்து விழுந்த வனை மாடு மிதிச்ச கதையா கடலுக்கு மேல வந்தவனின் மண்டையில மேல் மட்டத்தில இருந்த தெப்பம் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி!... மயங்கி விழுகிறான்...

சளீரென தாவக்கட்டைக்கும் தாடைக்கும் இடையில ஓங்கி ஒரு குத்து விழ படக்கென விழித்துக் கொள்கிறான் சுகந்தன், போட்ட பிரேக்ல பக்கத்தில இருந்தவனுக்கு தன்ற முழங்கை அடிப்பட்டது கூட தெரியாம ஜாபிரா உம்மா வெத்திலைய, போட்டுக் கொண்டு இருந்தாக!

ஏப்பா டைவர் மெதுவா ஓடுப்பா, மனுச மக்கள் நாள பின்ன பஸ்சில வந்து போறது இல்லையா! எண்டு பேசிக்கொண்டு நடுவிரலால சுண்ணாம்ப தடவி வாயில மேலும் பூசிக்கொண்டாள்.

ஏய் கிழவி பக்கத்துல ஆள் இருக்கிறது தெரியலையா? இந்த இடி இடிச்சுப் போட்டு ஒன்டுமே தெரியாத ஆள் மாதிரி வெத்தில போடுற! ச்..செய்..! மனுச மக்கள் பஸ்ல நிம்மதியா வரக்கூட முடியல!

தெரியாம அடிபட்டுட்டு கண்ணு! நம்ம தாசன் மகன் தானே நீயு... சரி இந்த பாட்டிய மன்னிக்க கூடாதா! என்று சுண்ணாம்புக் கையால சுகந்தன் கன்னத்தைக் கிள்ள, கைய எடு கிழவி எண்டு வெடுக்கென திரும்பிக்கொள்கிறான்.

கிழடுக்கு உக்கார இடம் கொடுத்ததே தப்பு, வெடுக்கு நாத்தத்தோட இருந்து கொண்டு வெத்திலய வேற போட்டுத் தொலைக்கிது, என்று முனுமுனுத்துக் கொண்டு ஜன்னலில் சாய்கிறான்.

பிரச்சினை காலத்தில இருந்து பேசாலைல கருவாட்டு யாவாரம் செய்யுறவுக இந்த ஜாபிரா பாட்டி. இது போல எத்தனையோ சிறுசுகளின், பெருசுகளின் கோபதாபங்களையும் வெறுப்பு பூத்த முகங்களையும் பார்த்தவுக, ஆனால் சுகந்தன் அப்பிடி சொன்னதும் கொஞ்சம் கண்கலங்கித்தான் போனாக!

ஜாபிரா உம்மா சுகந்தனின் அப்பாவுடன் நீண்டநாள் பழக்கம் கொண்டவுக ! பேசாலைக்கு வியாபாரத்துக்கு வந்தா கருவாட வகை பிரிக்கிறதுல இருந்து சிப்பம் கட்டுறது வரைக்கும் சுகந்தன் வீட்லதான் நடக்கும், அவனின் அம்மா போடும் அந்த இஞ்சி பிளேன்டிக்கும் கலிஸ் பேக்கரி அட்டப்பாணுக்கும் ஆசைப்பட்டுத்தான் அடிக்கடி பேசாலை வருவதாகவும் பொதுவெளியில சொல்லுவாக! உம்மா வீடு வந்து போறப்போ சுகந்தன் பெரும்பாலும் வீட்டில் நிற்பது கிடையாது, அதனால் அவரை தெரிந்திருக்க வாய்ப் பில்லை! இவ்வளவு ஏன் சுகந்த பிறந்தநேரத்தில அவனுக்கு குமஞ்சான் போட கமுதை விட்ட, ஆணை விட்ட எண்டு தேடி தேடி தெருத்தெருவா பொறுக்கி கொணர்ந்து குடுத்ததும் இந்த ஜாபிரா உம்மா தான்!

அன்றொருநாள் வழக்கம் போல கடக்கரைக்கு காயப்போட்ட கருவாட எடுக்க போனவுக கடலில் தெப்பம் ஒன்று வலிஞ்சு போறத பார்த்திட்டாக!

யெப்பா தெப்பம் வலிஞ்சு போகுதைய்யா!

யாரோ ஒரு ஆளு விழுந்து கிடைக்குதப்பா...

ஐயோ யாராவது வாங்க!

தெப்பம் விலங்க போகுது!

ஓடியாங்க! இது என்னடா வாப்பா சோதனையா போச்சுது!

டேய் யாராவது வாங்கடா!

கரகரத்த குரலில் கத்துகிறாள்...

யா அல்லா.. எப்பிடியாவது காப்பாத்துப்பா... வெற்றி மாதவே... இறங்கி வாம்மா... காப்பாத்தும்மா...

பதற்றத்தில் அங்கும் இங்கும் அலைக்கிறாள்!

அக்கம் பக்கத்தில உள்ள ஆக்கள கூப்பிட்டா யாரும் வரல! கண்ணுக்கு எட்டுற தூரத்துக்கு கடல்ல ஒரு போட் கூட வரல! தெப்பத்துல கிடக்கிறது பெரிய ஆள் இல்லை! சின்ன பொடியன்தான் என்பதை அறிந்து கொள்கிறாள். என்ன செய்வது என்று அறியாது குழிக்குள் மாட்டிய எறும்பு போல அங்கும் இங்கும் அலை மோதுகின்றாள். நடப்பதை எல்லாம் தூரத்தில் நின்று பாத்துக்கொண்டிருந்த தர்சன் கரைக்கு ஓடி வந்து என்ன பாட்டி என்ன செய்யலாம் என வினாவுகின்றான்.

கணவா பத்தை ஏத்திறதுக்காக அப்பத்தான் ராயப்பு அண்ணன் பிளாஸ்டிக் போட்ட கரையில கட்டிப்போட்டு நங்கூரத்தை பாய்ச்சிப் போட்டு தேத்தண்ணி குடிக்க போயிருந்தாரு!

ஜாபிரா உம்மா எதபத்தியும் யோசிக்கல! பிளாஸ்டிக் போட்டினை கடலுக்குள் தள்ளி ஒரே பாய்ச்சலில் படகுக்குள் குதித்தாள், தர்சனும் எஞ்சினை இயக்கத்தயாராகினான்.

கண்ணிமைக்கும் நொடிக்குள் தெப்பம் வலிந்து செல்லும் இடத்தை நெருங்கினார்கள் இருவரும், பக்கத்தில் போனபோதுதான் கடலுக்குள் இன்னொரு வன் மயங்கி கிடப்பது தெரியவந்தது! ரெண்டு பேரையும் தண்ணிக்குள் பாய்ந்து தூக்கினான் தர்சன். போட்டில் இருந்து கொண்டு இருவரையும் இழுத்து உள்ளே போட்டாள் ஜாபிரா உம்மா! அணியத்தில் இருந்த அருவா கத்தியை சுகந்தனின் கைக்குள்ள வைத்து பொத்தி பிடிக்கிறாள், பின்பு மயங்கி கிடந்த வசந்தனின் முகத்தில நல்ல தண்ணிய தெளிச்சு அவனை எழுப்பிவிடுகிறாள். அதற்குள் கரை வரவே, சம்பவத்தை பார்க்க ஓடிவந்தவர்கள் இருவரையும் காப்பாற்றி விடுகின்றனர்.

நடந்த சம்பவத்தை மனதுக்குள் மீட்டிப் பார்த்து விட்டு நாம காப்பாத்தின பையன் நம்மள பார்த்து இப்பிடி கேட்கிறானே! என கண்களின் ஓரம் வடிந்த நீரைத் துடைத்தாள்.

பஸ்ஸில் ஊர தெரிஞ்சிக்கிட்டன் உலகம் புரிஞ்சு கிட்டன் கண்மணி பாட்டு காதை கிழித்துக் கொண்டிருந்தது.

எருக்கலம்பிட்டி இறங்கிற ஆக்கள் வாங்க! என்றார் கொண்டக்டர்...

வழக்கமா ஆயிரத்தெட்டு கத சொல்லிக் கொண்டு இறங்கிற கிழவி இண்டைக்கு ஒன்றும் சொல்லாம மிச்ச சில்லறைய தா தம்பி எண்டு கேட்டு வாங்கிக் கொண்டு மௌனமாக இறங்கி நடைய கட்டுனாக!

நண்பனுடன் தெப்பத்தில் மீன் பிடிக்க போனத மட்டும் நினைக்க தெரிஞ்ச சுகந்தனுக்கு அதற்குப் பிறகு என்ன நடந்தது என்றும் தெரியாது!

அவனை காப்பாற்றியது அருகில் இருந்த ஜாபிரா உம்மா தான் என்பதும் தெரியாது!

யோசனையோடு ஊர் வந்து சேர்க்கிறான், இறங்கும் போது பேருந்து படிக்கட்டில் எழுதப் பட்டிருந்தது

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை"


•



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடும்பயணத்தில் பாதி வழியில் விடைபெற்ற பேராசிரியர் செ. யோகராசா

■ முருகபூபதி



கண்டியிலிருந்து கடந்த 07 ஆம் திகதி வியாழக்கிழமை என்னைத் தொடர்புகொண்ட எழுத்தாளர் நொயல் நடேசன், எங்கள் இலக்கிய நண்பர் பேராசிரியர் செ. யோகராசா மறைந்து விட்டார் என்ற அதிர்ச்சியான செய்தியைச் சொன்னார். உடனே கொழும்பிலிருக்கும் பேராசிரியை சித்திரலேகா மௌன குருவை தொடர்புகொண்டு அந்தச் செய்தியை ஆழ்ந்த கவலையுடன் உறுதிப்படுத்தினேன். இரண்டு நாட்களுக்கு முன்னர், மகரகமக மருத்துவமனைக்குச்சென்று அவரைப் பார்த்ததாகவும், கவலைக்கிடமான நிலையில் அவர் இருந்ததாகவும் சித்திரலேகா சொன்னார்.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இலக்கியப் பயணத்தில் இணைந்து வந்திருக்கும் எமது அருமை நண்பர் செ. யோகராசாவின் அருமைத் துணைவியார் விஜயதிலகிக்கும் ஏகபுதல்வி சுவஸ்திகாவுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் துயரத்திலும் பங்கெடுத்து இந்த அஞ்சலிக்குறிப்பினை எழுதுகின்றேன்.

இலங்கையில் வடமராட்சி பிரதேசம் பல இலக்கிய ஆளுமைகளையும் கல்விமான்களையும் பெற்றெடுத்த மண். 1949 ஆம் ஆண்டு, கரணவாய் கிராமத்தில் செல்லையா - இலட்சுமி தம்பதியரின் செல்வப்புதல்வனாக பிறந்திருக்கும் யோகராசா, தனது ஆரம்பக்கல்வியை கரணவாய் வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்தவர்.

பாடசாலைப் பருவத்திலேயே கவிதைகள் எழுதத்தொடங்கியிருக்கும் யோகராசா முதலில் கருணையோகன் என்ற புனைபெயரிலேயே இலக்கியப் பிரதிகள் எழுதினார். தமிழில் கலைமாணி பட்டத்தினையும் அதனையடுத்து இளந் தத்துவமாணி பட்டத்தினையும் பெற்றுக்கொண்டு தபால் நிலையத்தில் தனது தொழில் வாழ்வைத் தொடங்கினார். இவரைப்போன்று எனக்குத்தெரிந்த சில இலக்கியவாதிகள் அக்காலப் பகுதியில் தபால் நிலையங்களில் பணியாற்றி வந்தனர். (அமரர்) நாகேசு தருமலிங்கம், அ.யேசுராசா, ரத்ன சபாபதி அய்யர் முதலானோர் குறிப்பிடத்தகுந்தவர்கள். அவர்கள் இறுதிவரையில் தபால் நிலையங்களில்தான் பணியாற்றினர்.

கருணை யோகன் என்ற பெயரிலேயே யோகராசா முதலில் எனக்கு 1972 ஆம் ஆண்டளவில் அறிமுகமானார். அக்காலப்பகுதியில் நானும் இலக்கியப் பிரவேசம் செய்திருந்தமையால், இவரது எழுத்துக்களை மல்லிகையில் படித்துவிட்டு கொழும்பு சென்று அறிமுகமாகி நண்பனானேன். அக்காலப்பகுதியில் அவர் கொழும்பு -07 இல் நகரமண்டபத்திற்கு அருகிலிருந்த கறுவாக்காடு (Cinnamon Gardens) தபால் நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அன்றுமுதல் எனது நெஞ்சத்துக்கு நெருக்கமான இலக்கிய நண்பராக விளங்கியவர்.

தபாலகத்தில் பணியாற்றிய கருணை யோகன், தனது திசையை பின்னர் மாற்றிக்கொண்டார். கொழும்பிலும் அதன்பின்னர் மாஹோவிலும் தபால் நிலையங்களில் பணியாற்றிவிட்டு, பட்டதாரி ஆசிரியராக மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தில் புதிய பணியேற்றார். எந்தத்தொழிலில் இருந்தாலும் தேடலுக்கும் ஆய்வுக்குமாக தனது காலத்தை தீவிர இலக்கியம் நோக்கித் திருப்பியிருந்ததுடன், கல்வி தொடர்பாகவும் மேலதிக தகைமைகளை வளர்த்துக்கொள்வதில் பேரார்வம் காண்பித்தார்.

நான் 1987 இல் அவுஸ்திரேலியா வந்தபின்னரும் என்னுடன் கடிதத் தொடர்பிலிருந்தவர். எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள் நூலிலும் அவரது கடிதம் இடம்பெற்றுள்ளது.

ஒருதடவை வாகனவிபத்தொன்றில் அவரது அன்புத்துணைவியும் அருமைக்குழந்தையும் காயமடைகின்றனர். துணைவி கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் குழந்தை மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்படுகின்றனர். இருவரும் தெய்வாதீனமாக உயிர் தப்புகின்றனர். எனினும் மேலதிக சிகிச்சைகளுக்காக மேற்கிலும் கிழக்கிலும் அனுமதிக்கப்படுகின்றனர். குடும்பத்தலைவனான யோகராசா, ஊண் உறக்கமின்றி பஸ்ஸிலும் ரயிலிலும் பயணித்து இருவரையும் பராமரிக்கிறார். தனது பல்கலைக்கழக விரிவுரைப் பணிகளையும் கவனிக்கிறார். எழுதுகிறார். வாசிக்கிறார். விரிவுரைக்குத் தேவையான குறிப்புகளை பதிவு செய்கிறார்.

அவருக்கு அவரது குடும்பம் மாத்திரமல்ல, அவரது மாணவர்களும் முக்கியமானவர்கள். இத்தகைய நெருக்கடிக்கு மத்தியில் நிதானமாகப் பேசுகிறார். பதட்டமின்றி இயங்குகிறார். அந்த நிதானம் இயல்பிலேயே அவருக்குரிய குணாம்சம்! அதிர்ந்து பேசத்தெரியாத பண்புகளே அவரது பலம். எளிமையே அவரது வலிமை!

ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமன்றி புகலிட இலக்கிய உலகிலும் மிகுந்த கவனிப்புக்குள்ளான திறனாய்வாளர். அவரால் எழுதாமலும் வாசிக்காமலும் இருக்கவே முடியாது. அவருக்காக அல்ல, மற்றவர்களுக்காக எழுதிக்கொண்டும் வாசித்துக்கொண்டு மிருப்பவர். மாணவர்களுக்காகவும் இலக்கிய உலகிற்காகவும் தன்னை அவ்விதம் வடிவமைத்துக் கொண்டவர். கொவிட் பெருந்தொற்றுக்காலத்திலும் பல மெய்நிகர் அரங்குகளில் தோன்றி உரையாற்றியவர்.

*26-12-1994* ஆம் திகதி அவர் எனக்கு எழுதிய கடிதம் இன்றும் எனதுவசம் பத்திரமாக இருக்கிறது. "வேலைப்பளு, இலக்கியப்பளு, குடும்பப்பளு என இங்கு எமக்கே நேரமில்லாதபோது புலம்பெயர்ந்து; வாழ்வோருக்கு அந்த கம்பியூட்டர் உலக வாழ்வில் எங்கே நேரம்வரும்..?" என்ற கேள்வியுடன் இலங்கை இலக்கியப்புதினங்களையும் எழுதியிருந்தார்.

முக்கியமாக மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் பித்தன் கே. ஷா அவர்களின் மரணச்செய்தியையும், அவரது நூலொன்றை இரண்டு தமிழ்ப்பேசும் அரசியல்வாதிகள் (அமைச்சர்களாகவும் இருந்தவர்கள்) வெளியிட்டுத்தருவதாக பொய்வாக்குறுதி வழங்கி ஏமாற்றிய தகவலையும், இறுதியில், மல்லிகைப் பந்தல் வெளியீடாகவே அந்தநூல் வெளியான செய்தியையும், அதனைக்கூடப்பார்க்காமல் அந்த எழுத்தாளர் மறைந்துவிட்ட துயரத்தையும் பகிர்ந்திருந்தார். மட்டக்களப்பு வாசகர்வட்டம், அன்னாருக்காக நினைவஞ்சலிக்கூட்டம் நடத்திய செய்தியும் அந்தக்கடிதத்தில் இடம்பெற்றிருந்தது. எனக்கு அவர் எழுதும் கடிதங்களில் மட்டக்களப்பு புதினங்கள் இருக்கும்.

வடமராட்சியில் பிறந்து வளர்ந்து, கிழக்கிலங்கையில் காலூன்றியிருந்த இந்த இனிய இலக்கிய நண்பர், ஈழத்தின் அனைத்துப்பிரதேச தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்களிடம் மட்டுமன்றி சிங்கள எழுத்தாளர்களிடமும் நன்மதிப்பு பெற்றவர். ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த பின்னர் தோன்றிய புலம்பெயர் இலக்கியம் - புகலிட இலக்கியம் தொடர்பாகவும் திறனாய்வு செய்திருப்பவர்.

நான் இலங்கையிலில்லாத காலப்பகுதியில் எங்கள் நீர்கொழும்பூரில் நடந்த இலக்கியக் கருத்தரங்கில் தனது உரையின் தொடக்கத்தில் என்னை நினைவுபடுத்தியே பேசியிருக்கிறார். இவ்வாறு என்னுடன் அந்நியோன்னியமாக உறவாடியிருக்கும் அவருடைய குடும்பத்தில் *2005* ஆம் ஆண்டு நிகழ்ந்த அந்த கோரமான விபத்துச் சம்பவம் பற்றி அறிந்ததும் ஆறுதல் தெரிவித்து கடிதங்கள் எழுதியிருக்கின்றேன். இலங்கை சென்றவேளையில் கொழும்பு மருத்துவமனையில் அவரது அன்புத்துணைவியாரையும் பார்த்தேன். மினுவாங்கொடைக்கு அருகாமையில் உடுகம்பொலை கிராமத்தில் கொரஸ என்னும் இடத்தில் ஶ்ரீசுதர்மானந்த விஹாரையின் பிரதம குரு, தமிழ் அபிமானி வண. பண்டிதர் ரத்னவன்ஸ தேரோ அவர்கள் நோயுற்றிருப்பதாக அறிந்து அவரையும் பார்க்கச் சென்றபோது யோகராசாவும் உடன்வந்தார்.

மட்டக்களப்பிலிருந்து தன்னைப்பார்க்க ஒரு விரிவுரையாளர் வந்திருப்பதை அறிந்து அந்த பௌத்த துறவி நெகிழ்ந்துவிட்டார். அவரால் யோகராசாவையோ என்னையோ பார்க்கமுடியவில்லை. அவரது கண் பார்வை முற்றாக செயல் இழந்திருந்தது. அந்த நிலையிலும் அந்தத்துறவி எம்மை கிராமவாசிகள் மூலம் உபசரித்தார். இவ்வாறு எனது பயணங்களிலும் இணைந்திருந்தவர்தான் நண்பர் யோகராசா.

நாம் அவுஸ்திரேலியாவில் *1988* இல் ஆரம்பித்து இன்றுவரையில் தொடர்ந்து இயங்க வைத்துக் கொண்டிருக்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்ற தன்னார்வத்தொண்டு நிறுவனத்தின் மட்டக்களப்பு பிராந்திய மாணவர் கண்காணிப்பாளராகவும் யோகராசா சமூகத்தொண்டுணர்வோடு இணைந்திருந்தார்.

கிழக்கிலங்கையை *2004* இறுதியில் சுநாமி கடற்கோள் அநர்த்தம் கோரமாக பாதித்திருந்த வேளையில் மட்டக்களப்பு, செங்கலடி, கல்முனை, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு முதலான பிரதேசங்களுக்கெல்லாம் சென்றிருந்தேன். கிழக்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரவீந்திரநாத் துணைவேந்தராக அச்சமயம் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் முன்னிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இருபத்தியைந்து மாணவ மாணவியரை எமது இலங்கை மாணவர் கல்வி நிதியம் பொறுப்பெற்று தொடர்ச்சியாக நிதியுதவி வழங்கியது. இச்சந்தர்ப்பங் களிலும் நண்பர் யோகராசா எமக்கு தக்க ஆலோசனை களை வழங்கினார்.

இறுதியாக *2017* ஆம் ஆண்டும் *2019* ஆம் ஆண்டும் கிழக்கிலங்கைக்கு பயணித்தவேளையிலும் யோகராசா எம்முடன் மட்டக்களப்பு, கன்னன் குடா, கல்முனை, பெரியநீலாவணை முதலான பிரதேசங்களுக்கும் வந்தார். எம்மை தனது காரில் இங்கெல்லாம் அழைத்துச்சென்றவர்தான் எனது இலக்கிய நண்பர் செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்.

இறுதியாக கடந்த ஜூலை மாதம் இலங்கை சென்றவேளையில் அவரைத் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. நான் கிழக்கிற்கு சென்ற போது, அவர் யாழ்ப்பாணத்தில் நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005 - 2009 காலப்பகுதியில் எமது கல்வி நிதியத்தின் உதவிபெற்ற கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் பேராசிரியர் யோகராசாவை பெரிதும் மதித்துப்போற்றியதையும் அவதானித்திருக் கின்றேன். நாம் 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொழும்பில் நான்கு நாட்கள் நடத்திய சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலும் கலந்து கொண்டு கருத்தரங்கில் கட்டுரை சமர்ப்பித்திருக்கும் யோகராசா, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சிலரையும் தன்னுடன் அந்த மாநாட்டிற்கு அழைத்து வந்திருந்தார்.

மாணவர்களும் இலக்கியத்தின்பால் திரும்ப வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டிருந்தவர். இலக்கியமும் கல்வியும்தான் அவரது கண்கள். அதனால் இலக்கியவாதிகளும் மாணவரும் பெற்ற நன்மைகள் ஏராளம்.


உடுப்பிட்டி கல்வி வலயத்தின் சிறந்த ஆசிரியருக்கான விருது, கலாநிதி பட்ட ஆய்விற்காக பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஞாபகார்த்த விருது, இலங்கை இலக்கியப்பேரவையின் விருது, தேசிய சாகித்திய விருது, வடமாகாண சபை விருது, கலை வாருதி விருது உட்பட பல விருதுகளையும் பெற்றிருக்கும் நண்பர் யோகராசா, தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இலண்டன், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் முதலான நாடு களிலும் பல இலக்கியக் கருத்தரங்குகளில் பங்கு பற்றியிருப்பவர்.

எழுத்துலகில் தொடக்கத்தில் கவிதைகளும் சிறுகதைகளும் படைத்துக்கொண்டிருந்தவர், பின்னர் விமர்சகராகவும் திறனாய்வாளராகவுமே பரவலாக அறியப்பட்டார். அவரது அகதிகள் என்னும் சிறுகதை சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டில் அவருடைய வாழ்வையும் பணி களையும் பாராட்டி மட்டக்களப்பில் பெருவிழா எடுத்தனர். அத்தருணம் வெளியிடப்பட்ட, கருணை யோகம் சிறப்புமலரில் பல இலக்கிய ஆளுமைகளும் பேராசிரியர்களும் அவரது சிறப்பியல்புகளையும், இலக்கிய மற்றும் கல்விக்கான பங்களிப்புகள் குறித்தும் விரிவாக பதிவுசெய்துள்ளனர். அந்த மலர் ஆவண மாகவே திகழுகின்றது. பேராசிரியர் யோகராசா தொடர்ந்தும் ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரை யாற்றிக்கொண்டும் இலக்கியத்திறனாய்வு செய்து கொண்டுமிருந்தவர்.

அவருடை நீண்ட பயணத்தில் நானும் ஒரு பார்வையாளனாக இணைந்திருந்தேன். இன்று அவரில்லையே என்பது அறிந்து, அந்தத் துயரத்தைக் கடக்க முயற்சிக்கின்றேன். பேராசிரியர் யோகராசாவின் திடீர் மறைவினால் ஆழ்ந்த துயரத்திலிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர், மற்றும் இலக்கிய நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும் தொலை தூரத்திலிருந்து எனது இரங்கலைத் தெரிவிக்கின்றேன். இம்மாதம் 17 ஆம் திகதி அவரது 74 ஆவது பிறந்த தினம். அதனை தமது இனிய குடும்பத்தினருடன் இருந்து கொண்டாடமுடியாமலேயே திடீரென நிரந்தரமாக விடைபெற்றுவிட்டார். இனி எம்மிடம் எஞ்சியிருக்கப் போவது யோகராசாவின் நினைவுகளும், அவர் எழுதி விட்டுச்சென்ற திறனாய்வு இலக்கியப்பிரதிகளும்தான்.

●

# மார்கழிப் பூக்கள்



மலையடிவாரத்தில் மனம்போல
மஞ்சள் பூக்கள்

ஒத்தையடிப்பாதை இருபுறமும்
ஒய்யாரமாய் புள்ளிப்பூக்கள்

ஆற்றுக்கு போகும் வழி நெடுக
ஆளை மயக்கும் மல்லிகை
குளித்து திரும்புவோர் கொய்வார்கள்
ஆசை ஆசையாய்

படுத்துக் கிடக்கும் புல் வெளி நடுவில்
புன்னகைக்கும் ஊதா மலர்கள்

தூரத்தில் சேனைக்குள்
தலைத்தூக்கி சிரிக்கும் சூரியகாந்தி

வண்ண வண்ண பூவினம் கண்டு
வட்டமடிக்கும் வண்ணத்திப்பூச்சியாய்
குதூகலிக்கும் குழந்தை மனசு

ஆள் நடமாட்டமில்லாத காலத்திலும்
எவரும் கவனிக்காத போதும்
மார்கழிப் பனி சுமக்க
மகிழ மகிழ பூக்கின்றன
நிறம் தொலையா பூக்கள்

**- கனிவுமதி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023 ஆளுமைச் சிறப்பிதழ்கள்









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதித்தல்
சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான ஓர் அச்சுக்கூடம்

# மதி கலர்ஸ்

## MATHI COLOURS (PVT) LTD.

**BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE**

*உங்கள் எண்ணங்களின் வண்ணங்களாய்!....*

**PRINTERS & WEDDING CARDS**

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிறின்டிங் தேவைகளையும் உடனுக்குடன் தரமாகவும், நேர்த்தியாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...

*திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை*




NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
021 222 9285
mathicolours@gmail.com



CUSTOMER CARE
077 722 2259


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org